தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

ஏப்ரல் 2, 1997 தொகுதி 27
எண் 2.

Y 211 . 31 N97
N97.27.2
216650

வெளியீடு 30-4-98 Issued 30-4-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 2, 1997 – தொகுதி 27 – எண் 2

Wednesday the 2nd April, 1997 – Volume 27 – No. 2

...றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...e Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

1160/98

V 211, 3'N97
N97. 27.2
2116650

[Price Rs. 3.00

1160/98

**02-04-1997**

# உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | **வினாக்கள்-விடைகள்--** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 229-283 |
| 2. | **கவன ஈர்ப்பு--** | |
| | (அ) சீர்காழி தொகுதி நல்லூர் ஆரம்ப சுகாதார நிலைய செயல்பாடு | 284-286 |
| | (ஆ) சத்துணவு மையங்களுக்கு அரசு முன் மானியம் சற்று தாமதமாக வழங்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை | 286-291 |
| 3. | **அறிக்கை அளித்தல்--** | |
| | பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 291 |
| 4. | **மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி** | |
| | (அ) கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்<br>(ஆ) கோரிக்கை எண் 11 - மாவட்ட நிருவாகம் | 291-377 |
| | *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 292,293,296, 348,357-359 |
| | திரு. ஜி. நிஜாமுதீன் | 296-299 |
| | திரு. பா. துரைசாமி | 299-305 |
| | திரு. மா. இராமச்சந்திரன் | 305-314 |

| | பக்கங்கள் |
|---|---|
| 4. மானியக் கோரிக்கைகள், *1997-98,* விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| *திரு. டி. மணி | 314-321 |
| திரு. ஜி. பழனிசாமி | 322-329 |
| திரு. இரா. ஆவுடையப்பன் | 330-336 |
| *திரு. பி.என். வல்லரசு | 337-343 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 343-349 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 349-357 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 329,341-343<br>359-374 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 377 |


216650

D
Y 211,31 N97
N97, 27.2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 20, தாது - திருவள்ளுவர் ஆண்டு 2028

## 1997 ஏப்ரல் 2, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*" காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்*
*மீக்கூறும் மன்னன் நிலம் "*

*காட்சிக்கு எளிமையும், கடுஞ்சொல் கூறாத இனிய பண்பாடும் உடைய அரசைத்தான் உலகம் புகழும்.*

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா. எண் *401,* திரு. *இரா. பென்னார்டு,* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு *மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

**401--**

**மின் அழுத்தக் குறைவினை நீக்குதல்**

**923--*திரு. இரா. பென்னார்டு:

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதியில், மின் அழுத்தம் குறைவாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை நீக்க அரசு முயலுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதியில் மின்னழுத்தக் குறைவை சரி செய்ய, குளச்சல் பகுதியிலேயே ஒரு 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சலில், துணை மின் நிலையம் அமைக்க ஒப்புதல் வழங்கியதற்கு அரசுக்கும், துறை அமைச்சருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சம்சாரம் இல்லாவிட்டாலும், மின்சாரம் கட்டாயம் தேவை என்கின்ற காலக்கட்டத்தில் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் என்பது குறைந்த அளவு தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய இயலாத நிலையிலிருக்கிறது. ஆகவே 33/11 கிலோ வோல்ட் என்பதை மாற்றி 110/110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சம்சாரத்தோடும் இருக்கலாம்; 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் நிச்சயமாக போதும் என்ற மன நிறைவோடும் இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சலில் ஒரு துணை மின் நிலையம் வருவதைப் பாராட்டுகின்றேன். கடலோரக் கிராமங்கள் பூராவிலும், கன்னியாகுமரியிலிருந்து நீரோடி வரையிலும் கடலோரமாக வரக்கூடிய பகுதி நெடுகிலும் மின் அழுத்தம் குறைவாக உள்ளது. உப்புக் காற்றினால் மின் அழுத்தக் குறைவு ஏற்படுகிறது என்ற



காரணத்தைச் சொல்கிறார்கள். ஆகவே இந்த உப்புக் காற்று பிரச்சினையைத் தீர்க்க ஒரு மாற்று வழியைக் கண்டுபிடித்து, ஏதாவது செய்ய இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்புக் காற்றுக்கும், மின் அழுத்தக் குறைவுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. மணவாளக்குறிச்சியிலே உள்ள 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்துதான் அந்தப் பகுதிகளுக்கெல்லாம் மின்சாரம் வழங்கப்பட்டது. ஆனால் குளச்சல் பகுதியிலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பகுதிகளிலும் குறைவான மின் அழுத்தம் இருக்கின்றது என்ற புகார் அரசுக்கு வந்த காரணத்தால், குளச்சல் பகுதியிலே 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க அரசு முடிவெடுத்து, இந்த ஆண்டு அதற்கான பணிகளை மேற்கொள்ள இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. கோபால்.

**திரு. பா. கோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதியை ஒட்டியுள்ள கொளத்தூர் ஒன்றியம், நங்கவள்ளி பகுதியில் விவசாயிகளுக்கு மின்சார வாரியம் அறிவித்த நேரத்தில் மின்சாரம் கிடைக்காத காரணத்தால், விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்த அவையிலே தெரிவித்திருந்தபடி பகல் நேரத்திலே, 3 பிரிவாக 4 மணி நேரத்திற்கு மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, இப்போது சரி செய்யப்பட்டிருக்கிறது. முதலில் இதனை விளம்பரம் செய்யாமல் இருந்தார்கள். பிறகு இதுகுறித்து விளம்பரம் செய்யப்பட்டது. விவசாயிகளுக்கு எந்தெந்த நேரத்திலே மின்சாரம் கிடைக்கும் என்ற அறிவிப்புகள் உள்ளூர் பத்திரிகையிலே வெளியிடப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கேள்வி என்று வரும்போது, ஒவ்வொரு உறுப்பினரும், அவரவர்களுடைய பகுதியில்

மின் அழுத்தக் குறைவு இருப்பதால் துணை மின் நிலையம் அமைக்கப்படுமா என்றுதான் கேள்வி கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அடுத்த கேள்வி எண் 402 கூட அதைப் போலத்தான் வந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒவ்வொரு தொகுதியிலும் எந்தெந்தப் பகுதிகளிலே மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது என்பதை ஆராய்வதற்கு ஒரு குழுவை அமைத்து, எல்லா இடங்களையும் பரிசீலித்து, தேவையான இடங்களில் துணை மின் நிலையத்தை அமைக்க முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளிலே துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்பதைக் கண்டறிய ஒரு குழு அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், மின் வாரியமே அதனை ஆய்வு செய்து, தமிழ்நாட்டிலே குறைந்தபட்சம் 200 இடங்களில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது. ஆனால், அந்த 200 இடங்களிலும் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 2,000 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. எனவேதான், மின் வாரியம் ஒரே நேரத்தில் இதனை நிறைவேற்ற இயலாத நிலையில் இருக்கிறது. இருந்தாலும், ஆண்டொன்றுக்குக் குறைந்தது 40 இடங்களிலாவது துணை மின் நிலையங்களை அமைக்க வேண்டுமென்று திட்டம் தீட்டி, தற்போது அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம், சேர்வலாறு போன்ற இடங்களில் அனல் மின் நிலையங்கள் இருந்தாலும்கூட, பல இடங்களில் மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது. அதனை நிவர்த்தி செய்வதற்கு ஆய்வு செய்யப்படுமா என்பதையும், அந்தப் பகுதியிலே மின் இழப்பு--லைன் லாஸ்--அதிகமாக இருக்கிறது; அதனைச் சரி செய்ய அரசு தீவிர ஆலோசனை செய்து, ஆய்வுகளை மேற்கொண்டு, நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் அழுத்தக் குறைவு குறித்து தமிழ்நாடு முழுவதும் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. 200 இடங்களிலே துணை மின் நிலையங்கள் நிச்சயமாக அமைத்தே தீரவேண்டும். அப்பொழுதுதான், மின் அழுத்தக் குறைவினை முழுமையாக நிறைவு செய்ய முடியும். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதியையும் இந்த ஆண்டு எடுத்துக் கொள்வதற்கு முடியுமா என்பதை அரசு ஆய்வு செய்யும். அதைப்போலவே, 'லைன் லாஸ்' பற்றியும் குறிப்பிட்டார்கள். நான் நேற்றே இதுபற்றிச் சொல்லியிருக்கிறேன். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் மிகக் குறைந்த அளவிலே 'லைன் லாஸ்' இருக்கின்றது. அதாவது 17 சதவிகிதமாக இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதையும் குறைக்க வேண்டுமென்று அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். மேலும் 2 சதவிகிதம் குறைப்பதற்கான முயற்சிகள் மின் வாரியத்தாலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதியில் பட்டினம் கிராமத்தில் குறைந்த மின் அழுத்தம் இருப்பதால், ஒரே நேரத்தில் 9 மின் வட்டாரங்களில் 'காயல்' தீய்ந்து விட்டது. விவசாயிகளெல்லாம் வருத்தத்தோடு இருக்கிறார்கள். கிணற்றிலே தண்ணீர் இருக்கின்றது. ஆனால், மின்சாரம் 10 மணி நேரத்திற்குக்கூடச் சரியாக வருவதில்லை என்று வருத்தத்தோடு தெரிவிக்கிறார்கள். இந்த நிலையினைப் போக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர் 234 பேர் இருக்கிறார்கள். 200 இடங்களிலே துணை மின் நிலையங்கள் அமைத்தால்தான் இந்தக் குறையைப் போக்க முடியும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மின்சார வாரியத்திலே பணம் இருக்குமானால் ஒரே ஆண்டிலேகூட இந்தக் குறைபாடுகளைப் போக்க முடியும். சுமார் இரண்டாயிரம் கோடி ரூபாய் அளவிற்குத் திட்டமிடப்பட்டிருக்கின்ற காரணத்தினால், படிப்படியாகத்தான் இதனைச் செய்ய முடியும். அதுவரையில் இந்தக் குறை இருக்கத்தான் செய்யும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்

[1997 ஏப்ரல் 2

போல விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் 10 மணி நேரம் வழங்கப்படுகின்ற மின்சாரத்தினை, இரவிலே 6 மணி நேரமும், பகலிலே 4 மணி நேரமும் முறையாகக் கொடுப்பதற்கு மின் வாரியம் ஏற்பாடு செய்திருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையங்கள் அமைப்பதற்குக் கொள்கை ரீதியாக ஒப்புக்கொள்ளப்பட்டு, திட்டம் நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டு வருகின்ற பகுதிகளில் ஒன்றான திருப்பூர் பகுதியில் மூன்று துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் உடனடியாகத் தொடங்கப்பட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் வரையில் இடப் பிரச்சினை காரணமாக மின் நிலையம் அமைக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. இருந்தாலும், தற்போது வருவாய்த் துறை அதற்கான இடத்தினை அளிப்பதற்கு ஒப்புதல் அளித்ததுடன், இடத்தினையும் தந்திருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டில் ஒரு நிலையமாவது அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானலுக்கு வத்தலக்குண்டிலிருந்தும், தேனியிலிருந்தும் மலைப்பகுதி வழியாக மின்சாரம் கொண்டு வரப்படுவதால், அடிக்கடி பழுது ஏற்பட்டு, மின் தடை ஏற்படுகின்றது. கொடைக்கானல் ஒரு சுற்றுலா மையமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே துணை மின் நிலையம் ஒன்றினை இந்த ஆண்டு அமைத்திட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதுபற்றிப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே, எரிவாயு மூலம் மின் உற்பத்தி



1997 ஏப்ரல் 2]

செய்யும்பொருட்டு, புதிய மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. என்னுடைய தொகுதியில், களப்பாலில் அப்படிப்பட்டதொரு மின் நிலையம் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அப்பணி எப்பொழுது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணிகள் ஆரம்பக் கட்டத்திலேயேதான் இருந்து கொண்டிருக்கின்றன. பணிகள் தொடங்குவதற்கு இன்னும் ஓராண்டு காலம் ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் பேரூராட்சியில் விசைத்தறித் தொழில் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இங்கே மின் அழுத்தம் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே இருக்கிற விசைத்தறித் தொழிலாளர்கள், மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலே இருக்கிறார்கள். அவர்களுடைய நிலையைப் போக்க, ஒரு துணை மின் நிலையம் அங்கு அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினையைப் போக்குவதற்காக, ஒரு துணை மின் நிலையம் அங்கு அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், விசைத்தறி நெசவாளர்கள், குறைந்தது ½ எச்.பி.-யிலிருந்து, 3 எச்.பி. வரையிலேதான் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். 'த்ரீ ஃபேஸ்' கனெக்ஷன் இருக்கிற நேரத்திலே, விசைத்தறி நெசவாளர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது. 'சிங்கிள் ஃபேஸ்' வருகிற நேரத்திலேதான் அப்படிப்பட்ட பிரச்சினை இருக்கும். அது, ஜூன் மாதம் வரையிலேயும் தவிர்க்க முடியாதது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலேயும்

[1997 ஏப்ரல் 2

மின்னழுத்தம் மிகக் குறைவாக இருக்கிற இந்தக் காலக்கட்டத்தில், மின்னழுத்தம் என்றாலே, விவசாயிகளுக்கு மின்சாரத்தைக் குறைப்பது வாடிக்கையாக இருக்கிறபோது, தொழிற்சாலைகளுக்கு வழங்குகிற மின்சாரத்தை 10 சதவிகிதம் குறைத்து, விவசாயிகளுக்குக் கூடுதலாக மின்சாரம் வழங்குவதற்குரிய பரிசீலனை அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நீர்நிலைகளிலே, நீர் குறைந்திருக்கிற காரணத்தினாலும், நம்முடைய அனல் மின் நிலையங்களிலே உற்பத்தி, ஓரளவு குறைந்திருக்கிற காரணத்தினாலும்தான், ஜூன் வரையிலும் 10 மணி நேரம் மின்சாரம் வழங்குவது என்று முடிவெடுத்து, இந்த அரசு அறிவித்திருக்கிறது. அதுவும், ஏதோ இந்த அரசு வந்துதான் அவ்வாறு அறிவித்திருப்பதாக யாரும் நினைக்கக்கூடாது. ஒவ்வோராண்டும், ஏப்ரல், மே, ஜூன் திங்களில், விவசாயிகளுக்கு 10 மணி நேரம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஜூலை மாதம் முதல் தேதியிலிருந்து நிச்சயமாக, இந்தப் பிரச்சினை மாறி, மீண்டும் 14 மணி நேரம் மின்சாரம் கிடைக்கக்கூடிய வாய்ப்பு, தமிழக விவசாயிகளுக்குக் கிடைக்கும். எனவே, தொழிற்சாலைகளுக்கு 10 சதவிகிதம் மின்வெட்டு அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் இப்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொ. முருகேசன்.

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான காஞ்சிபுரத்திலுள்ள முசவாக்கம் கிராமத்தில், துணை மின் நிலையம் அமைப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு 40 மின் நிலையங்கள் ஏற்படுத்தப்படுமென்று சொல்லி இருக்கிறார்கள். அந்த 40-லே ஒன்றாக, முசவாக்கம் கிராமத்திலும் துணை மின் நிலையம் ஏற்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தி நிலையம் வருவதற்கும், துணை மின் நிலையம் அமைப்பதற்கும் சம்பந்தம் இல்லை. ஏற்கெனவே, எந்தெந்த இடங்களிலே, அதாவது 40 இடங்களிலே துணை மின் நிலையம் கொடுப்பது என்பது தீர்மானிக்கப்பட்டு, நடவடிக்கை



1997 ஏப்ரல் 2]

எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, முடிந்தால், அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. மோகனதாசன்.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பூம்புகார் தொகுதியில், காட்டுச்சேரி என்னுமிடத்தில், துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு, வேலை முடிந்து, 2 மாதத்திற்கு மேலாகிறது. இதுவரை இயக்கப்படவில்லை. அதனை விரைவாக இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக அரசு அதுபற்றிப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக டாக்டர் அ. மணி.

**டாக்டர் அ. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில், உளுந்தூர்பேட்டை துணை மின் நிலையம் இருந்தும்கூட, அந்தத் துணை மின் நிலையத்தில் உற்பத்தியாகிற மின்சாரம், வளர்ந்துவிட்ட அந்த நகருக்குப் போதுமானதாக இல்லை. அது சம்பந்தமாக, அந்தத் துறையைச் சார்ந்த பொறியாளர்களை அணுகிக் கேட்டபோது, அந்தத் துணை மின் நிலையத்திற்குக் கூடுதலாக டிரான்ஸ்ஃபார்மர்களை அமைத்தால்தான், அது போதுமான மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்று கூறினார்கள். எனவே, அரசு அதுசம்பந்தமாகப் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிரான்ஸ்ஃபார்மர்களைப் பொருத்திவிட்டால் மட்டும் போதாது. ஏனெனில், டிரான்ஸ்ஃபார்மர்களே, மின்சாரத்தை உற்பத்தி செய்வதில்லை. உற்பத்தியாகிற இடங்களிலேயிருந்து, துணை மின் நிலையத்திற்கு மின்சாரத்தைக் கொண்டுவந்து, டிரான்ஸ்ஃபார்மர்கள் மூலமாகத்தான் வழங்குகிறார்கள். மாண்புமிகு உறுப்பினருக்கு யாரோ தவறான தகவல் தந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தகவலைத் தந்தவர்கள், பொறியாளர்களாக இருக்கிறார்களா என்பது எனக்கு ஐயப்பாடாக இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய பிரச்சினை என்ன என்பதை ஆராய்ந்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 402, திரு. ப. மோகன் கந்தசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**402--**

### துணை மின் நிலையம் அமைத்தல்

*3218--**திரு. ப. மோகன் கந்தசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பல்லடம் - தாராபுரம் சாலையில் எலவந்தி (வடுகபாளையம்) 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 403, திரு. ஆர். மகேந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**403--**

### காட்டு நிலப்பகுதிக்குப் பட்டா வழங்குதல்

*4560--**திரு. ஆர். மகேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஏலகிரி மலைவாழ் மக்கள் பயிர் செய்துவரும் காட்டு நிலப்பகுதிக்குப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மலைக் கிராமங்களில் நில ஒப்படை செய்வதோ அல்லது முறைப்படுத்தவோ கூடாது என அரசு தடை விதித்துள்ளதால்



ஏலகிரி மலைப் பகுதியில் உள்ள காட்டு நிலங்களுக்கு ஒப்படை வழங்க தற்போது இயலாத நிலை உள்ளது.

முற்பகல் 9-45

**திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த அறிவிப்புக்கு நன்றி. வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலை, ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படுகிறது. அங்கே இருக்கிற மக்கள் சுமார் 40, 50 ஆண்டுகளாக அங்கே விவசாயம் செய்து வருகிறார்கள். அப்படி விவசாயம் செய்யப்படுகின்ற அந்த நிலங்களுக்காவது பட்டா வழங்குவதற்கு ஏற்ப, தடையாக உள்ள அந்தத் தடை ஆணையை அகற்றிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைக் கேட்ட மாண்புமிகு உறுப்பினரையும் அழைத்து, தேவைப்பட்டால் அந்த ஊரிலே இருக்கின்ற முக்கியமானவர்களையும் அழைத்து, இது குறித்து ஆய்வு செய்து ஒரு முடிவு எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினருக்குத் திருப்தி ஏற்பட்டிருக்கும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓடை புறம்போக்கு நிலங்களில் 20, 30 ஆண்டுகளுக்கு மேல் வசித்து வந்தாலும், ஏழை எளிய மக்களுக்குப் பட்டா வழங்கும் நிலை இப்போது இல்லை. மழைக் காலங்களில் இந்தப் பகுதிகள் பாதிக்கப்படும் என்பதுதான் அதற்குக் காரணம். ஆனால், கடந்த 20 ஆண்டுகளில் சுற்றுப்புறங்கள் மேம்படுத்தப்பட்டு காடுகள் வீடுகளாக மாறிய நிலை இப்போது உள்ளது. ஆகவே இந்த ஓடை புறம்போக்கு நிலங்களை மறு ஆய்வு செய்து பாதிக்கப்படாத நிலங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்குப் பட்டா வழங்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 1168, வருவாய்த் துறை,

நாள் 25-7-89-ல் மாநிலத்திலுள்ள அனைத்து மலைப் பகுதிகளிலும் மண்ணரிப்பு மற்றும் நிலச்சரிவு போன்ற இயற்கை இடர்பாடுகள் ஏற்படாமல் தடுத்து சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதும், காடுகளைப் பாதுகாப்பதும் தற்போது மிகவும் அவசியம் என்று அரசு கருதி அனைத்து மலைப் பகுதிகளிலும் விவசாயத்திற்கு ஒப்படை வழங்குவதற்கும் ஆக்கிரமிப்புகளை வரைமுறைப்படுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, ஏலகிரி மலை பகுதியிலுள்ள காட்டு நிலங்களுக்கு ஒப்படை வழங்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஓடைப் புறம்போக்கு இதில் வராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25-7-89-ல் மலைப் பிரதேசங்களில் நில ஒப்படைப்பு நிறுத்தி வைக்கப்படுகிறது என்று முதலில் அறிவிக்கப்பட்டது. அதனால் விவசாயிகளுக்கு நில ஒப்படைப்பு அந்த உத்தரவின் மூலம் நிறுத்தி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசாணை நிலை எண் 1205, நாள் 27-10-92-ல் மலைப் பிரதேசங்கள் குறித்து மீண்டும் ஒரு ஆணை வந்தது. அதன் மூலமாக சாதாரண மக்கள் ஒரு ½ சென்ட் நிலத்தில் வீடு கட்டுவதற்குக்கூட தடை உத்தரவு விதிக்கப்பட்டிருப்பதால் மலைப் பிரதேசங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து வீட்டு மனைகள் வழங்குவதில் இருக்கிற தடையையாவது நீக்க முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி குறித்து சிந்தித்ததற்குப் பிறகு ஆவன செய்வேன் என்கிற உறுதியை அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணியில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதாக கூறப்படும் பழைய கால கோட்டை அகழியில் வீடுகளை அமைத்து நீண்டகாலமாகக் குடியிருக்கும் ஏழை எளிய மக்களுக்காக மத்திய அரசிடம் தொடர்பு கொண்டு பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 404, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**404--**

### சாலைகள், மின்விளக்குகள் அமைத்தல்

*3592--**திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சென்னை, அயனாவரம் வெள்ளாளர் தெரு முதல் சந்து, அண்ணா தெரு பகுதிகளுக்கு சாலைகளை ஏற்படுத்தி மின் விளக்குகள் அமைக்க உடனடியாக அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை மாநகராட்சி அயனாவரம், வெள்ளாளர் தெரு சந்திப்பில், சாலை அமைப்பதற்கு, ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் மதிப்பீட்டிற்கும், அண்ணா தெரு மற்றும் பாரதியார் தெரு சாலைகளை அமைப்பதற்கு ரூபாய் ஐந்து இலட்சத்து நாற்பத்தி ஒன்றாயிரம் மதிப்பீட்டிற்குமாக, 20-12-1996 அன்று மாநகராட்சி மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 405, திரு. என். பாண்டுரங்கன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 2

**405--**

**ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தல்**

**6139*--**திரு. என். பாண்டுரங்கன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம். பெரணமல்லூர் ஒன்றியம், பெரிய கொழப்பலூர் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், பெரிய கொழப்பலூர் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. என். பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூர் ஒன்றியத்திலே, பெரிய கொழப்பலூர் ஊராட்சி என்பது மக்கள் தொகை அதிகமாக இருக்கக்கூடிய பகுதியாகும். இந்தப் பகுதியிலே, திரையரங்குகள், திருமண மண்டபங்கள், பல்வேறு வியாபார நிறுவனங்கள் மற்றும் நெசவுத் தொழில்களான பட்டு, கைத்தறி போன்றவைகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. அந்த ஊராட்சியானது தற்போது அதிக அளவு வருவாயினை ஈட்டித் தரக்கூடிய அளவிலே இயங்குகிறது. எனவே, மறுபரிசீலனை செய்து, பெரிய கொழப்பலூர் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தி அரசு அறிவிக்குமா என்பதனை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படித் தரம் உயர்த்துவது, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் என்று பிரிப்பது, மாற்றுவது போன்றவைகள் எல்லாம்



1997 ஏப்ரல் 2]

தடை செய்யப்பட்டிருந்தது உண்மைதான். அரசாணை 241ல் அது இருந்தது. ஆனால், 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி சட்டங்கள் திருத்தப்பட்ட பிறகு, அதன் அடிப்படையில், இப்படிப்பட்ட நிலைகள் வருமானால், நிர்வாகம் திறம்பட செயல்பட, தேர்தல் நடத்தப்பட்டு, நிர்வாகப் பொறுப்புக்கு மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று நிலை இருந்தது. தற்போது பொறுப்புக்கு மக்கள் பிரதிநிதிகள் வந்திருக்கின்ற காரணத்தால் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பினால் அதுபற்றி அரசு கவனிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 406, திரு. எஸ்.ஆர். சிவலிங்கம் மற்றும் திரு. இ. கணேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**406--**

**குச்சிக்கிழங்கிற்கு விலை நிர்ணயம் செய்தல்**

**2449*-**திரு. எஸ்.ஆர். சிவலிங்கம் :**

**திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விவசாயிகள் பயிரிடும் குச்சிக்கிழங்கிற்கு (மரவள்ளிக்கிழங்கு) விலை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மரவள்ளிக்கிழங்கிற்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்யும் பொருட்டு ஒரு உயர்மட்டக் குழுவை நியமிப்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். சிவலிங்கம் இருக்கையில் இல்லை. திரு. இ. கணேசன் இருக்கையில் இல்லை. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரவள்ளிக்கிழங்கினைப் பொறுத்தவரையில், சேலம் இராஜாஜி மாவட்டத்தில் இலட்சக்கணக்கான ஏக்கரிலே பயிரிடப்படுகின்றது.

அதன் மூலமாக இலட்சக்கணக்கான விவசாயிகள் பயனடைந்து கொண்டிருக்கின்றார்கள். கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக, விவசாயிகள் பயிரிடும் குச்சிக்கிழங்கிலே ஒருவிதமான பயங்கரமான நோய் வந்து, அந்தச் செடிகள் எல்லாம் இறந்துவிட்டக் காரணத்தினால், அந்தத் தொழிலே அழியக்கூடிய நிலையிருக்கின்றது. தற்போது சந்தியூர், ஆட்டயம்பட்டியில் இருக்கின்ற வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில், புதிதாக குச்சிக்கிழங்கிற்கு என்று ஒரு ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்கி விவசாயிகளின் நலனைக் காப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரவள்ளிக்கிழங்கிற்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயிக்க அரசு முன்வருமா என்ற அந்தக் கேள்விக்கு உயர்மட்டக் குழு ஒன்று அமைக்க அரசு பரிசீலனையில் இருக்கின்றது என்று நான் பதில் சொல்லியிருக்கின்றேன். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பிய அந்த வினாவினையொட்டி, சேலம் சந்தியூர், ஆட்டயம்பட்டியிலே கே.வி.கே. என்ற ஒரு ஆராய்ச்சி நிலையம் இருக்கின்றது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே அவர்கள் வேளாண்மை சம்பந்தப்பட்ட பயிர்களுக்கு, விவசாயிகள் சென்று அணுகுகின்றபோது தகுந்த ஆலோசனைகள் இப்போது வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள். இருப்பினும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கிற்கு என்று தனியாக ஒரு ஆராய்ச்சி நிலையம் அமைக்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, அவர்களும் அதனை அமைக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று இந்தத் துறைக்கு ஆலோசனை வழங்கியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் விளையும் மரவள்ளிக் கிழங்குகளை வேறு மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லும்போது செஸ் வரி விதிப்பதில்லை. ஆனால், தர்மபுரி, கன்னியாகுமரி ஆகிய



மாவட்டங்களில் விளையும் மரவள்ளிக்கிழங்குகளை வேறு மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லும்போது மட்டும் செஸ் வரி விதிக்கப்படுகிறது. இந்த வரியை நீக்கிட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனை நிலையங்களின் மூலம் பல்வேறு உணவுப் பொருட்களை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லும்போது அல்லது அங்கேயிருந்து பொருட்களை இங்கே எடுத்து வரும்போது குறைந்தபட்ச செஸ் வரி வசூலிக்கப்படுகிறது. இதிலே, அந்தக் குறிப்பிட்ட இரண்டு மாவட்டங்களிலே மட்டும்தான் வசூல் செய்கிறார்கள், மற்ற மாவட்டங்களிலிருந்து எடுத்துச் சென்றால் வசூல் செய்வதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது எனக்கு இப்போதுதான் தெரிய வருகிறது. அது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

மேலும், மரவள்ளிக்கிழங்கிலிருந்து ஸ்டார்ச் செய்யக் கூடியவர்களுக்கு தனியார் வியாபாரிகள் என்ன விலை நிர்ணயிக்கிறார்களோ, அதுவும் வடநாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்து அந்த வியாபாரிகள் தங்கி அவர்கள் என்ன விலை நிர்ணயம் செய்கிறார்களோ, அந்த விலைக்குத்தான் விற்பனை செய்யக்கூடிய நிலை ஒரு காலத்தில் கிழங்கு மாவு மில் நடத்தக் கூடியவர்களுக்கு இருந்தது. இதையெல்லாம் போக்க வேண்டும் என்பதற்காகத்தான் சேலத்திலே சாகோ சர்வ் என்று நிறுவப்பட்டது. அந்த சாகோ சர்விலே இப்போது மொத்த உறுப்பினர்கள் 801 பேர்கள் இருக்கிறார்கள். ஆரம்ப காலத்தில் உறுப்பினர்களின் பங்குத் தொகையாக ரூபாய் 7,62,000 இருந்தது. இன்றைக்கு அது வளர்ந்து ரூ. 396.99 இலட்சம் அளவுக்குப் பங்குத் தொகையாக மட்டும் இருக்கிறது. இதிலே, சென்ற ஆண்டு 20.58 இலட்சம் மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. இந்த ஆண்டு விற்பனையான மூட்டைகளினுடைய எண்ணிக்கை 21,15,000. மொத்தம் 1996-லிருந்து 1997 பிப்ரவரி முடிய டர்ன் ஓவர் ரூபாய் 169 கோடியே 71 இலட்சம். அதுவும், மார்ச் 1997 முடிய. இப்போது நாம் எதிர்பார்ப்பது 192 கோடி ரூபாய் டர்ன் ஓவர் வரும் என்று. இதையெல்லாம் நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், கிழங்குகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும். கிழங்கு மாவு மில் நடத்தக்கூடியவர்களுக்கு அந்த ஸ்டார்ச் விற்பனை செய்கிறபோது,

சாகோ செர்வ் மூலம் விற்பனை செய்கிறபோது நல்ல விலை கிடைக்கிறது. ஆகவேதான், இந்த அளவுக்கு விவசாயிகளுக்கு சேலம் சாகோ செர்வ் ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, ஆராய்ச்சிப் பண்ணை இந்த நிதி ஆண்டிலே அமைக்கப்படும் சாத்தியக்கூறு இருக்கிறது என்று தெரிவித்தார்கள். சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் மிக முக்கியப் பயிராக மரவள்ளிக்கிழங்கு பயிர் செய்யப்படுகிறது. ஆகையால், இந்த நிதி ஆண்டிலேயே இந்த ஆராய்ச்சிப் பண்ணையை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் மட்டுமல்ல, சேலம், திருநெல்வேலி-கட்டபொம்மன், வட ஆற்காடு-அம்பேத்கர், தென்னார்க்காடு-வள்ளலார், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் ஆகிய மாவட்டங்களிலும் மரவள்ளிக் கிழங்கை இப்போது அதிகமாகப் பயிரிடுகின்றார்கள். ஆகவேதான், இதற்கு ஒரு ஆராய்ச்சி நிலையத்தை, மரவள்ளிக்கிழங்குக்கு என்று தனியாகப் பல்கலைக் கழகத்தின் மூலமாக அமைக்க வேண்டும் என்பதற்குக் காரணம், அவைகளுக்கு நோய் புதிதாக வருகிறது, அதனால் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, நோயிலிருந்து அவைகளைக் காப்பாற்றுவதற்காக என்பதற்கு மட்டுமல்ல, இன்னும் கூடுதல் விளைச்சலைத் தரக்கூடிய வகையில் விவசாயிகளுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கவும், விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகளை நடத்துவதற்கும் 1997-ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்படும் என்றுதான் நிதிநிலை அறிக்கையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே ஒப்புதல் பெற்றுத் தொடங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 407, திரு. சி.டி. தண்டபாணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



**407--**

### பண்ணைத் தொழிலாளர்களின் பணி நிரந்தரம்

*4171--**திரு. சி.டி. தண்டபாணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பண்ணைத் தொழிலாளர்களின் பணி நிரந்தரமாக்குதல், ஊதிய உயர்வு கோரியது போன்றவை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து எடுத்திருக்கும் முடிவு என்ன?

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1991-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் 150 தினக்கூலிப் பணியாளர்களைத் தொகுப்பூதிய பணியாளர்களாகப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று ஆணையிடப்பட்டு, அதன் அடிப்படையில் 1996-வது ஆண்டில் 150 தினக்கூலிப் பணியாளர்களை தொகுப்பூதியப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.டி. தண்டபாணி, இருக்கையில் இல்லை. திரு. ஆ. நடராசன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 150 தினக்கூலி பணியாளர்களை நிரந்தரம் செய்வது என்பது எண்ணிக்கையில் மிகக் குறைவாக உள்ளது. அங்கே ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பல்லாண்டுகளாக, 10, 15 ஆண்டு காலமாக பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். அவர்களை ஒட்டு மொத்தமாக நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 2

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90-லே கழக ஆட்சி அமைந்த பிறகுதான், அதுவும் 1991-லே, நான் இந்தத் துறையின் அமைச்சராக இருந்தபோது, நானும், நம்முடைய முதல்வர் அவர்களும் கலந்து பேசி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் நடைபெறக்கூடிய பண்ணைகளில் நீண்ட நெடுங்காலமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய தினக்கூலிப் பணியாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் பரிசீலித்து, ஒப்புக்கொண்டோம். ஆனால் ஒரே நேரத்தில் 2,000 பேரையும் நிரந்தரம் ஆக்க வேண்டுமானால் அதற்குப் பல்கலைக்கழகத்தின் நிதிநிலை இடம் தராது. ஆகவே ஆண்டுக்கு ஆண்டு, இந்த அளவுக்காவது, நீண்ட காலமாக பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய பணியாளர்களை நிரந்தரமாக்கலாம் என்று இந்த அரசாங்கம் அன்று ஆணை பிறப்பித்தது. அந்த அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் 150 பணியாளர்கள் நிரந்தரமாக்கப்படுகின்றனர். இன்றுவரை 889 பேர் நிரந்தரப் பணியாளர்களாக ஆகியிருக்கின்றார்கள். இன்னும் 1,600 பணியாளர்கள் தற்காலிகமாக இருக்கிறார்கள். ஆகவே, இது பல்கலைக்கழகத்தின் நிதிநிலையைப் பொறுத்துத்தான் செய்ய முடியுமே தவிர ஒரே நேரத்தில் அனைவரையும் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நேரத்தில் அனைவரையும் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவது சாத்தியமில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆண்டுக்கு 500 பேர் என்ற அளவிலாவது அதை உயர்த்தி, பணி நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்தினுடைய நிதிநிலையைப் பொறுத்துத்தான் நாம் முடிவு செய்ய இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 408, திரு. இரா. ஆவுடையப்பன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 2]

**408--**

## அணைகள் செப்பனிட்டு தூர் எடுத்தல்

*2194--**திரு. இரா. ஆவுடையப்பன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அம்பாசமுத்திரம் தொகுதி, கடையம் ஒன்றியத்தில் உள்ள இராமநதி, கடனாநதி அணைகள் செப்பனிடப்பட்டு தூர் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நெல்லை மாவட்டத்திலுள்ள இராமநதி, கடனாநதி அணைகளில் உள்ள பழுதுகளைச் சரி செய்வதற்கும், கால்வாய்களை மராமத்து செய்வதற்கும், 1997-98-ஆம் நிதியாண்டில் உலக வங்கித் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் தொகுதி, கடையம் ஒன்றியத்தில் உள்ள இராமநதி, கடனாநதி அணைகள், கழக ஆட்சி நடைபெற்றபோது தலைவர் கலைஞர் அவர்களால் கட்டி முடிக்கப்பட்டன. அதற்குப் பின்பு 1992-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு, அந்த அணைகள் சீரமைக்கப்படாமல் தற்போது மணல் நிறைந்து, அங்கே நீர்க் கொள்ளளவில் குறைவு ஏற்பட்டிருக்கிறது. 1992-க்குப் பின்னால் அந்த அணைகள் சீரமைக்கப்படாமல் உள்ளன. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நெல்லை மாவட்டத்திற்கு வந்திருந்தபோது அந்த இரண்டு அணைகளையும் சுற்றிப்பார்த்து நிலைமைகளைக் கண்டறிந்து வந்தார்கள். அணைகளில் மணல் நிறைந்து, தூர் வாரப்படாமல் காணப்படுவதால், விவசாயிகள் இன்றையதினம் விவசாயம் செய்ய முடியாத நிலையில், பயிரிட முடியாத நிலையில் இருக்கின்றார்கள். இப்போது, கோடைக்காலத்தில் நீர்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். எனவே, அடுத்த கேள்வியைக் கேளுங்கள்.

[1997 ஏப்ரல் 2

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோடைகாலத்தில், நீர் இல்லாமல் இருக்கக்கூடிய அந்த அணைகளின் பணியை உடனடியாக நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன். அதேபோன்று அந்த அணையிலிருந்து வரக்கூடிய கால்வாய்களும் மணலால் நிரப்பப்பட்டு இருக்கின்றன. அதையும் தூர் வாரி தருவார்களா என அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல 1992 ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலுக்குப் பிறகு, பெரும் சேதத்திற்குள்ளாகி இருக்கிறது இந்த அணைகள். கடந்த 5 ஆண்டுக் காலமாக யாரும் திரும்பிப் பார்க்கவில்லை. கலைஞர் ஆட்சி உதயமான பிறகுதான் அதற்கு ஒரு வழி பிறந்து இருக்கிறது. அவர் குறிப்பிட்டதைப்போல, அந்த அணையிலே ஏற்பட்டு இருக்கிற பழுதுகளைச் சீர் செய்யவும், கால்வாய்களைச் சீரமைப்பதற்காகவும் கடனா நதிக்கு 52.6 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது; இராம நதிக்கு 74.27 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இராம நதியிலே மெயின் ஷட்டர் மண் மூடி போனதால் பக்கத்திலே இருக்கிற பாசனத்திற்கு தண்ணீர் வராமல் நின்று போய்விட்டது. கடந்த 5 ஆண்டுக்காலம் அந்த ஷட்டர் மண்ணுக்குள்ளேயே இருந்தது. நான் போய் பார்த்ததற்குப் பிறகுதான் அந்த ஷட்டரை எடுத்துவிட்டு வேறு ஷட்டர் போடுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, 10 லட்சம் ரூபாய் அதற்குத் தனியாக ஒதுக்கப்பட்டு டெண்டரும் விடப்பட்டு இருக்கிறது. எனவே, பணிகள் வேகமாக நடைபெறுவதற்கு அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்.

**திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் தொகுதியில் உள்ள ஆனைகுட்டம் நீர்த் தேக்கத்தில் நீர் நிரம்பியவுடன் உபரி நீரை வெளியேற்றக்கூடிய மதகுகள் பழுதடைந்து உள்ளது அரசுக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்திருந்தால், அதைச் செப்பனிட என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 2]

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, அரசினுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் செய்தியைக் கொண்டு வந்து இருக்கிறார். அத்தகைய நிலை இருக்குமானால் அதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. ஆசையன்.

**திரு. பெ. ஆசையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 45 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டு பழமைவாய்ந்த நிலையில் இருக்கிற வைகை அணையிலேகூட நீர்த்தேக்கத்திலே மணல் நிரம்பி, நீர்த்தேக்கம் கெட்டுப்போய் இருக்கிற நிலை இருக்கிறது. இந்த குறுகிய 8 மாத காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதே வைகை அணைக்கு வருகை தந்து, 3 முறை ஆய்வு செய்து வந்து இருக்கின்றார்கள். இந்தச் சூழ்நிலையில் அந்த வைகை நீர்த்தேக்கத்திலே தேங்கி இருக்கிற அந்த மணலை தூர் எடுத்துத்தர அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, எப்போதும் அணை கட்டுகிறபோது, வெள்ளத் தண்ணீரை அணையிலிருந்து வெளியிடுகிறபோது மணலும் சேர்ந்து போகிற வகையில்தான் பொறியாளர்கள் அதற்கு வேண்டிய திட்டத்தை அமைக்கிறார்கள். மணல் சேருவது என்பது மிகக் குறைவு, பொதுவாக எல்லா உறுப்பினர்களும் அணைகள் தூர்வாரப்படுமா, தூர்வாரப்படுமா என்று கேட்கிறார்கள். முன்னாலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆவுடையப்பன் கூட கேள்வி கேட்டார். இராமநதியை தூர் வாருவதற்காக ஒரு திட்டம் போட்டால் 12 கோடி ரூபாய் ஆகிறது. எனவேதான் ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர், அங்கே வண்டல் மண் படிந்து இருந்தால், அதை அணையிலிருந்து எடுத்துச் செல்லலாம்; ஒரு சிறு ஏலம் விடலாம் என்று ஒரு முடிவு எடுத்து-- பரீட்சார்த்தமாக-- அதை ஒரு முன்மாதிரியாக வைத்து, அதை ஏலம் விட்டு தூர்வாருகிற காரியத்திலே ஈடுபட்டு இருக்கிறார்கள். அங்கே அந்த நிலைமை சக்சஸ் ஆனால், மற்ற பகுதிகளுக்கும் அதை நாம் விரிவுபடுத்தலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. நயினா முகமது.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடையநல்லூர் தொகுதியில் கல்பா நதியில்

[1997 ஏப்ரல் 2

அணை இருக்கிறது. 1992 ஆம் வருடம் நவம்பர் மாதம் பெய்த மழை வெள்ளம் காரணமாக 25 அடிக்கு மணல் நிரப்பப்பட்டு, அணையின் ஆழம் 95 அடியிலிருந்து 70 அடியாகக் குறைந்துவிட்டது. அந்த மணலை அள்ள அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, கல்பா நதி சீரமைப்புக்கும் இப்போது ஆய்வு செய்து, அதற்கு எஸ்டிமேட் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் எடுத்து அந்தப் பணியை சீர்திருத்தம் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முகம்மது கோதர் மைதீன்.

**திரு. முகம்மது கோதர் மைதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இராமநதி, கடனா நதி அணைகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டு அவற்றிற்கு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். திருநெல்வேலி மாவட்டத்திலே பிரதானமாக விவசாயத்திற்குத் தண்ணீர் செல்லக்கூடிய பாபநாசம் அணையிலிருந்து செல்லக்கூடிய பாளையங்கால்வாய், கோடகன்கால்வாய், கன்னடியன் கால்வாய், திருநெல்வேலி கால்வாய்--இவை எல்லாம் கடந்த பல வருடங்களாக தூர் வாரப்படாமல் இருக்கின்றன. கடந்த ஆட்சியிலே பாளையங்கால்வாய் தூர் வாரப்படும் என்று அறிவிக்கப்பட்டாலும்கூட, அவை எல்லாம் முழுமையாக அந்தப் பணிகள் எதுவும் நடைபெறாமல், இன்றைக்கு திருநெல்வேலி மாவட்டத்திலே இந்த 4 கால்வாய்ப் பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். அணையிலே இருந்து திறந்துவிடக்கூடிய தண்ணீர் கடைசியாக எந்தப் பாசனத்திற்கு, எந்தப் பகுதிக்கு செல்ல வேண்டுமோ, அதுவரை செல்ல முடியாத நிலை இருக்கிறது. அதிலும் குறிப்பாக கோடகன் கால்வாயிலிருந்து திறக்கப்படக்கூடிய தண்ணீர் கடைசியாக கரையிருப்பு பகுதிக்குச் செல்ல வேண்டும்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்; உரை நிகழ்த்தக் கூடாது.



1997 ஏப்ரல் 2]

**திரு. முகம்மது கோதர் மைதீன்:** கடைப்பகுதி வரை செல்லவில்லை. அதேபோல, பாளையன் கால்வாயில் செல்லக் கூடிய தண்ணீர் நொச்சிக்குளம் வரை செல்ல வேண்டும். நொச்சிக்குளம் வரை செல்லாமல், விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த நிலைமைகளை எல்லாம் மாற்றி அமைத்து, விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டிருக்கிற இந்த அரசு, அந்தக் கால்வாய்களைத் தூர் எடுக்கவேண்டிய முயற்சிகளைச் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்ளே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொதுப்பணித்துறையின் மானியக் கோரிக்கையில் தரப்பட்டிருக்கின்ற கொள்கைக் குறிப்புகளைப் படித்திருந்தால் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கமாட்டார்கள். காரணம், அதில் தெளிவாகப் போட்டிருக்கிறோம். அங்கே இருக்கின்ற வடகரை, வடிகால் வடக்கால், தென்கால், கன்னடியன் கால்வாய் அணைக்கட்டு, பாழவூர் அணைக்கட்டு, பாளையன் கால்வாய், அதற்குப் பிறகு அதன் கிளை வாய்க்கால்கள் இவ்வளவையும் சீர் செய்வதற்காக 739.90 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அதிலே தெளிவாகப் போட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை அணையில் கூடுதலாக மணல் நிரம்பி அதனால் தண்ணீர் தேக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டு, மதுரை உட்பட முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் ஆகியவை பாதிக்கப்படுகின்றன. பெரியார் அணையில் சில நேரங்களில் கூடுதலாகத் தண்ணீர் வந்து விடுகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் வைகை அணையில்தான் நாம் தண்ணீரைத் தேக்குவோம். அப்படிகூட தேக்கமுடியாத அளவுக்கு மணல் அதிகமாகத் தேங்கி விடுகிற காரணத்தால், நீர்ப்பரப்பு அதிகமாக ஏற்படமுடியவில்லை. இதனால் விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. எனவே, தூர் வார வேண்டியது அவசியம் என்பதை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் உணர்ந்து தூர் வார நடவடிக்கை எடுப்பார்களா என மீண்டும் அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 2

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு தலைவரவர்களே, வைகை அணை மணலால் தூர்ந்துவிடுகிறது என்பதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். காரணம், அந்த அணையிலிருந்து மணல் தானாக வெளியில் செல்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, மணலால் வைகை அணை தூர்ந்துவிடவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த. பூவேந்தன்.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தொகுதியில் வரதமாநதி அணைக்கட்டு இருக்கிறது. அந்த அணைக்கட்டின் கொள்ளளவு 68.9 அடி ஆகும். அதற்குக் கொடைக்கானல் மலையிலிருந்து தண்ணீர் வருகின்ற காரணத்தால், மணல், வண்டல் மண் அதிகமாக வந்து இன்றைக்கு அதன் கொள்ளளவு 20 அடியாகி விட்டது. அதைத் தூர் எடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, வரதமாநதி அணைக்கட்டு, அதன் கால்வாய்கள், இவைகளைச் சரி செய்வதற்காக 79.15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிக்கிறது என்பதைக் கொள்கை விளக்கக் குறிப்பில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பே.வே. ஸ்ரீ. வெங்கடேசன்.

**திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி நீர்த் தேக்கம் இருக்கிறது. அதன் கொள்ளளவு 52 அடி. ஆனால் அதில் மண் நிறைந்திருப்பதால், தண்ணீரின் கொள்ளளவும் மிகவும் குறைவாக இருக்கிறது. அந்த நீர்த்தேக்கத்தின் பாசனப் பரப்பு கிட்டத்தட்ட 12,000 ஏக்கர். ஆனால் இப்போது இரண்டாவது போகத்திற்குக் கூட தண்ணீர் விடமுடியாத சூழ்நிலையில் அங்கே மணல் அதிகமாக இருக்கிறது. சென்ற ஆட்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு விளம்பரம் செய்தார்கள், அந்த அணையில் தூர் வாரி மண் எடுத்துக்கொள்ளுங்கள் என்று. ஆனால் அதற்கு செலவும் நேரமும் அதிகமான காரணத்தால் யாரும் முன்வரவில்லை. ஆகவே Flushing Machine வைத்து அங்கே இருக்கின்ற மணலை வெளியேற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு தலைவரவர்களே, ஒரு அணையில் தூர் வாருவது என்பது சாதாரணமான காரியமல்ல.



1997 ஏப்ரல் 2]

மண்ணை எடுக்கிறீர்கள், அதை எங்கே கொண்டுபோய்க் கொட்ட முடியும்? இரண்டாவது, உலகத்திலேயே எந்த நாட்டிலும் அணையைத் தூர் வாரியது கிடையாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகளைப் பொறுக்கமுடியாமல்தான், நாம் கன்னியாகுமரி மாவட்டத்தில் இதைச் செய்யமுடியுமா என்று கேட்டிருக்கிறோம். அதிலே, அணை பொதுப்பணித்துறைக்குச் சொந்தமானதாக இருக்கலாம். ஆனால் அந்த மண், வருவாய்த்துறைக்கு உட்பட்ட ஒன்று. எனவேதான், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில், அதை இலவசமாகக் கொடுக்கக்கூடாது, லிபரல் ஆகிவிடும், ஆகவே அதற்கு வேண்டிய பணமும் வாங்க வேண்டும் என்றோம். ஆகவே, பொதுப்பணித்துறையும் வருவாய்த் துறையும் சேர்த்து செய்யவேண்டிய பணி இது. அதைத்தான் நான் குறிப்பிட்டேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை அணையில் இத்திட்டத்தை நாம் அமல்படுத்த இருக்கிறோம். அதில் வெற்றி கிடைக்குமா என்று பார்க்க வேண்டும்.--இப்போது அதில் கூட மண்ணை எடுத்து வெளியில் போடமுடியாது, யாராவது அந்த வண்டல் மண்ணை எடுத்துக் கொள்கிறோம் என்றால்தான் தரமுடியுமே தவிர, அரசே மண்ணை எடுத்துக்கொண்டுபோய்க் கொட்டாது, அதற்குக் கோடி கோடியான பணமும் தேவைப்படும். அதற்குப் புது அணையே கட்டிவிடலாம். ஏனென்றால், இராம அணையில் மண் எடுக்க மட்டும் 12 கோடி ரூபாய்க்கு எஸ்டிமேட் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஆகையினால் கன்னியாகுமரி மாவட்டத்தில் என்ன நடக்கிறது என்பதைப் பார்த்த பின்னர்தான் மற்ற மாவட்டங்களில் அதை அமல்படுத்துவதா இல்லையா என்பதைப் பற்றி அரசு முடிவு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 409, திரு. சுப. தங்கவேலன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**409--**

**வைகை அணைநீர் பங்கீடு முறை**

*2208--**திரு. சுப. தங்கவேலன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள பழைய

[1997 ஏப்ரல் 2

இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை அணைநீர் பங்கிடு முறையை மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

*முற்பகல் 10-15*

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு அணை கட்டுவதற்கு முன்பு திருவிதாங்கூர் சமஸ்தானத்தோடு பேச்சுவார்த்தை நடத்துகிறபோது இராமநாதபுரம் மாவட்டமும், மதுரை மாவட்டமும் ஒரே மாவட்டம். 1953-ஆம் ஆண்டு வைகை அணை கட்டப்படுவதற்கு முன்பு வைகையினுடைய கிளை நதிகளான மஞ்சளாறு, வராக நதி, பொட்டக்குடியாறு போன்ற பல்வேறு கிளை நதிகள் அதனுடைய நீர்வரத்து வைகையிலே விழுந்து இராமநாதபுரம் மாவட்டத்துக்கு வந்து சுபிட்சமாக வாழ்ந்து வந்தோம். பிறகு காவிரியிலே அணை கட்டியதைப்போல, பல்வேறு கிளை நதிகளிலே அணை கட்டப்பட்டு அந்தத் தண்ணீர் திருப்பிவிடப்பட்ட காரணத்தினால் நீர்வரத்து எங்களுக்குக் குறைந்து போய்விட்டது. எப்படி ஒப்பந்தம் போடுகிறபோது ஒரே மாவட்டமாக இருந்ததோ, அதேபோல அணை கட்டியதற்குப் பிறகும் வைகை அணைக்கட்டிலேதான் பெரியார் தண்ணீரும், வைகைத் தண்ணீரும் கலந்து ஒரே அணையிலேதான் இருக்கிறது. எனவே, வைகை என்றும், பெரியாறு என்றும் பிரித்துப் பார்க்காமல், மதுரை மாவட்டமும் மூன்றாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டமும் மூன்றாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது-- ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வைகையினுடைய ஆயக்கட்டுக்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு எல்லோருக்கும் சீரான நீர்ப் பங்கீட்டை அளிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா? எங்களுடைய கோரிக்கை வேரில் பழுத்த பலாவாக இருக்கிறது. இந்தக் காலகட்டத்திலேயே தீர்த்துவைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 2]

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று, நான்கு கேள்விகளை ஒரே கேள்வியாகக் கேட்டிருக்கிறார். முதலில் அவர் தெரிவித்தார், மஞ்சளாறும், வராகநதியும் வைகையிலேதான் கலந்துகொண்டிருக்கும், இப்போது அணை கட்டிவிட்டார்கள் என்று. இப்போதும் வைகையிலேதான் கலக்கிறது. வைகை அணைக்கும் பேரணைக்கும் இடைப்பட்ட இடத்திலேதான் மஞ்சளாறும், வராகநதியும் கலக்கிறது. ஆகையினாலே, மழைக்காலத்திலே அந்த மஞ்சளாற்றிலும் வராகநதியிலும் வருகிற தண்ணீர் வைகையாற்றிலே விழுந்து, இராமநாதபுரம் சீமையை நோக்கித்தான் அது வருமே தவிர, அது வைகையாற்றிலே தேங்கி நிற்காது. இது ஒன்று. ஏனென்று கேட்டால், உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். முன்பு, கலைஞர் அவர்களுடைய ஆட்சி வருவதற்கு முன்னாலேயே என்ன செய்வார்கள் என்றால், இந்த மஞ்சளாற்றிலும், வராக நதியிலும் வருகிற தண்ணீரையும், பேரணையில் ஷட்டர் மூடிவிட்ட காரணத்தினால் அங்கே தண்ணீரைத் தேக்கி அதை வேறு பகுதிக்குக் கொண்டு சென்றார்கள். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வந்தபிறகு, அந்தத் தடை நீக்கப்பட்டு பேரணையினுடைய கதவுகள் திறந்து வைக்கப்பட்டது. அதனுடைய விளைவு இந்த ஆண்டு, அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களிலே மட்டும் திறந்து வைத்ததால் 2729 மில்லியன் கன அடி தண்ணீர் வைகையாற்றிலே 27 நாட்கள் ஓடியிருக்கிறது. அதேபோன்று, வைகை கிரிடிட்டிலே உங்களுக்குச் சேரவேண்டியது 2556 மில்லியன் கன அடி தண்ணீரை 50 நாட்கள் கலைஞர் அவர்களின் அரசு விட்டிருக்கிறது. ஆக, சுருக்கமாகச் சொன்னால், வைகையாற்றில், கலைஞருடைய ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னால், கீழேயிருக்கிற பழைய இராமநாதபுரத்து மக்களுக்காக 77 நாட்கள், 4788 மில்லியன் கன அடி தண்ணீர் விட்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் கடந்த ஆட்சியிலே இருந்த நிலைமைகளையெல்லாம் நீண்டநேரம் சொல்ல விரும்பவில்லை, கடைசியாக 1995-96-ஆம் ஆண்டில் மட்டும் 198 மில்லியன் கன அடி தண்ணீர்தான் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். ஆனால் கலைஞருடைய ஆட்சிக்காலத்தில் 4788 மில்லியன் கன அடி தண்ணீரை இந்த 10 மாதத்திலே பெற்றிருக்கிறீர்கள். எனவே, பழைய இராமநாதபுர மாவட்ட மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதிலே நம்முடைய கலைஞருடைய அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

[1997 ஏப்ரல் 2

இரண்டாவது, தண்ணீரை இப்போது பகிர்ந்தளிக்க முடியுமா என்று கேட்டார். இரண்டும் ஒன்றாக இருக்கிறது என்று சொன்னார். வைகை அணை கட்டியது வைகையிலே வருகிற தண்ணீரைத் தேக்கி வைப்பதற்காக அல்ல. பெரியார் அணையின் தண்ணீரை மின்சாரத்திற்காக எடுக்கிறார்கள். பாசனம் இல்லாத நேரத்திலே அந்தத் தண்ணீர் வீணாகப் போய்விடும். எனவே, ஒரு அணை கட்டி தேக்கி வைத்திருந்தால், மின்சாரம் எடுத்தது போக-- பாசனத்திற்கு இல்லை, எனவே தேக்கி வைத்திருந்தால்-- அடுத்த ஆண்டு பாசன நேரத்திலே திருப்பித்தரலாம் என்பதற்கு. எனவே, வைகையாற்றினுடைய தண்ணீரை வைகை அணையிலே தேக்கி வைக்க மாட்டோம்.

மூன்றாவது, எப்போது தேக்கி வைக்கப்படும் என்று சொன்னால், அந்த வைகையினுடைய கிரடிட் 4,800 மில்லியன் கன அடி தண்ணீர் இருக்கும். அதற்கு மேலே வந்தால், மிகையான தண்ணீரை மழைக் காலத்தில் தேக்கி வைப்போம். இல்லாவிட்டால் 100 மில்லியன் கன அடி, 200 மில்லியன் கன அடி என்று தண்ணீர் வந்தால், அது ஆற்றிலே விடப்பட்டால் ஊறிப்போய்விடும். எனவே அதற்காகக் கொஞ்சம் சேமித்து வைத்துப் பாசன காலத்திலே விடுவோமே தவிர வேறல்ல. எனவே வைகை அணை கட்டப்பட்டதன் நோக்கமே, பெரியார் அணையினுடைய தண்ணீரைத் தேக்கிப் பாசனத்திற்கு அனுப்புவதற்காகத்தான்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை அணையிலிருந்து பாசனம் பெறக்கூடிய விவசாய நிலங்கள் கடைசி நேரங்களில் ஒரு முறைத் தண்ணீர், இரண்டு முறைத் தண்ணீர் இல்லாமல் பயிர் வாடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நேரங்களில் பெரியார் தண்ணீரை கொடுத்து உதவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ நேரங்களில் மனிதாபிமான அடிப்படையில் இந்த கிரடிட்டில் இருக்கிற தண்ணீரை அந்த கிரடிட்டில் இருக்கிற பாசனதாரர்களுக்கும், அவர்களுக்குத் தர வேண்டிய நேரங்களில்



1997 ஏப்ரல் 2]

சில நேரங்களில் இங்கேயும் தந்து இருக்கிறோம். ஆனால் அதையே ஒரு மரபாக ஏற்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் அணையில் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளுக்கு 114 அடிகளுக்கு மேலிருந்தால்தான் மற்றப் பகுதிகளுக்குத் தண்ணீர் எடுக்க வேண்டுமென்று ஒரு ஆணை இருக்கிறது. அதைப்போல எங்களுடைய சோழவந்தான் பகுதி பேரணையிலிருந்து கள்ளந்திரி வரையில்தான் பெரியார் பாசனப் பகுதி அதிகமாக இருக்கிறது. ஏறத்தாழ ஒரு லட்சம் ஏக்கர் வரையில் அங்கே பாசனம் இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிக்கும் இத்தனை அடிக்கு மேலிருந்தால்தான் மற்றப் பகுதிகளுக்கு எக்ஸ்டென்ஷன் கால்வாய் என்று சொல்லுகிறார்களே, விரிவாக்கப் பகுதிகளுக்கு சில நேரங்களில் எடுத்துச் சென்று விடுகிற காரணத்தால், இந்தப் பழைய ஆயக்கட்டுகள் எல்லாம் வெகுவாகப் பாதிக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. கடந்த 2, 3 ஆண்டுகளாகவே இரண்டாம் போக சாகுபடி பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பேரணையிலிருந்து கள்ளந்திரி வரையில் இருக்கிற பகுதிகளுக்கு இத்தனை அடிகளுக்கு மேல் பெரியார் அணையில் தண்ணீர் இருந்தால்தான் தண்ணீர் எடுத்துச் செல்ல வேண்டும் இந்த விரிவாக்கப் பகுதிகளுக்கு என்ற ஆணையை அரசு செயல்முறைக்கு கொண்டு வருமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலையூர் சானலிலும் திருமங்கலம் கால்வாய்க்கும் தண்ணீர் விடுவதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாறுபட்ட கருத்து இருக்கிறது என்று கருதுகிறேன். ஆனால் நிலையூர் சானலில் இப்போது என்ன நடக்கிறது? வைகை அணைக்கு நிலையூர் சானலில் தண்ணீர் கொண்டு போகிறோம். ஆனால் அதுவும் போதாது என்ற நிலையில் அங்கே மாடர்னைஸ் பண்ணுவதற்கு 5 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அங்கேயிருந்து நிலையூர் சானலில் கம்பிகுடி கண்மாய்க்கு கொண்டு போனால் அங்கேயிருக்கிற 53 குளங்களுக்கு நாங்கள் தண்ணீர் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் விவசாயிகள் மத்தியிலே ஏற்படுகிற நிலைமையை உத்தேசித்து சில இடங்களில் எக்ஸ்டென்ஷன் ஏரியாவுக்கு தண்ணீர் கொடுக்கிறோம். எப்படிக் கொடுத்தாலும் கடைமடை பகுதிகளில்

[1997 ஏப்ரல் 2

இருக்கிறவர்கள் பாதிக்காத வண்ணம் பார்த்துக் கொள்வதுதான் எங்களுடைய முக்கிய குறிக்கோள். அதிலே எந்த நிலையிலும் பாதகம் வராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதிலைச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் பூர்வீகமாக பெரியார் அணை கட்டப்பட்டபோது மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள ஆயக்கட்டு பகுதிகளுக்கு அந்தத் தண்ணீர் பயன்படுகிற வகையில்தான் உருவாக்கப்பட்டது. ஆனால் காலப்போக்கில் பெரியார் தண்ணீர் மதுரை மாவட்டத்திற்கு மட்டும் உரியது என்று நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அது வைகை பாசனத்திற்கும் உரியது என்ற நிலைமையை ஏற்படுத்தினால்தான், வைகை ஆயக்கட்டு பகுதியையும் பெரியார் ஆயக்கட்டு பகுதியோடு இணைத்தால்தான் பழைய இராமநாதபுரம் மாவட்டம், இப்போது இருக்கிற இராமநாதபுரம், பசும்பொன் மாவட்டங்கள் காப்பாற்றப்படும் என்ற காரணத்தால் இந்த வைகை ஆயக்கட்டு பகுதியையும் பெரியார் ஆயக்கட்டுப் பகுதியோடு சேர்ப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. காரணம் வைகை பாசனத்திற்கு 1,36,108 ஏக்கர் ஒரிஜனல். அதிலே எந்த மாறுதலும் கிடையாது. கலைஞர் அவர்கள் 1974 ஆம் ஆண்டு வரகனூரில் ஒரு ரெகுலேட்டரையும், பார்த்திபனூரில் ஒரு ரெகுலேட்டரையும் கட்டினார்கள். அதை மூன்று ரீச்சாகப் பிரித்தார்கள். கிழே வைகை அணையிலிருந்து, அதற்கு கிழே பேரணையிலிருந்து வரகனூர் வரையில் பர்ஸ்ட் ரீச்; அது மதுரை மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதி. வரகனூர் ரெகுலேட்டரிலிருந்து பார்த்திபனூர் ரெகுலேட்டர் வரை இரண்டாவது ரீச்; அதற்கு கிழே பார்த்திபனூரிலிருந்து இராமநாதபுரம் கண்மாய் வரையில் ஒரு ரீச்; இப்படி 3 ரீச் கட்டி 3 பேருக்கும் சமமாகத் தண்ணீரை அந்த ஆயக்கட்டுக்கு தக்கபடி பிரித்து விட்டிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் நீங்கள் பார்த்தால் 1.36 லட்சம் ஏக்கரும் பாசனம் பெறுகிற வகையில் இருக்கிறது. நீங்கள் என்ன



1997 ஏப்ரல் 2]

சொல்கிறீர்கள் என்றால் வைகை பாசனத்தையும் பெரியார் பாசனத்தையும் ஒன்றாக இணைக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். அப்படி இணைப்பதால் பெரும் பகுதி பாதிக்கப்படுவது இராமநாதபுரம் சீமையாக இருக்கும் என்பதை மட்டும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் நிலையூர் சானலில் இருப்பவர்கள் கூட பலர் எங்களைப் பெரியார் பாசனத்தில் சேர்க்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்தப் பெரியார் பாசனத்திலே நாம் அதைச் சேர்த்து கம்பிக்குடிக்குக் கொண்டுபோய் தண்ணீரைக் கொடுத்தால் ஒத்துக்கொள்ள முடியுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும். எனவே கடைமடையிலே இருக்கிற மக்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் உங்களது உரிமையை இழக்காமல் இருப்பதுதான் நல்லது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவிக்கிற யோசனை - ஒரு காலத்திலே இராமநாதபுரம் மாவட்டம் ஒன்றாக இருந்தது. இப்போது மூன்று மாவட்டமாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. எனவே அந்த அடிப்படையில், 2:3:7 என்ற விகிதத்தில்தான் நாங்கள் தண்ணீரைப் பிரித்துக் கொடுக்கிறோம். அதிலே ஏதாவது மாறுதல் செய்யலாம் என்றால் யோசிக்கலாமே தவிர மாவட்ட வாரியாக பிரிப்பதென்பது முடியாது, இரண்டையும் ஒன்றாக்குவதும் முடியாது.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 410, திரு. கே. சுந்தர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**410--**

**பேருந்துகள் பழுதடைந்தால் பிற போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்தல்.**

*1590--**திரு. கே. சுந்தர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தொலை தூரத்தில் இருந்து சென்னைக்கு வரும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் சென்னைக்கு அருகில் பழுதடைந்துவிட்டால் பாதிக்கப்படும் பயணிகள் பிற போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலம் பயணம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

[1997 ஏப்ரல் 2

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இப்போதே இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**திரு. கே. சுந்தர்:** தலைவர் அவர்களே, இப்போது நடைமுறைப்படுத்தப்படுகிறதென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதுபோன்ற சூழ்நிலையில் பாதிக்கப்படுகின்ற பயணிகளை நிறுத்தி ஏற்றிச்செல்லாமல் இருக்கின்ற பேருந்துகளின் நடத்துநர், ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மானியக் கோரிக்கையின்போதே இது அறிவிப்பாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எந்தப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் வழியிலே பிரேக் டவுன் ஆகி அவை நிறுத்தப்பட்டாலும், வந்துகொண்டிருக்கிற போக்குவரத்துக்கழகங்கள் - வேறு போக்குவரத்துக் கழகங்களாக இருந்தாலும் - பயணிகளை ஏற்றிச் செல்லவேண்டுமென்று அனைத்து நிர்வாக இயக்குநர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. நிச்சயமாக வரும் காலங்களில் இது மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 411, திரு. வி.. கோவிந்தன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**411--**

### மலைக் கிராமங்களுக்குப் பேருந்து இயக்குதல்

*4045--**திரு. வி. கோவிந்தன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பேரணாம்பட்டு தொகுதி, மாதகடப்பா, அரவட்லா ஆகிய மலைக் கிராமங்களுக்குப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,



1997 ஏப்ரல் 2]

(அ) இப்போது இந்தப் பேருந்துகளை இயக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. வி. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரணாம்பட்டு தொகுதியில் ஆலாங்காயம் ஒன்றியத்திலுள்ள மாதகடப்பா, உத்துமானிகெண்டா, சித்தகமானிகெண்டா போன்ற மலைக் கிராமங்கள் இருக்கின்றன. அந்த மலைக் கிராமங்களில் வாழ்கிற மக்கள் படிப்பதற்காகவும், நோய்வாய்ப்பட்டால் அவர்கள் சிகிச்சைப் பெறுவதற்காகவும் வாணியம்பாடி வருகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்த மலைப் பகுதி முழுவதும் தார்ச்சாலை போடப்பட்டுள்ளது. இந்த வழியாகத்தான் ஆந்திர மாநிலத்திற்கு லாரிகள் இப்போது சென்று கொண்டிருக்கின்றன. ஆகவே அம்மக்களுடைய நிலை கருதி அங்கு பேருந்து விட அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக்கொள்கிற இந்த நேரத்தில், அதுபோன்று பேரணாம்பட்டு தொகுதியிலுள்ள அரவட்லா மலைப் பகுதி, கொத்தூர் மற்றும் அரவட்லா பாஸ்வர் மண்டா மலைப் பகுதிகள் இருக்கின்றன. இந்த மலைப் பகுதியில் வாழ்கிற மக்கள் எல்லாம் பேரணாம்பட்டுக்குத்தான் படிப்பதற்காகவும் உணவுப்பொருட்களை வாங்குவதற்காகவும் வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கடந்த 1974-ம் ஆண்டு ஆட்சி செய்தபோதுதான் அந்தக் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டது. ஆகவே, அங்கிருக்கிற மக்களெல்லாம் நம்முடைய கழக ஆட்சியில் பேருந்து வருமா என்று இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் நிலை அறிந்து பேருந்து விடுவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரணாம்பட்டு அரவட்லா சாலை என்பது மலைச் சாலையாக இருக்கிறது. அதனுடைய நீளம் ஏறத்தாழ 11.4 கி.மீ. அந்த 11.4 கிலோமீட்டரில் 3.2 கி.மீ தான் நெடுஞ்சாலைக்குச் சொந்தமாக இருக்கிறது. மீதி 8.2 கி.மீ ஒன்றியச் சாலையாகவும், கிராமச் சாலையாகவும் இருக்கின்றன. அரசுக்குச் சொந்தமான 3.2 கி.மீ தார்ச்சாலைகளாக இருக்கின்றன. மீதம் இருக்கிற 8.2 கி.மீ பஞ்சாயத்து யூனியன், ஊராட்சி சாலைகள் வசமிருக்கிற காரணத்தால் அவை தார் சாலைகளாக மாற்றப்படவில்லை. இது மலைப்பாதையாக இருக்கிற காரணத்தால் அந்தச் சாலைகளைச்

[1997 ஏப்ரல் 2

சுற்றுப் பாதுகாப்புச் சுவர்கள் -retaining walls- கட்டப்படவேண்டும். அவைகளும் கட்டப்பட்டால்தான் பேருந்து போக்குவரத்துக்களைப் பாதுகாப்போடு இயக்கமுடியும். அவைகளைக் குறித்து போக்குவரத்தினுடைய இயக்குநர் 16-7-96-ல் அந்த மாவட்டத்தின் வட்டார வளர்ச்சி அலுவலருக்குச் சாலைகளைச் சீரமைத்துத் தருவதற்கு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுமானால் பேருந்துகளை விடுவதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இந்தக் கிராமங்கள் ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டத்தை ஒட்டிய கிராமங்கள். மேலும் பெங்களூரை நம்முடைய மாநிலத்தோடு மிகக் குறுகிய வழியில் செல்வதற்கு இணைக்கின்ற சாலைகள். 1974-ல் மாண்புமிகு முதலமைச்சர் - அப்போதும் முதல்வராக இருந்தார்கள். அந்தப் பகுதியை இணைப்பதற்கென்றே போடப்பட்ட நெடுஞ்சாலை இது. இது நெடுஞ்சாலைத் துறையிலே வருகிறது. ரோடு போடுவதற்கு முக்கிய காரணமே அந்தப் பகுதியில் இணையவேண்டும் என்பதற்குத்தான். பஸ் இல்லாமல் இணைப்பது எப்படி முடியும். இது மலைப்பகுதியாகையால் அதற்கு தடுப்புச்சுவர் கட்டவேண்டும் என்பது அவசியமென்று சொன்னால் தடுப்புச் சுவரைக் கட்டியாவது வெண்டியமானியபெண்டா, ஆதிமானியபெண்டா...

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** இந்தக் கிராமங்களை எல்லாம் இணைத்து பெங்களூரை மிகக் குறுகிய வழியில் சென்று அடைவதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்றுதான் பாலாற்றின் குறுக்கே பாலமும் கட்டப்பட்டு, ஆர்ஜிதங்கள் எல்லாம் முடிந்து அந்தச் சாலையும் அமைக்கப்பெற்றுள்ள நிலையில் சாலையில் பஸ் ஓடாவிட்டால் அதனுடைய பயன் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தடுப்புச் சுவர் தேவைப்படுமானால் அதை உடனடியாக அமைத்து, இந்தக் கிராமமக்களுக்கு சாலை வசதியையும், போக்குவரத்து வசதியையும் செய்து தரவேண்டும். நான் சிறிய வயதிலேயிருந்து, அங்கே வருகின்ற மக்கள் மலையிலே நடந்து வருவதைப் பார்த்து, மாண்புமிகு



1997 ஏப்ரல் 2]

முதலமைச்சர் அவர்களிடத்திலே மிகவும் வேண்டி, வாதாடிப் பெற்ற ஒரு நெடுஞ்சாலை அது, பெங்களூர்-பாண்டிச்சேரி நெடுஞ்சாலை. அதிலே பஸ் விடாமல் இருந்தால் எந்தப் பயனும் இல்லை. அதற்கு ரோடே தேவையில்லை. எனவே தயவுசெய்து, பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விடையிலேயே விளக்கமாகச் சொல்லி இருக்கிறேன். அதிலே இருக்கிற 11.4 கிலோ மீட்டரில் நெடுஞ்சாலையாக இருப்பது 3.2 கிலோ மீட்டர்தான். மீதம் உள்ள சாலைகள் ஊராட்சி ஒன்றியச் சாலைகள், கிராமச் சாலைகள். அவைகளை மேம்படுத்தித் தருமாறு, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக அந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுக்கும் எழுதப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் முயற்சியின் மூலமாக அந்தச் சாலைகள் செப்பனிடப்பட்டுக் கொடுக்கப்படுமானால், உடனடியாக பேருந்துகள் இயக்கப்படும். பேருந்துகளை இயக்குவதிலே எங்களுக்குப் பிரச்சினை இல்லை. ஆனால், அந்தச் சாலைகள் ஊராட்சி ஒன்றியச் சாலைகளாக இருக்கிற காரணத்தால், அவைகள் மேம்படுத்தப்பட்ட பிறகு அல்லது அவர்கள் நெடுஞ்சாலைத் துறைக்கு அந்தச் சாலைகளை ஒப்படைப்பார்களானால், அந்தச் சாலைகளை எடுத்துக் கொண்டு, அந்தப் பணிகளை மேற்கொண்டு நடத்திய பிறகு, பேருந்துகளை விடுவதற்கு உடனடியாக அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 412, திரு. செங்கை சிவம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

**412--**

### நாடகத் துறையை ஊக்குவித்தல்

*5076--**திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அழிந்து வரும் நாடகத் துறையை ஊக்கப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1997 ஏப்ரல் 2

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். நாடகக் கலையின் மேம்பாட்டிற்கும், நாடகத்துறையில் ஈடுபட்டுள்ள தொழில்முறை நாடகக் கலைஞர்களின் நல்வாழ்விற்கும் தமிழக அரசு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் வாயிலாக பல திட்டங்களைத் தீட்டி அதனைச் செவ்வனே செயற்படுத்தி வருகிறது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடகக் கலைஞர்களுடைய முன்னேற்றத்திற்கு என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன? நாடகக் கலைஞர்களுடைய ஓய்வு ஊதியம் மற்றும் சலுகைகள் நடைமுறையில் உள்ளதா? எத்தனை நாடக கலைஞர்கள் பயனுறுகிறார்கள்? மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 'பரப்பிரம்மம்' முதல் 'காகிதப்பூ' நாடகம் வரைக்கும் 20 நாடகங்களை எழுதியுள்ளார்கள். 'பரப்பிரம்மம்' என்ற நாடகத்தில் அவர்களே நடித்துள்ளார்கள். ஆகவே, முதன் முதலிலே எழுதிய நாடகம், அதிலே அவர்களே நடித்துள்ளார்கள். மேலும் 'தூக்கு மேடை' என்னும் நாடகத்தையும் அவர்கள்தான் எழுதினார்கள். இந்த நாடகத்தில் எம்.ஆர்.ராதா அவர்கள் நடித்துள்ளார்கள். அதிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைமை தாங்குகிறபோது, ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. சோடா பாட்டில் மூடிகளை எல்லாம் ஒன்றாகத் திரட்டி, ஒரு பையிலே போட்டு, தலைவரிடத்திலே அதைக் கொடுத்து, நாடக நடிகர்களுடைய வறுமையை எடுத்துக் காட்ட, எம்.ஆர்.ராதா அவர்கள் அந்த ஏற்பாட்டைச் செய்தார்கள் என்பது செய்தி. ஆகவே, இதை எல்லாம் உணர்ந்த நம்முடைய அன்பு முதலமைச்சர் அவர்கள் நாடகக் கலைஞர்களுக்கும் மற்ற தொழிலாளர்களுக்கும் அளிக்கின்ற சலுகைகளைப் போல், கருணை நிதி வழங்க முன்வருவார்களா? குறைந்தபட்சம் 25 ஆயிரம் ரூபாயையாவது, அவர்கள் இறந்தபின் அவர்கள் குடும்பத்திற்கு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 2]

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் திரைப்படத் துறைக்கு வருவதற்கு முன்னால், மூலமாகக் கொண்டது நாடகங்கள்தான். குறிப்பாக, சமுதாயச் சீர்திருத்தம் மேலோங்குவதற்காக நாம் பயன்படுத்திய கருவிகளே நாடகங்கள்தான் என்பதை இந்த அரசைத் தவிர வேறு எவரும் அந்த அளவிற்கு உணர்ந்துவிட முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்தவகையில், 11 வகையான திட்டங்களை இந்தத் துறை செயல்படுத்தி வருகிறது. தமிழ் இலக்கியக் காட்சிகள், தமிழ்ப் பண்பாடு, சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை மையமாகக் கொண்டு சித்தரித்துத் தயாரிக்கப்படும் சிறந்த நாடகங்களை மேடையேற்றச் செய்வதற்கு தயாரிப்பு மானியத்தை இந்த அரசு வழங்கி வருகிறது. இதுவரைக்கும் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நாடகங்களின் தயாரிப்புக்கு வழங்கியிருக்கிறது. இதுவரை 20 புதிய நாடகங்கள் இந்த மானியத்தைப் பெற்றிருக்கின்றன. இதில் ஈடுபட்டிருக்கிற நடிகர், நடிகையர், நாடகப் பாடலாசிரியர் என்று 450 நாடகக் கலைஞர்கள் இதிலே பயன் பெற்றிருக்கிறார்கள்.

முற்பகல் 10-35

இரண்டாவதாக அவர்களைச் சிறப்பிப்பதற்காகவும் தமிழக அரசு தருகின்ற, கலைஞர்களுக்குத் தருகின்ற உயர்ந்த விருது என்ற முறையிலும், கலைமாமணி விருது, பல நூற்றுக்கணக்கான பேருக்கு வழங்கப்படுகிறது. அது நாடகத் துறையில் மட்டும் இதுவரைக்கும் 193 பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு மட்டுமல்லாமல், நாடகக் குழுக்களுக்கு ஊக்கம் தருவதற்காக 11 நாடகக் குழுக்களுக்கு கேடயங்கள் வழங்கப்பட்டு ஊக்கம் தரப்பட்டிருக்கிறது. நலிந்துபோயிருக்கிற நாடகக் கலைஞர்களுக்கு, 40 பேருக்கு ரூ. 1,000 வரைக்கும் இதுவரைக்கும் தரப்பட்டது. இப்போது நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில் இந்த ரூ. 1,000 என்பது ரூ. 10,000/- ஆக உயர்த்தப்பட்டு 3 பேருக்கு முதற்கட்டமாக வழங்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், மீண்டும் பழைய நாடகங்களை நினைவு கொள்வதற்காகவும், பழைய நாடகங்களுடைய சிறப்பை இந்த மக்கள் உணர்ந்து மீண்டும் நல்ல நிலையை நோக்கித் திரும்புவதற்காகவும் சங்கரதாஸ் சுவாமிகள், நவாப் ராஜமாணிக்கம், பம்மல் சம்பந்த முதலியார், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் ஆகியோருடைய நினைவு நாட்கள் போற்றப்பட்டு, அவர்களுடைய நாடகங்கள்

இப்போது திருப்பி மீண்டும் அரங்கேற்றப்படுகின்றன. அந்த வகையில் சங்கரதாஸ் சுவாமிகளுடைய நாடகம் மதுரையிலும், பம்மல் சம்பந்த முதலியாருடைய நாடகம் பம்மலிலும் அரங்கேற்றப்பெற்றிருக்கின்றன.

வறுமையில் வாடும் கலைஞர்களுக்கு, 2,500 பேருக்கு தமிழக அரசு இப்போது ரூ. 500 வழங்கி வருகிறது. கடந்த ஆண்டு ரூ. 400 ஆக இருந்ததை இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் ரூ. 500 ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோக, மறைந்த கலைஞர்களுடைய குடும்பம் வறுமையில் வாடுமேயானால், அதையும் கவனித்து, அவர்களுக்கு குடும்ப நிதியாக ஆண்டுக்கு ரூ. 3,000 வழங்கப்படுகிறது. அந்தவகையில் 30 குடும்பங்கள் பயன்பெறுகின்றன.

பதிப்பு மானியம் என்று நல்ல நாடக நூல்களை எழுதிவிட்டு, பதிப்பிக்க வழியில்லாமல் தடுமாறுகின்ற நாடகக் கலைஞர்கள் பயன்பெறும் வகையில் 50 நாடக நூல்களுக்கு பதிப்பு மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. அரசுப் பேருந்தில் நாடகம் நடத்தச் செல்கின்ற குழுவினருக்கு அரைக் கட்டணத்தில் சலுகை தரப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது அந்தவகையில் நாடகத்தை மேம்படுத்துவதற்காகவும், நாடகக் கலைஞர்களை ஊக்குவிப்பதற்காகவும், இந்த அரசு எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்கெனவே பேரவைத் தலைவராக இருந்தவர். இவ்வளவு நீண்ட பதிலை அறிக்கையாக வைத்திருந்தால், எல்லோரும் அதைப் படித்துவிட்டு, அதிலே கேள்விகளைக் கேட்டிருக்கலாம்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாழ்பட்டுப் போன சமுதாயத்தைச் சீர்படுத்த, மூட நம்பிக்கை முடை நாற்றத்தை விரட்டியடிக்க, மனிதநேய மாண்பாளர் தந்தை பெரியார், அவர்களுடைய கருத்துக்களை ஏந்தி பேரறிஞர் அண்ணா அவர்களும், நம்முடைய மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களும், இன்னும் சீர்திருத்த முன்னணியினரும் பல்வேறு நாடகங்களை வடித்து, ஒரு தலைமுறைக்கு அறிவுக் கண்ணை திறந்து வைத்தனர். அப்படிப்பட்ட அந்தச் சூழ்நிலையில் சற்று மாற்றங்கள் இன்றைக்கு இருக்குமா என்று எண்ணக்கூடிய அளவிற்கு மனிதநேய மாண்புக் கருத்துக்களையும், சீர்திருத்தக் கருத்துக்களையும், மீண்டும் இந்த மண்ணில் நிலைநாட்ட, சீர்திருத்தக் கருத்துக்கள், பகுத்தறிவு மணம் கமழ்கின்ற நாடகங்களுக்கும், அதைப்போல ஒரு பராசக்தியோ, அல்லது ஒரு ரங்கோன் ராதாவோ காணமுடியாத ஒரு சூழ்நிலையில் இன்றைக்கு திரையிருக்கின்ற காரணத்தால், அறிவுக் கண்ணைத் திறக்கின்ற அறிவுப் பிரச்சார பணியாக உருவாகக் கூடிய நாடகங்களுக்கு அரசு உறுதுணையாக, ஊக்கமாக, உதவியினை அளிக்க முன்வருமா என்பதையும், அது மட்டுமல்லாது பழைய நாடகங்களைப் புதுப்பிக்கின்ற வகையாக சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களின் கருத்துக்கள் கொண்ட நாடகங்கள் மீண்டும் போடப்படுகின்றன என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய 'நீதிதேவன் மயக்கம்', 'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' போன்ற நாடகங்களையும், மீண்டும் மக்கள் மன்றத்திலே கொண்டுவந்து போடுவதற்கும், அதைப்போல நம்முடைய தலைவர் அவர்கள் எழுதிய தூக்குமேடை, நச்சுக் கோப்பை, சாந்தா அல்லது பழனியப்பன், உதயசூரியன் போன்ற பகுத்தறிவு மணம் கமழ்கின்ற கருத்துக்களைக் கொண்ட நாடகங்களை, இப்போது மக்களின் அறிவுக் கண்ணைத் திறப்பதற்கு பயன்படுத்துகின்ற விதமாகவும், அமைய அரசு புதியதாக தன்னுடைய கருத்துக்களை இங்கே தெரிவிக்குமா, ஊக்கத்தொகை தனியாக வழங்குமா, அரசு அதை வழங்குவதற்கான நிலையை விளம்பரப்படுத்துமா என்பதையும் அறிய விரும்புகின்றேன்.



**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இரண்டு கருத்துக்களை உள்ளடக்கி வினாவைத் தொடுத்திருக்கிறார். இப்போது நாம் மானிய உதவி வழங்குவதே சிறந்த சமூக சிந்தனை உடைய நாடகங்களுக்குத்தான். காரணம், புராண இதிகாசத் தொடர்புடைய நாடகங்களை தனிப்பட்ட சிலபேர் நடத்துகிறார்கள். முன்னாள் செயலாளராக இருந்த நல்ல, சிறந்த நாடகக் கலைஞர் திரு. ஆர்.எஸ். மனோகர், அந்த நாடகங்களைத் திறம்பட நடத்தினார். ஆனால் காலப்போக்கில் அவராலேகூட அதை நடத்த முடியவில்லை. எனவே இப்போது நடைபெறுகின்ற அத்தனை நாடகங்களும் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை உள்ளடக்கியவை என்பதைத் தாங்கள் அறிந்ததே. எனினும், இந்த அரசு, தந்தை பெரியாரின் வழியை முழுமையாகச் சிந்தித்துச் செயல்படுகிற அரசு என்கின்ற முறையிலும், அண்ணாவினுடைய வழிகாட்டுதலில் இயங்குகிற அரசு என்கின்ற

[*1997 ஏப்ரல் 2*

வகையிலும், தன்னுடைய எல்லா நாடகங்களிலும் வரலாற்று முத்திரையை பதித்த மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் அவர்களுடைய தலைமையில் இயங்குகிற அரசு என்கின்ற முறையிலும், சமூக சீர்திருத்தக் கருத்துக்களுக்கும், பகுத்தறிவுக் கோட்பாடுகளுக்கும் முதன்மை கொடுத்து நாடகங்களுக்கு ஊக்கம் அளிக்கப்படும். அதே நேரத்தில் நீதிதேவன் மயக்கம், தூக்கு மேடை போன்ற நாடகங்களை யார் நடத்த முன்வந்தாலும், இந்த அரசு அதற்கு தக்க ஊக்கம் அளிக்கும்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. இராமலிங்கம்.

**திரு. ஏ. இராமலிங்கம்:** தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் நடந்து வரும் தெருக்கூத்துகளை ஊக்குவிக்கவும், அதில் நடித்து ஓய்வு பெற்ற நாடக நடிகர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவும் நம்முடைய கலைஞர் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கலைகள் அனைத்தும் இப்போது இயல், இசை, நாடக மன்றத்தால் பேணி வளர்க்கப்படுகின்றன. குறிப்பாக, அண்மையிலே நடைபெற்ற கட்டைக் கூத்துக் கலை என்பதை இங்கேயே, நம்முடைய இசைக் கல்லூரியிலேயே அரங்கேற்றி இருக்கிறோம். அதேபோல, தெருக்கூத்து, தப்பாட்டம் என்று சொல்லப்படுகின்ற கலை, தேவர் ஆட்டம் என்று சொல்லப்படுகின்ற கலை அத்தனையும் இந்த அரசால் பேணி வளர்க்கப்படுகின்றன. தாங்கள் குறிப்பிடுகின்ற தெருக் கூத்துக் கலைஞர்களுக்கும் கலைமாமணி விருதுகளும், கேடயங்களும், ஊக்குவிப்புகளும் தொடர்ந்து இந்த அரசால் நல்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் செய்யாறில் அனுமான் பூங்காவனம் என்பவர், சமூக சீர்திருத்த நாடகங்களையெல்லாம் நடத்தியவர். திருவண்ணாமலை,



*1997 ஏப்ரல் 2*]

கலசப்பாக்கம், போளூர் போன்ற பகுதிகளில் பல நாடகங்களை நடத்தி பேரறிஞர் அண்ணா வேடத்தில் பல முறை நடித்திருக்கிறார். இன்று அவர் வயதாகி மிகவும் வறுமையான சூழ்நிலையிலே வாடிக் கொண்டிருக்கிறார் என்று தினமணியிலே வந்திருக்கிறது. அவருக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்த ரூ. 10,000 நிதியுதவியைக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கலைஞரிடமிருந்து முறையான விண்ணப்பத்தைப் பெற்று எங்களுக்கு அளித்த பிறகு, உறுதியாக அவருக்கு உதவி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடகத்திலிருந்து நாட்டியம் வந்ததா அல்லது நாட்டியத்திலிருந்து நாடகம் வந்ததா? முத்தமிழ் இயல், இசை, நாடகம் என்றப் பிரிவுகளிலே நாடகத்திலிருந்துதான் நாட்டியம் வந்தது என்று ஒரு சில கருத்துக்கள் அடிபடுகின்றன. சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவை ஆண்ட பரத மன்னனின் காலத்திலே பரத நாட்டியம் ஏற்பட்டதால், அதே புராதனமானது என்ற ஒரு கருத்தும் மக்களிடையே பேசப்பட்டு வருகின்றது. ஆகவே, நாட்டியத்திலிருந்து நாடகம் வந்ததா அல்லது நாடகத்திலிருந்து நாட்டியம் வந்ததா என்பதை அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே நாடகத்திலிருந்து நாட்டியம் வந்ததா, நாட்டியத்திலிருந்து நாடகம் வந்ததா என்பதற்கு ஒரே பதில் "முட்டையிலிருந்து கோழி வந்ததா கோழியிலிருந்து முட்டை வந்ததா என்பதுதான்." (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நம்முடைய போளூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்க குறிப்பிட்டதைப்போல, செய்யாறு தொகுதி, நாடகக் கலைக்கு பெயர் பெற்ற ஊராகும். நம்முடைய தலைவர் கலைஞர் அவர்க தன்னுடைய இளமைக் காலத்தில் செய்யாறு நகரில் இரணிய அல்லது இணையற்ற வீரன் என்ற நாடகத்திலே நடித்து அன்றைக்

[1997 ஏப்ரல் 2

திருவந்திபுரத்திலே கைதானார்கள் என்பது வரலாறு. அதேபோல, பேரறிஞர் அண்ணா அவர்கள் இயற்றிய நீதிதேவன் மயக்கம் நாடகத்தில், எமர்ஜென்சி நேரத்திலே தலைவர் கலைஞர் தலைமையிலே முன்னாள் அமைச்சர் திரு. சி.வி.என். அண்ணாமலை அவர்களும், என்னுடைய தந்தையார் வரதன் போன்றவர்கள் எல்லாம் பங்கேற்று நடித்தார்கள். இன்றைக்கும் அனுமான் பூங்காவனம் போன்ற நாடகக் கலைஞர் எல்லாம், அதுவும் நடிகவேள் எம்.ஆர். ராதா அவர்களோடு......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. வ. அன்பழகன்:** நாடகத் துறையிலே ஈடுபட்ட கலைஞர்கள் எல்லாம் இன்றைக்கு நலிந்து போய் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவுவதோடு, மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் நடத்தப்படுகின்ற எய்ட்ஸ் விழிப்புணர்வு மற்றும் பிரச்சார நாடகங்களில் அவர்களுக்கு வாய்ப்பளிக்க நம்முடைய அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** பல்வேறு துறைகளின் சார்பில் அவர்களுக்கு வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. செய்தி, விளம்பரத் துறையின் சார்பிலும், சுற்றுலாத் துறையின் சார்பிலும், மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பிலும் ஏராளமான வாய்ப்புகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. அதில் எந்தத் தடையும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 413, திரு. ம. சண்முகம், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**413--**

**பண்ணை சாராக் கடன் உச்சவரம்பினை உயர்த்துதல்**

*3470--**திரு. ம. சண்முகம்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிகள், பிரதம நிலவள வங்கிகள் மூலம் பண்ணை சாராக் கடன் வழங்கல்



1997 ஏப்ரல் 2]

திட்டத்தின் கீழ் வழங்கும் கடன் உச்சவரம்பினை உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி, பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் பண்ணை சாராக் கடன் திட்டத்தின் கீழ் வழங்கும் கடன்களுக்கான உச்சவரம்பு தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியினால் (நபார்டு) நிர்ணயிக்கப்படுகிறது. இந்நிலையில் கடன் உச்சவரம்பினை மேற்குறிப்பிட்ட நபார்டு உயர்த்தி நிர்ணயம் செய்கையில் அதற்கேற்ப வழங்கப்படும் கடன் தொகையின் அளவும் உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படுகின்ற கடன்களுக்கு எழுதிக் கொடுக்கப்படும் அடைமான பத்திரங்களுக்கு முத்திரைத்தாள் விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு முறையும் அந்தப் பண்ணை சாராக் கடன்களுக்கு உச்சவரம்பு அதிகப்படுத்துவதற்கு அரசாணை பெறவேண்டியுள்ளது. அந்த இடைப்பட்ட காலத்திலே அடைமான பத்திரங்களை பதிவதிலே பெரிதும் காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தினால் மற்ற வகைக் கடன்களைப் போல் கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்படுகின்ற கடன்கள் அத்தனைக்குப் உச்சவரம்பு குறிப்பிடப்படாமல் முத்திரைத்தாள் விதிவிலக்கு அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கியிலே கடன் தொகையை நிர்ணயிப்பது நபார்டு வங்கிதான். 22 வகையான தொழில்களுக்கு நிலவள வங்கியின் மூலமாக பண்ணை சாராக் கடன்களை வழங்கலாம் என்று குறிப்பிட்டு-- 1990 ஆம் ஆண்டு, 1993 ஆம் ஆண்டு-- இந்த உச்சவரம்பை உயர்த்தியிருக்கிறார்கள். அ

நிர்ணயிக்க வேண்டியது நபார்டு வங்கிதானே தவிர நமது மாநில நிலவள வங்கி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 414, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**414--**

**கூட்டுறவுத் துறை நிர்வாகங்களில் தொழிலாளர் பிரதிநிதிகள்**

*3534--**திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கூட்டுறவுத் துறை நிர்வாகங்களில் தொழிலாளர் பிரதிநிதிகளையும் பங்குபெறச் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல விஷயத்திற்கு இல்லை என்று சொல்வது நல்லதல்ல. கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையிலே என்னைக் காட்டிலும் அடி முதல் முடி வரை மிக நன்றாக அறிந்தவர் அமைச்சர் அவர்கள். கூட்டுறவுத் துறை தன்னுடைய வரலாறு காணாத நட்டத்தில் மூழ்கிக் கிடப்பதற்கெல்லாம் காரணம் என்ன என்ற விவரத்தை இந்தக் கேள்வி நேரத்தில் நான் விளக்க விரும்பவில்லை. நடைமுறையில் நிர்வாக முறைகேடுகளுக்கும் பர்சேஸ் பாலிசியில் இருக்கக்கூடிய பல்வேறு பலவீனங்களுக்கும் மூல ஆதாரமாக இருப்பதே அதிகாரிகளின் ராஜ்ஜியம்தான். எனவே, இவற்றை கடிவாளமிட்டு ஒழுங்கமைப்பதற்கு நான் உள்ளபடியே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையை இலாபகரமாக மாற்றியமைப்பதற்கு மிக முக்கிய அடிப்படை,





தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கு பெறுவதுதான். எனவே, இல்லை என்ற சொல்லை மீண்டும் மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை என்பது அரசுத் துறைகளிலே ஒன்று. அந்த அரசுத் துறையில், அங்கிருக்கின்ற அங்கத்தினர்கள் சார்பாக தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தொழிலாளர்களுடைய பங்கு என்பது இதுவரை கூட்டுறவுச் சட்டத்திலே அதற்கென்று இடமே இல்லை. அப்படி கூட்டுறவுச் சட்டத்திலே இடம் இல்லாதபோது தொழிலாளர்களுக்கு அதிலே பங்கு வகிப்பது என்பது இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மிக முக்கியமான கேள்வி. கூட்டுறவுச் சட்டத்தில் இடம் இல்லை என்பது மட்டுமே பிரச்சினையைத் தீர்க்க உதவாது. எப்போதுமே பிரச்சினையைத் தட்டிக் கழிக்கக்கூடாது. பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டும். எனவே, மாநில அரசு அத்தகைய நடைமுறையைக் கொண்டுவருவதற்குப் பொருத்தமான முறையில் கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தொழிலாளர்களை முதலீட்டாளர்களோடு பங்கிலே சேர்க்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்தது முதன்முதலிலே நமது மாண்புமிகு முதல்வர் தலைஞர் அவர்கள்தான். அதைப் போக்குவரத்துத் துறையிலே 1971 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தி, பிறகு அதிலே முன்னேற்றம் காண முடியாமல் படிப்படியாக அதை எடுத்து விட்டார்கள். கூட்டுறவுத் துறையிலே பல்வேறு அங்கத்தினர்கள் இருக்கின்ற காரணத்தால் இதைப்பற்றி நன்கு ஆராய்ந்த பிறகு முடிவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 415, திரு. அ. அசோகன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 2

415--

பிற்பட்ட மாணவியர் விடுதி ஏற்படுத்துதல்

*2908--திரு. அ. அசோகன்:

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், திருக்குவளையில் பிற்பட்ட மாணவியர் விடுதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகை காயிதே மில்லத் மாவட்டம், தற்போதைய ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்தில் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பிறந்த ஊரான திருக்குவளையில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி துவங்கிட அனுமதி அளிக்கப்பட்டு, 19-2-1997 முதல் விடுதி செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சென்ற ஆண்டு போடப்பட்டது. அமைச்சர் பதில் சொல்கிறபோது, இப்போது பிரிக்கப்பட்ட ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம் என்று சொன்னார். திருக்குவளை, நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில்தான் இருக்கிறது. தொடர்ந்து பல ஊர்களில் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் வாடகைக் கட்டிடங்களில் பழுதடைந்த நிலையிலே இயங்கி வருகின்றன. அவற்றைப் புதுப்பித்துத் தர ஆவன செய்யப்படுமா? அத்துடன் சென்ற ஆண்டு கூட்டத்தொடரில் உணவுத் தொகையை அதிகப்படுத்திக் கொடுத்தீர்கள், மாதம் ரூ. 180 என்று. ஒரு நாளைக்கு 6 ரூபாய் வருகிறது. இதையும் அதிகப்படுத்தித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த விடுதி 880. அதில் சொந்தக் கட்டிடத்தில் இயங்கும் விடுதிகளின் எண்ணிக்கை 138 ஆகும். வாடகைக் கட்டிடத்தில் இயங்கும் விடுதிகளின் எண்ணிக்கை 742 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த ஆண்டு



1997 ஏப்ரல் 2]

புதிதாக 13 கட்டிடங்கள் கட்டுவதற்கு தானைத் தலைவர் கலைஞர் முதல்வர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

கடந்த நிதியாண்டில் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் உணவுக் கட்டணத்தை மாதத்திற்கு ரூபாய் 135-லிருந்து ரூபாய் 180 ஆக உயர்த்திக் கொடுத்தார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் உயர்த்திக் கொடுப்பது பற்றி தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களோடு கலந்து நிதிநிலைமைக்கு ஏற்ப அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 416, திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

416--

சாதிச் சான்றிதழ்கள் வழங்குதல்

*3417--திரு. செ. இராமலிங்கம்:

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஆதிதிராவிடர், பழங்குடியினர் சாதிச் சான்றிதழைப் பெற கோட்ட வருவாய் அலுவலர் கையெழுத்துப் பெறவேண்டும் என்ற நடைமுறை, மிகப் பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் பெறவும் கடைப்பிடிக்கப்படுமா?

(ஆ) மிகப் பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் பெறுவதில் நிறைய முறைகேடுகள் நடைபெறுவதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அவற்றைத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது ஆதிதிராவிடர்களுக்கான சாதிச் சான்றிதழ்கள் வட்டாட்சியர்களாலும், பழங்குடியினர்களுக்கான சாதிச் சான்றிதழ்கள் கோட்ட வருவாய் அலுவலர்களாலும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் சாதிச் சான்றிதழ்கள் துணை வட்டாட்சியர்களாலும் வழங்கப்படுகின்றன. மிகப் பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ்கள் பெற கோட்ட வருவாய் அலுவலர்களிடம் கையெழுத்துப் பெற வேண்டும் என்ற நடைமுறை கடைப்பிடிக்கப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

(ஆ) மிகப் பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் பெறுவதில் நடைபெறும் சில முறைகேடுகள் அரசின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்படுகின்றன.

(இ) மிகப் பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் பெறுவதில் சில இடங்களில் நடைபெறும் சில முறைகேடுகள் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டவுடன், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு முறைகேடாக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் இரத்து செய்யப்படுவதுடன் அச்சான்றிதழ்கள் வழங்கப்பட காரணமாக இருந்த அலுவலர்கள்மீது தக்க நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்ற தொழில் கல்லூரிகளில் சேருவதற்கு மிகப் பிற்படுத்தப்பட்டோர் என பொய் சான்றிதழ் கொடுத்து விண்ணப்பித்தவர்கள்மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக கடந்த 1992 ஆம் ஆண்டில் பிற வகுப்பைச் சேர்ந்த டாக்டர்கள் அருணா, ஜெயலட்சுமி, கிருஷ்ணமூர்த்தி, தமிழ்செல்வி ஆகியோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் என பொய் சான்றிதழ் பெற்று, சென்னை மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புப் படித்து வருவதாக அரசுக்கு வந்த புகார்மீது சென்னை மாவட்ட ஆட்சியர் மூலமாக விசாரணை செய்யப்பட்டது. இதில் டாக்டர் தமிழ்செல்வி மிக பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சேர்ந்தவர் அல்ல என்பது



விசாரணையில் கண்டறியப்பட்டு, அவரது சாதிச் சான்றிதழ் இரத்து செய்யப்பட்டவுடன் அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் நல்வாழ்வுத்துறை மூலமாகக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 417, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**417--**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

*3027--**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாங்குனேரி தொகுதி, இலங்குளம் ஊராட்சி, பரப்பாடியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குனேரி தொகுதி, இலங்குளம் ஊராட்சி, பரப்பாடியில் மருத்துவமனை அமைப்பதற்காக நான் கேட்டு இருந்தேன். அந்தப் பகுதியில் வாழ்கின்ற விவசாயிகள் சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்நடை மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதை மறுபரிசீலனை செய்து மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 2

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குனேரி ஊராட்சி ஒன்றியத்தில் நாங்குனேரி மற்றும் மூலக்கரைப்பட்டி ஆகிய இரண்டு இடங்களில் ஏற்கெனவே மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு நடமாடும் மருந்தகம் செயல்பட்டு வருகிறது. அரசின் நிதிநிலையை அனுசரித்து முன்னுரிமை அடிப்படையில் வருகின்ற காலங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 418, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**418—**

**கேரளபுரம் ஆலயத் திருப்பணி**

*4638—**திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, திருவிதாங்கோடு பேரூராட்சி, கேரளபுரம் மகாதேவர் ஆலயத் திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இதுபோன்றே பத்மநாபபுரம் தொகுதியில், திருவிதாங்கோட்டில் கோவில்வட்டம் மகாதேவர் ஆலயமும், குமாரகோவிலில் முருகன் கோவிலும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமை மிக்கவை இவையும்கூட பலயிடங்களில் சேதம் அடைந்திருக்கின்றன இவைகளை அரசு கவனத்தில் கொண்டு மீண்டும் கும்பாபிஷேகம் செய்ய ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 2]

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி வசதிகளை ஆராய்ந்து, கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 419, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்.

**419—**

**PROPOSAL TO ACQUIRE LANDS FOR THE ADI-DRAVIDARS**

***221—Thiru B. Venkataswamy :**

Will the Hon. the Minister for Adi-Dravidar and Tribal Welfare be pleased to state—

Whether there is any proposal to acquire lands for accommodating the Adi-Dravidars living in the congested villages of T. Kothapally, Manchunayakampalli and Kodiyalam of Hosur Block?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

ஒசூர் வட்டத்தைச் சார்ந்த மஞ்சநாயக்கன்பள்ளி, டி. கொத்தபள்ளி மற்றும் கொடியாலம் கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 420, டாக்டர் காஞ்சனா கமலநாதன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**420—**

**மின் இழுவை மகிழுந்துகள் அமைத்தல்**

*2491—**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டி, கொடைக்கானல் போன்ற சுற்றுலா மையங்களில் மின் இழுவை மகிழுந்துகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவை எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஊட்டியில் சுற்றுலா மின் இழுவை மகிழுந்துகள் அமைப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு, முடிவடையக்கூடிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. கொடைக்கானலில் மின் இழுவை மகிழுந்துகள் அமைப்பது அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனியார் நிறுவனங்களுடன் கூட்டாக இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி அதற்கான முடிவுகள் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மலைகளும், அருவிகளும், காடுகளும், கண்ணையும், மனத்தையும் கவர்வன. வெளிநாடுகளில் மலைப்பாங்கான சுற்றுலா மையங்களில் இந்தக் கேபிள் கார் - மின் இழுவை மகிழுந்துகளைச் சர்வசாதாரணமாக அமைத்துள்ளார்கள். நாம் ஒரு துரித விஞ்ஞான யுகத்தில், விளம்பரக் கவர்ச்சி யுகத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. எனவே, கொடைக்கானலிலும் சேர்த்து--மாண்புமிகு அமைச்சரவர்கள் ஊட்டியில் அமைக்க பரிசீலனைகள் நடத்தப்பட்டு, அநேகமாக நாளை மறுநாள் அவர்களுடைய மானியம் வரவிருக்கின்றது; அதிலே அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்--கொடைக்கானலையும் சேர்த்து வெளிநாட்டிலேயிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவரும்வகையில் இந்த மின் இழுவை மகிழுந்துகளை அமைக்க விரைவில் அரசு அறிவிக்குமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொடைக்கானலில் மின் இழுவை மகிழுந்துகள் அமைப்பது அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று, தற்போது உள்ள நிதிநிலைமையையும் கருத்திற்கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. நயினா முகமது.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் குற்றாலம், ஏழைகளின் கோடைவாசஸ்தலம். ஆண்டுதோறும் தமிழகம் மற்றும் பல்வேறு மாநிலங்களிலிருந்து இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் குற்றால சீசனை அனுபவிக்க வருகின்ற காரணத்தினால், குற்றாலத்தை சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புவதோடு, அங்கே அருவியிலே பெண்கள் குளித்து விட்டு, உடை மாற்றுவதற்கான அறைகள் போதுமானதாக இல்லை; எனவே, பெண்களுக்கு உடை மாற்றும் அறை, எல்லா அருவி பக்கத்திலேயும் பெரிய அளவில் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா எனவும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குற்றாலம் ஏற்கெனவே சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டு, அங்கு சுற்றுலாத் துறையின் மூலமாக சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி விடுதி ஒன்று கட்டப்பட்டு நல்ல முறையில் சீரமைக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. அதிக விரைவில், சுற்றுலா விடுதி ஒன்று திறக்கப்பட இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக் கொண்டு, பெண்கள் குளிக்க வருகின்ற காரணத்தால் அதற்கான அறைகள் கட்டப்படுகின்ற பரிசீலனை எதுவும் அரசிடம் தற்போது இல்லை என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

# 2. கவன ஈர்ப்பு

## (அ) சீர்காழி தொகுதி நல்லூர் ஆரம்ப சுகாதார நிலைய செயல்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-இன் கீழ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சீர்காழி தொகுதியிலுள்ள நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் சரிவர செயல்படாதது குறித்த", அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

### அறிக்கை

கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில் நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,18,268. இங்கு பின்வரும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன

1. நல்லூர்
2. குன்னம்
3. கொள்ளிடம்
4. திருமுல்லைவாயில்

நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அனுமதிக்கப்பட்ட மருத்துவ அலுவலர் பணியிடம் இரண்டு. இதில் டாக்டர் நாகரத்தினம் 12-7-1993 முதல் பணிபுரிந்து வருகிறார். மற்றொரு பணியிடம் காலியாக உள்ளது. (ஆகஸ்ட் 1994 முதல்) டாக்டர் நாகரத்தினம் சரிவர பணிக்கு வராமையால், அவர்மீது ஒழுங்கு



நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குன்னம் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த டாக்டர் பெர்னாட்ஷா மாற்றுப் பணியில் நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிந்து வருவதுடன் ஆரம்ப சுகாதார நிலைய நிர்வாகப் பொறுப்பையும் வகித்து வருகிறார். தற்போது நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் அரசு கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. இங்கு ஆறு படுக்கைகள் உள்ளன. 1996-ஆம் ஆண்டில் பயனடைந்த வெளி நோயாளி மற்றும் உள் நோயாளிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| வெளி நோயாளிகளின் எண்ணிக்கை | : | 13,086 |
| உள் நோயாளிகளின் எண்ணிக்கை | : | 121 |

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். எனது சீர்காழி தொகுதியில் கொள்ளிடம் ஒன்றியத்தில் நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கடந்த சில ஆண்டுகளாக ஆரம்ப சுகாதார நிலையம் சரியாகச் செயல்படாததால் அப்பகுதி மக்களிடையே ஒரு பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது. விவர அறிக்கையிலே கொள்ளிடம் ஒன்றியத்திலே குன்னம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவராகப் பணி புரிகின்ற டாக்டர் ** என்பவர் மாற்றுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிகாரிகள் கொடுத்த தவறான தகவல் அது. அவர் நிர்வாகப் பொறுப்பை மட்டும் கவனித்து வருகிறார். அந்த ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ....

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள். அந்தப் பெயரை எல்லாம் குறிப்பிடக் கூடாது. தகவல் தவறு என்றால் அமைச்சரைத் தனியாகப் பார்த்துச் சொல்லுங்கள். இப்போது நீங்கள் பேசக்கூடாது, நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர் ஒருவர் மருத்துவப் பணியையும், மருந்தாளுநர் பணியையும் செய்து வருகின்றார். அப்பகுதி 405 கிராமங்களை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. மு. பன்னீர்செல்வம்] [1997 ஏப்ரல் 2

உள்ளடக்கியது. 30 ஆயிரம் மக்கள் தொகை உடையது. எனவே, உடனடியாக அப்பகுதி மக்களிடையே இருக்கின்ற பதட்ட நிலையைப் போக்கிட ஒரு நிலையான மருத்துவரையும், ஒரு நிலையான மருந்தாளுநரையும் அரசு உடனடியாக நியமிக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இப்போது அவர் குறிப்பிட்ட அந்த டாக்டர், நிர்வாகத்தை மட்டும் பார்ப்பதற்காக நியமிக்கப்படவில்லை; நிர்வாகத்தையும் அவர்தான் பார்க்க வேண்டும். ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் நிர்வாகம் பார்ப்பதற்கு யார் சீனியராக இருக்கிறாரோ அவர் நிர்வாகத்தைப் பார்ப்பார். அதேநேரத்திலே மருத்துவப் பணியையும் பார்ப்பார். ஆனால், அங்கே இன்னொரு டாக்டர் நியமிக்கப்பட வேண்டும். போதுமான டாக்டர்கள் இப்போது இல்லாத காரணத்தினாலே, தேர்வாணையம் தேர்ந்தெடுத்து அனுப்பிய பின்னாலே, மற்றுமொரு டாக்டர் அங்கே நியமிக்கப்பட்டால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும். அடுத்த மாதத்திற்குள்ளாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.

**(ஆ) சத்துணவு மையங்களுக்கு அரசு முன்மானியம் சற்று தாமதமாக வழங்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. இ. கணேசன் மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு மையங்களுக்கு மூன்று மாத காலமாக அரசு முன்மானியம் வழங்கப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



*1997 ஏப்ரல் 2]*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

செங்கை-அண்ணா மற்றும் திருவள்ளூர்-எம்.ஜி.ஆர். ஆகிய மாவட்டங்களில் சத்துணவு பயனாளிகள் மற்றும் சத்துணவு மையங்களுக்குத் தேவையான முன்மானியத் தொகை விவரம் பின்வருமாறு:-

| மாவட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை. | | முன்மானியத் தொகை |
|---|---|---|---|
| | வேலை நாட்களில் | விடுமுறை நாட்களில் | |
| (1) | (2) | (3) | (4) |
| **செங்கை-அண்ணா** | | | |
| 5 வயது முதல் 9 வயது வரை | 1,91,599 | 39,384 | 22,18,236 |
| 10 வயது முதல் 14 வயது வரை | 55,307 | .. | 5,27,697 |
| **ஆதிதிராவிடர் பள்ளிகள்** | 20,294 | 7,103 | 2,41,282 |
| **திருவள்ளூர்-எம்.ஜி.ஆர்.** | | | |
| 5 வயது முதல் 9 வயது வரை | 1,52,687 | 76,705 | 17,61,254 |
| 10 வயது முதல் 14 வயது வரை | 61,937 | .. | 5,31,537 |
| **ஆதிதிராவிடர் பள்ளிகள்** | 14, 653 | 4,711 | 1,69,739 |

மேற்படி மானியத் தொகை, சத்துணவு வழங்க தேவைப்படும் காய்கறி, மளிகை மற்றும் விறகு செலவுக்காக ஒரு பயனாளிக்கு 18 பைசா வீதம் கணக்கிட்டு முன்மானியமாக ஒவ்வொரு காலாண்டிற்கும் வழங்கப்படுகிறது. இந்த முன்மானியத் தேவை பற்றிய கோரிக்கைகளைக் காலாண்டிற்கு ஒரு மாதம் முன்னதாகவே ஊராட்சி

ஒன்றியங்களிலிருந்து, மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அவர்கள் பெற்று, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். அதன்படி முன்மானியத் தொகை கோரிக்கை, கூர்ந்தாய்வு செய்யப்பட்டு இயக்குநரால் அந்தந்த மாவட்டங்களுக்கு அந்தக் காலாண்டிற்கு முன்னதாகவே வழங்கப்படும். அவ்வாறு முன்மானியம் வழங்கப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டாலும், சத்துணவு வழங்குவதில் தடை ஏற்படாத வண்ணம் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து தலநிதி கணக்கு எண் 1-லிருந்து கணக்கு எண் 5-க்கு மாற்றம் செய்து ஊராட்சி ஒன்றிய அளவிலேயே சத்துணவு மையங்களுக்கு பணம் வழங்கப்படலாம் என்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

2. செங்கை-அண்ணா மற்றும் திருவள்ளூர்-எம்.ஜி.ஆர். மாவட்டங்களிலிருந்து 1996-97-ல் 4வது காலாண்டிற்கான முன்மானிய பிரேரணைகள் இயக்குநரால் 1996 டிசம்பர் மாதத்திலேயே கேட்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து 7-1-97 அன்று மேற்படி கோரிக்கைகள் பெறப்பட்டன. அதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டு, ஏற்கெனவே வழங்கப்பட்ட 2வது காலாண்டு முன்மானியத் தொகையுடன், 4வது காலாண்டு தொகையும் ஈடு செய்யப்பட்டு இயக்குநரால் 7-2-97 அன்று செங்கற்பட்டு-அண்ணா மாவட்டத்திற்கு ரூ. 60.44 லட்சமும் 31-1-97 அன்று திருவள்ளூர் எம்.ஜி.ஆர். மாவட்டத்திற்கு ரூ. 54.24 லட்சமும் முன்மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தொகைகளை இயக்குநரகத்திலிருந்து பெற்றுக் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவரது ஒப்புதல் பெறப்பட்டு மேற்படி தொகையிலிருந்து அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சத்துணவு பணியாளர்கள் ஊதியம் வழங்குவதற்கும், காய்கறி மற்றும் இதர செலவினங்களுக்கும் 3-3-97 அன்று செங்கை-அண்ணா மாவட்டத்திற்கும் 7-3-97 அன்று திருவள்ளூர்-எம்.ஜி.ஆர். மாவட்டத்திற்கும் பணம் வழங்கப்பட்டுள்ளது.

3. மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் பார்க்கும்போது முன்மானியக் கோரிக்கைகள் மாவட்டங்களிலிருந்து சிறிது காலதாமதமாக வரப்பெற்றாலும், உடனடியாக சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை நடவடிக்கை எடுத்து தேவையான முன்மானியத்தை வழங்கியுள்ளது என்பது தெளிவாகிறது. ஆயினும், ஏற்கெனவே கூறப்பட்டுள்ளபடி, காய்கறி, மளிகை, விறகு சாமான்கள் வாங்க தேவையான தொகையை தலநிதி கணக்கு 1-லிருந்து பெற்று





சத்துணவு வழங்குவதில் தங்கு தடை எதுவும் இல்லாமல் இயங்கும் வகையில் தேவையான அறிவுரைகள் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்களுக்கு சமூக நல இயக்குநரால் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன.

4. எனவே, சத்துணவு மையங்களுக்குத் தேவையான முன்மானியம் வழங்கப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டாலும், சத்துணவு வழங்குவதில் தடை ஏற்பட எவ்வித காரணமும் இல்லை என்பது தெளிவு ஆகிறது.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் நீண்டநாள், 40 ஆண்டு கால அன்பு நண்பராக இருந்த, மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய, தமிழக மக்களால் இதயக்கனியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எம்.ஜி.ஆர். அவர்கள் 1982-ஆம் ஆண்டு, அண்ணா பிறந்த செப்டம்பர் 15-ல், இந்தச் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்,. இதில் வரலாறு எல்லாம் சொல்லக் கூடாது.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சத்துணவுத் திட்டத்திற்காக நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் 405.56 கோடி ரூபாய் இந்த நிதியாண்டிலே ஒதுக்கி, இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தக்கூடிய இந்தக் காலக்கட்டத்தில், ஒருசில அதிகாரிகளின் மெத்தனப் போக்கினால், தமிழ்நாட்டில் இரண்டு மாவட்டங்களில், சத்துணவு வழங்குவதில் குறைபாடு ஏற்பட்டுள்ளது. ஒருமாத காலத்திற்கு முன்னால் அரசிடமிருந்து வாங்கி சத்துணவுக் கூடத்திற்குக் கொடுக்க வேண்டிய மானியங்களை மூன்று மாதத்திற்குப் பின்னால், 3-3-1997 அன்று செங்கை-அண்ணா மாவட்டத்திலும், 7-3-1997 அன்று திருவள்ளூர்-எம்.ஜி.ஆர் மாவட்டத்திலும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஜனவரி மாதத்தில் இந்தப் பணம் வந்திருக்க வேண்டும். இதனால் சத்துணவுப் பணியாளர்களுக்கு மூன்று மாதச் சம்பளம் பாக்கி. அதேபோல, சத்துணவு சமையல் பொருள்கள் அரிசி பருப்பு போன்ற உணவுப் பொருள்கள் பெரும்பாலான மையத்தில் இல்லாத நிலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகக் கேள்வியைக் கேட்க வேண்டுமென்று சொன்னால் நீங்கள் இரண்டு பக்கத்திற்கு எழுதி வைத்துக் கொண்டு படிக்கிறீர்களே, இது முறையா? மூன்று மாதத்திற்குச் சம்பளம் கொடுக்கவில்லை, அதுதான் கேள்வி. சம்பளத்தைக் காலதாமதமாகக் கொடுத்தார்கள், அதோடு நீங்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களிலே அரிசி, பருப்பு போன்ற உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய குறைபாடு ஏற்பட்டுள்ளது. ஆகையினால் அரசு இதன்மீது கவனம் செலுத்தி, ஏழைகளுடைய குழந்தைகளுடைய வயிற்றுப் பசியைப் போக்க, அரசு அதிகாரிகள் மெத்தனமாக இருந்ததை அரசு வன்மையாகக் கண்டித்து, அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே உணவு வழங்குவதற்கும், அரிசி மற்றும் காய்கறிகள் வழங்குவதற்கும் தடங்கல் ஏற்பட்டிருப்பதாகச் சொல்கின்றார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை. காரணம், ஏற்கெனவே பொது நிதியிலிருந்து, தலநிதி கணக்கு 1-லிருந்து, தேவைப்பட்டால், தலநிதி 5-ன் கணக்கிற்குப் பணம் உடனே வழங்குவதற்கு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டு, அந்த முறை நடைமுறையிலே இருக்கிறது. எனவே குழந்தைகளுக்குக் கிடைக்கின்ற உணவிலோ, அல்லது சத்துணவுக் கூடங்களிலே இருக்கக்கூடிய ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதிலோ எந்தவித காலதாமதமும் ஏற்படுவதற்கு வழியில்லை. அதேசமயத்திலே, அங்கேயிருக்கக்கூடிய, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக, அவர்களுக்கு அரசாங்கம் வழங்குகின்ற இந்த மானியத் தொகை மூன்று மாதங்களுக்கு முன்பாகவே வழங்கப்பட்டு விடுகின்றது. ஒவ்வொரு மூன்று மாதத்திற்கும் ஒருமுறை அவைகள் வழங்கப்படுகின்ற காலகட்டத்திலே, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து அங்கேயிருக்கிற ஒவ்வொரு Development Office-பஞ்சாயத்து யூனியன் ஆபீசுக்கு அனுப்புகிற





தொகை சிறிது காலதாமதமாக அவர்களுக்கு வழங்கப்பட்ட காரணத்தால்தான் அங்கே காலதாமதம் ஏற்பட்டிருந்தது. இப்படிப்பட்ட காலதாமதம் எதிர்காலத்திலே ஏற்படாமல் தடுப்பதற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

## 3. அறிக்கை அளித்தல்

### பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கைகள் அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ஜி. பழனிசாமி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1996-97-ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 8 முதல் 10 வரையிலான அறிக்கைகளைப் பேரவைக்கு அளிப்பதில் பெருமை கொள்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

### (ஆ) கோரிக்கை எண் 11 - மாவட்ட நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 108,29,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1793, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க', நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,29,03,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1794, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க', நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,29,03,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1767., திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,29,03,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1774, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தலைமையிடம் மற்றும் அரசு அலுவலகங்களில் பல வருடங்களாகத் தற்காலிகமாகப் பணிசெய்யும் துப்புரவு மற்றும் அலுவலக உதவியாளர்களின் பணியினை நிரந்தரமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,29,03,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1801, திரு. அ.வ. அப்துல் நாசர். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1768, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'துறை வல்லுநர்களையே துறை இயக்குநர்களாக நியமிக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க,' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,29,03,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

### (ஆ) கோரிக்கை எண் 11 - மாவட்ட நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 11-மாவட்ட நிருவாகம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 331,88,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1857, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி கோட்ட வளர்ச்சி அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து திருத்துறைப்பூண்டியை மையமாகக் கொண்டு, கோட்ட வளர்ச்சி அலுவலகம் புதிதாகத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றி 11-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 331,88,27,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1856, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 331,88,27,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1868, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளுவர் மாவட்டத் தலைமை அலுவலகத்தை அரியலூர் அருகில் உள்ள அல்லி நகரத்தில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 331,88,27,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1875, திரு. இ. கணேசன்.



**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாவட்ட ஆட்சித் தலைவர் மாதம் ஒருமுறை மாவட்ட அதிகாரிகள் மற்றும் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்து மக்கள் மனுமீது தீர்வு காண வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 331,88,27,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2865, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தருமபுரி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை பிரிவின் செயற் பொறியாளர் அலுவலகம் மாவட்டத் தலைமையிடத்தில் அமைப்பதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 331,88,27,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1850, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி தாலுகா அலுவலகத்திற்கு நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில் புதிய ஈப்பு உடன் வாங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 331,88,27,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1870, திரு. வி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவில்பட்டித் தொகுதி எட்டயபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனித் தாலுகாவாக அமைக்க வேண்டுமென்பது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 331,88,27,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

*முற்பகல் 11-10*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்ட நிருவாகம்" பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சேற்றப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @இந்தப் பேரவையில் நான் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், அவை முன்னவர் அவர்களின் பதிலுரையில் அவைகளுக்கு விளக்கம் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று பத்து உறுப்பினர்கள் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் பத்து நிமிடத்திற்குள் தங்கள் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டுமென்ற அன்பான வேண்டுகோளை வைத்து திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)**

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, "மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மற்றும் மாவட்ட நிருவாகம்" ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

@ 379 முதல் 393 வரையுள்ள பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளன.



முதலாவதாக, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் சட்ட வல்லுநர் பணியிடங்களை ஏற்படுத்தவேண்டும். அதனால் பல நன்மைகள் உண்டு. அவற்றில் ஒருசிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாவட்ட ஆட்சியருக்கு ஏற்கெனவே வேலைப்பளு அதிகமாக இருக்கிறது. உதாரணமாக, மாவட்டத் தொழுநோய் அலுவலகங்களில் உள்ள வாகனம் விபத்துக்குள்ளானால், அதுசம்பந்தப்பட்ட வழக்குகளில் மாவட்ட ஆட்சியர், முதல் குற்றவாளியாகக் கருதப்படுகிறார். அதன் காரணமாக, அதுசம்பந்தப்பட்ட சட்ட ஆலோசனைகளைப் பெறுவதற்கும், அந்த வழக்கு பற்றிய பணிகளைக் கவனிப்பதற்கும் மாவட்ட ஆட்சியர் மற்ற முக்கிய பணிகளை ஒதுக்கி வைத்துவிட்டுச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, சட்ட வல்லுநர் பணியிடங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் ஏற்படுத்தினால், அவர்கள் வழக்கு சம்பந்தப்பட்டப் பணிகளையும், அதுபற்றிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்போது, மாவட்ட நிருவாகம் சிறப்புற நடைபெறுவதற்கு வழிவகுப்பதாக அமையும். அதுபோல, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து தேர்வு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் போன்றவர்களுக்கு சட்ட ஆலோசனை வழங்கவும் இவர்கள் பணி ஏதுவாக இருக்கும். ஆகவே, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் சட்ட வல்லுநர் பணியிடங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் முழுவதையும் கம்ப்யூட்டர் வசதி உள்ளதாக மாற்றியமைக்க வேண்டும். இதனால், இன்றைய சூழ்நிலையில் மாவட்ட நிருவாகம் விரைந்து செயல்படவும், மக்களுடைய கோரிக்கைகளும், மனுக்களும் விரைந்து பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுப்பதற்கும் ஏதுவாக அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று துறை இயக்குநர்களை நியமிக்கும்போது, முடிந்த வரையில், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக நியமிப்பதை விடுத்து, அந்தத் துறை வல்லுநர்களையே துறை இயக்குநர்களாக நியமித்தால், அந்தத் துறை நுணுக்கங்கள் பற்றி அவர்கள் அறிந்திருப்பதால், அதற்குத் தக்கவாறு நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, துறை இயக்குநர்களாக துறை வல்லுநர்களையே நியமிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையுடன் அரசு அதிகாரிகளுக்கு

வரும் மனுக்கள் மீது என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, அவைகள் எந்த நிலையில் உள்ளன என்பதை அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதற்கான உத்தரவையும் அரசு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-15

அடுத்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும், வட்டாட்சியர் அலுவலகங்களிலும் அவ்வப்போது ஏற்படும் காலியிடங்களை உடனுக்குடன் நிரப்புவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்திலிருந்து நாகை-காயிதே மில்லத் மாவட்டம் என்று முதலில் பிரிக்கப்பட்டது. பின்பு தஞ்சை மாவட்டமும், நாகை-காயிதே மில்லத் மாவட்டமும் ஒன்று சேர்க்கப்பட்டு, அதிலிருந்து தஞ்சை, நாகை-காயிதே மில்லத் மற்றும் ஏ.டி. பன்னீர்செல்வம் என்று மூன்று மாவட்டங்கள் உதயமாயின. புதிய மாவட்டம் உருவாக்குவது என்பது, மாவட்ட நிருவாகத்தை எளிமைப்படுத்தவும், பணிகளை விரைவுபடுத்தவும் எடுக்கப்பட்ட முடிவாகும். அப்படி புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்திற்கு மாவட்டக் கருவூலம் அமைக்க வேண்டுமென்பதற்காக, நாகை-காயிதே மில்லத் மாவட்டக் கருவூலத்திலிருந்த 70 பணியாளர்களைப் பிரித்தார்கள். அவர்களில் 29 பேரைப் பிரித்தெடுத்து, மேலும் புதிதாக 16 பணியிடங்களை ஏற்படுத்தி, ஏ.டி.பி. மாவட்டத்திற்கு 45 மாவட்டக் கருவூலப் பணியாளர்களையும், நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு 41 மாவட்ட கருவூலப் பணியாளர்களையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதற்கான ஜி.ஓ. 740, 18-12-1996 அன்று அனுப்பப்பட்டிருக்கிறது. இதனால் அந்த இரண்டு மாவட்டங்களுடைய பணிகளும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கின்றன. நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் ஏற்கெனவே பணியாளர்கள் பற்றாமையால், வேலைப் பளு அதிகமாக உள்ள நிலையில், பணித் தேக்கம் இருக்கிறது. இந்த நிலையிலே மேலும் 29 பேர்களை அங்கிருந்து எடுத்துவிட்டால், அந்த மாவட்டப் பணிகளில் மிகவும் தேக்க நிலை ஏற்படும். ஆகவே, பிரிப்பதை விட்டுவிட்டு, புதிதாகத் துவங்கப்படும் மாவட்டங்களுக்கு புதிதாகப் பணியிடங்களை ஏற்படுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மேலும் நாகை-காயிதே மில்லத் மாவட்டம் மற்றும் ஏ.டி.பி. மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களையும் சேர்த்து, 13 வட்டங்களை உள்ளடக்கிய இந்த இரண்டு



மாவட்டங்களிலுள்ள மொத்தப் பணியாளர்களைவிட, 8 வட்டங்களை உள்ளடக்கிய தஞ்சை மாவட்டத்திலே கருவூலப் பணியாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இதை அரசு கவனத்திற் கொண்டு, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலிருந்து பணியாளர்களைப் பிரித்தெடுப்பதை விடுத்து, ஏ.டி.பி. மாவட்டத்திற்குப் புதிதாக மாவட்டக் கருவூலப் பணியாளர்கள் பணியிடங்களை ஏற்படுத்தி இந்த இரண்டு மாவட்டக் கருவூலங்களும் ஒழுங்காகச் செயல்பட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. பா. துரைசாமி.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நாடு போற்றும் நல்ல அறிஞர்கள் போற்றும், அரசியல் வல்லுநர்கள் கட்சிப்பாகுபாடின்றி போற்றும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் போற்றும் நல்லதொரு நிதிநிலை அறிக்கையை நாட்டுக்குத் தந்த நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டையும், நன்றியையும், தெரிவித்துக்கொண்டு, இந்த மானியத்தின்மீது என்னுடைய பேச்சைத் துவங்குகின்றேன்.

"சாலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்" என்று அன்று பாரதி பாடிய பாட்டை நனவாக்க, இன்றைய பாரதி டாக்டர் கலைஞர் அவர்கள் அத்தனை கனவுகளையும் நனவாக்கி வருகின்றார் என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில் ஏறத்தாழ 29 மாவட்டங்கள் இருக்கின்றன. எங்களுடைய மாவட்டம் 1995-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த நிதி ஆண்டில் நிருவாகச் சீரமைப்பிற்காக புதிதாக அறிவித்த 4 மாவட்டங்கள் நன்கு செயல்பட்டு வருகின்றன. நம்முடைய தமிழகத்தில் மனுநீதித் திட்டம் என்பது டாக்டர் கலைஞர் அவர்களால் இந்தியாவிலேயே முதன்முறையாக 1969-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, இன்றைக்கு நல்ல முறையில் செயல்பட்டு, கிராம மக்களுடைய நன்மதிப்பையும், நல்ல வரவேற்பையும் பெற்றிருக்கிறது. கடந்த காலங்களில் இந்த மனுநீதித் திட்டம் என்பது ஒவ்வொரு மாதமும் நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், வருகின்ற நிதியாண்டிலே, இந்த மனுநீதித் திட்டம் வாரத்திற்கு ஒருமுறை

நடத்தப்படும் என்று அறிவித்திருப்பதை நாட்டுமக்கள் வரவேற்றுப் பாராட்டுகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோன்றே, மனுநீதித் திட்டம் நடத்தப்படுகின்ற அந்த இடத்திற்கு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சென்று மக்களிடத்திலே அந்த மனுக்களைப் பெறுகிறார்களா அல்லது அலுவலகத்திற்கு வருகின்ற மனுக்களை ஆராய்ந்து, மக்களின் குறைகள் தீர்க்கப்படுகின்றனவா என்பதைக் கவனித்து, கண்டிப்பாக அந்த அதிகாரிகள் உரிய கிராமங்களுக்குச் சென்று மனுக்களைப் பெற்று, மனுக்கள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முறையாக எடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல குறித்த காலகெடுவுக்குள்--ஓய்வூதியம் கேட்டு மனு வந்தால், அதன் மீது நடவடிக்கை எடுக்க ஒரு காலக்கெடு; விபத்து நிவாரணம் என்றால் அதற்கு ஒரு காலக்கெடு--நடவடிக்கை எடுக்கிறார்களா என்பதை நம்முடைய அரசு உன்னிப்பாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மனுநீதித் திட்டத்தை, மக்கள் குறை தீர்க்கும் திட்டத்தை கண்டிப்பாக சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துத்தான் செயல்படுத்த வேண்டுமென்று மாவட்ட ஆட்சியாளர்களுக்கு ஒரு உத்தரவை வழங்கினால், இந்த அரசு நாட்டு மக்களுக்காக என்னென்ன நலத் திட்டங்களை செய்கிறது என்பதை எடுத்துச்சொல்ல வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மனுநீதித் திட்டம் நடத்தப்படும்பொழுது, கண்டிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளும் விதத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயல்பட தக்க அறிவுரைகளை வழங்கிடுமாறு இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

முற்பகல் 11-20

அதேபோன்று, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே, புதியதொரு திட்டமான 'நமக்கு நாமே' என்ற திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அன்று காந்தி கண்ட கிராம இராஜ்யம் போல, இன்று நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள 'நமக்கு நாமே' திட்டம் நன்றாகச் செயல்படுகின்றதா என்பதை அறிய, உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தக்க முறையிலே ஆணைகள் இடப்படுவதுடன், உரிய முறையில் கண்காணிக்கப்பட



வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று, மாவட்டங்களைச் சீரமைக்கும் திட்டம். மிகவும் அதிக பரப்பளவு கொண்டுள்ள மாவட்டங்கள் நிர்வாகச் சீர்திருத்தங்களுக்காகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பிரிக்கப்பட்ட மாவட்டங்களில் மிகவும் முக்கியமானது, பெரம்பலூர்-திருவள்ளுவர், இராஜாஜி, எம்.ஜி.ஆர்., வைகை-வீரன் அழகுமுத்து, திருவாரூர்-ஏ.டி. பன்னீர்செல்வம் ஆகிய மாவட்டங்களாகும். இவற்றில், எனது வரகூர் தொகுதி அடங்கிய பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்பு, அரியலூரில் எத்தனை அலுவலகங்கள் அமைக்க வேண்டும், பெரம்பலூரில் எத்தனை அலுவலகங்கள் அமைக்க வேண்டும் என்று, கடந்த 9-2-1997 அன்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் கூடி, முடிவெடுக்கப்பட்டு, ஒப்பந்தம் ஒன்றும் உருவாக்கப்பட்டது. அதாவது, பெரம்பலூரில் ஏறத்தாழ 30, 40 அலுவலகங்களும், அரியலூரில் ஏறத்தாழ 16, 17 அலுவலகங்களும் அமைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அத்திட்டம் அறிவிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. எனவே, உடனடியாக அரியலூருக்கும், பெரம்பலூருக்கும் நிர்ணயிக்கப்பட்ட அலுவலகங்களை அமைத்துக் கொடுப்பதோடு, அவற்றிற்குத் தேவையான கட்டிடங்களையும் கட்டிக் கொடுப்பதுடன், அலுவலர்களையும் உடனடியாக நியமிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுதுதான், அங்குள்ள பிரச்சினைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளியை நாம் கண்டாக முடியும். எனவே, அரசு இதுகுறித்து ஆய்ந்து, அங்கே அலுவலகங்களைத் திறப்பதற்கும், அதிகாரிகளை நியமிப்பதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று, அதிகாரிகளை நியமிக்கும்போது, தேவையான உதவியாளர், எழுத்தர் போன்றவர்களையும் நியமிப்பதோடு, அலுவலகத்திற்குத் தேவையான அனைத்துத் தளவாடச் சாமான்களையும் அளித்திட வேண்டுமாய் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று, மாவட்ட அதிகாரிகளுக்கு வாகனங்கள் வழங்கப்படாமல் உள்ளன. உதாரணமாக, மாவட்ட வழங்கல் அதிகாரி, ஆதிதிராவிடர் நல அதிகாரி, பிற்படுத்தப்பட்டோர் நல அதிகாரி ஆகியோருக்கு வாகனங்கள் இன்னும் வழங்கப்படாத

216650.

காரணத்தினால், அவர்கள் தங்களுக்குரிய காரியங்களைச் செவ்வனே செய்ய முடியவில்லை. எனவே, அவர்களுக்கு உடனடியாக வாகனங்களை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

தற்போது தொடங்கப்பட்டுள்ள பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டத்திலுள்ள செந்துறை, குன்னம், வேப்பந்தட்டு ஆகிய வட்டங்களில் தாலுகா அலுவலகக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று, செந்துறை, குன்னத்தூர் ஆகிய இடங்களில் சார்நிலைக் கருவூலங்களை--சப் டிரஷரி ஆபீஸ்--ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள பெரம்பலூர்-திருவள்ளுவர், கரூர்-தீரன் சின்னமலை ஆகிய மாவட்டங்களில் மாவட்டக் கருவூலங்கள் அமைப்பதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழிகோல வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று, பரந்து விரிந்த எனது வரகூர் தொகுதி, அதிக மக்கள் தொகையையும், பரப்பளவையும் கொண்ட பகுதி. எனவே, கொளக்காநத்தம், செட்டிகுளம் ஆகிய இரண்டு பிர்க்காக்களையும் ஒன்றிணைத்து ஒரு புதிய தாலுக்காவை உருவாக்கிட வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அந்தப் பகுதியிலே அடிக்கடி போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. எனவே, அந்த இரண்டு பிர்க்காக்களையும் ஒன்றிணைத்து, ஆலத்தூர் கேட்டைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய தாலுக்காவை ஏற்படுத்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்தும் கருத்துரு அரசுக்கு வந்திருக்கின்றது.

அதேபோன்று, எனது தொகுதியில் அடங்கிய குன்னம் வட்டத்திலும், வேப்பூரிலும் ஒரு தீயணைப்பு நிலையமும் கொளக்காநத்தத்தில் ஒரு துணை தீயணைப்பு நிலையமும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். திட்டக்குடியில் அதிகமாக வன்முறைகள் நடந்து வருவதாலும், அங்கே சாராயத் தொழிலாளர்கள் அதிகம் இருப்பதாலும், அங்கே ஒரு காவல் நிலையம் ஏற்படுத்திக் கொடுக்க



வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று, குன்னம், புதியதாகத் தொடங்கப்பட்ட தாலுகா என்பதால், அங்கே மத்தியக் கூட்டுறவு வங்கி ஒன்றினை ஆரம்பித்து உதவிடுமாறு நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

முற்பகல் 11-25

அடுத்து, குன்னம் தாலுக்காவிற்கு பெரம்பலூரிலிருந்து இயக்கப்படும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை அதிகமாக இயக்க முடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், குன்னத்திலே தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் பகுதி நேர கிளை ஒன்றை அமைத்து அந்தப் பகுதிக்கு பேருந்து வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட நிருவாகம் மட்டும் சரியாக இருந்தால் போதாது. அதற்கு உறுதுணையாக இருக்கும் ஒன்றிய நிருவாகமும், அதாவது கிராம மக்கள் அடங்கிய ஊராட்சி ஒன்றிய நிருவாகங்கள் சரியாக இருந்தால்தான் அரசினால் தீட்டப்படும் திட்டங்களும், அரசால் ஒதுக்கப்படும் தொகைகளும் உரிய முறையில் மக்களைச் சென்று சேரமுடியும். எனவே, இதில் அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும். அரசு போடுகின்ற அனைத்துத் திட்டங்களும் உரியமுறையில் சென்று சேருவதைக் கண்காணிக்க ஒரு உயர்மட்டக் குழுவை அமைக்க வேண்டும். ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு உயர்மட்டக் குழு என்று அமைத்து, அங்கே வேலைகள் எப்படி நடைபெறுகின்றன என்பதைக் கண்டறியும் வகையில் உயர்மட்டக் குழுவை அமைத்து கண்காணிக்க வேண்டும். அதில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் இடம்பெற வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஒன்றியங்களிலேதான் ஆணையர்கள், திட்ட ஆணையர்கள், என்ஜினியர்கள், கிராம அலுவலர்கள் இருக்கிறார்கள். அதற்கும் மேலாக கோட்ட வளர்ச்சி அலுவலர் போன்றவர்கள் எல்லாம் அங்கே இருந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் கடந்த ஆட்சியில் என்ன செய்தார்களோ அதே தவறைதான் இப்போதும்--அந்த அரசு அதிகாரிகள்--செய்து கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லப்போனால் ஐ.ஆர்.டி.பி. லோன்கூட உரியவர்களுக்குப் போய்ச் சேர்வதில்லை. எனவே, நான் சொன்ன அந்த உயர்மட்டக்

குழுவை அமைத்து கண்காணிக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஒன்றியங்களில் தேர்வு செய்யப்படும் வேலைகள், சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் மூலமாக தேர்வு செய்யப்படும் நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதியில் செயல்படுத்த விரும்பும் பணிகளுக்கு ஆண்டுக்கு ரூ. 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும் என்ற அறிவிப்பைப் பொறுத்தவரையில் மக்களிடத்திலும், அரசியல் கட்சிகளிடத்திலும் ஏகப்பட்ட வரவேற்பு இருக்கிறது. எனவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று ஒதுக்கப்படும் இந்த 25 இலட்சம் ரூபாய் என்பதை 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தரவேண்டுமாய் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கிராம நிருவாக அதிகாரிகளின் வாரிசுகளுக்கு வேலை கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கிராம நல உதவியாளர்களாக இருப்பவர்களின்--தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதோடு--வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக ஒன்றைத் தெரிவித்து முடித்துக் கொள்ளலாம் என்று இருக்கிறேன். கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள என்னுடைய வரகூர் தொகுதியில்-- அது பெரும்பாலும் வெள்ளாற்றங்கரையில் உள்ளதால் கடந்த பெருத்த மழையின்போது--வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால் பல கிராமங்கள் நீரில் மூழ்கின. நெடுஞ்சாலைகளும், பாலங்களும் அதனால் மிகவும் மோசமடைந்தன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், திருமாங்கரை முதல் திட்டக்குடி பார்டர் வரை உள்ள 16 கிலோ மீட்டர் சாலையும், லப்பைக்குடிக்காடு முதல் புதுக்காட்டுக்குடி வரை உள்ள 16 கிலோ மீட்டர் சாலையும், ஆலத்தூர் முதல் குலக்காணத்தம் வரை உள்ள 22 கிலோ மீட்டர் சாலையும், செங்குளம் முதல் பொன்னகரம் வரை உள்ள 15 கிலோ மீட்டர் சாலையும், ஆலத்தூர் கேட் முதல் நத்தசேலம் வரை உள்ள 10 கிலோமீட்டர் சாலையும் பாதிக்கப்பட்டன. அவற்றை சேர்க்கக் கோரி மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரிடத்திலும், டி.இ., எஸ்.இ., சி.இ., ஆகியோரிடத்திலும் முறையாக மனு செய்யப்பட்டிருந்தும் ஏனோ என்னுடைய மனுக்கள் பரிசீலிக்கப்படவில்லை. நபார்ட் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட 8 கோடி ரூபாயில் ஒரு ரூபாய்கூட என்னுடைய தொகுதிக்கு ஒதுக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* இறுதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் நான் இதுகுறித்து மனு கொடுத்தேன். அதற்கும் பலன் கிடைக்கவில்லை. நபார்ட் திட்டத்தின்கீழ் எங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட அந்த 8 கோடி ரூபாய் ஜெயங்கொண்டம் தொகுதிக்கும், ஆண்டிமடம் தொகுதிக்கும், பெரம்பலூர் தொகுதிக்கும் என 4 தொகுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எங்கள் தொகுதிக்கு ஒரு ரூபாய்கூட ஒதுக்கப்படவில்லை. எனவே, கருணை உள்ளம் கொண்ட, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு டாக்டர் கலைஞர், நம்முடைய முதல்வர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு நபார்ட் திட்டத்தின் மூலமாக 10 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்து எங்கள் மக்களுடைய வாட்டத்தைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாவட்ட நிருவாகம் குறித்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் மற்றும் மாவட்ட நிருவாகம் குறித்த மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-30*

கழகத் தலைவர் கலைஞருடைய ஆட்சி மிகச் செம்மையாக இந்த நாட்டில் நடைபெறுகிறது என்பது, இந்த நாட்டுமக்கள் அனைவரும் ஒப்புக்கொண்ட விஷயம். கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் முதல் நாடகமே 'துருவன்'. அந்த நாடகத்திலேதான்

முதலிலே நடித்தார். திரு. செங்கை சிவம் அவர்கள் சொல்லும்போது கூட 'பரப்பிரம்மம்' என்று சொன்னார்கள். ஆனால் 'துருவன்' நாடகம்தான் முதன்முதலிலே அவர் நடிக்க ஆரம்பித்த நாடகம். திருஞானசம்பந்தர் 16 வயதிலே தன்னுடைய ஆயுளை முடித்துக் கொண்டார். ஆனால் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் 16 வயதிலே அந்த நாடகத்தைத் துவக்கினார்கள். இந்த நாட்டிலே துருவ நட்சத்திரமாக விளங்கப்போகிறேன் என்கிற ஒரு கருத்தில்தான் அன்றைக்கே, அந்த நாடகத்திற்கு 'துருவன்' என்ற பெயரை வைத்தார். நட்சத்திரங்கள் எல்லாம் இடம் மாறும், அத்தனை நட்சத்திரங்களும் இடம் மாறுகிறபோது, துருவ நட்சத்திரம் மட்டும் ஒரே இடத்தில் இருக்கும். அது வழிகாட்டியாக, நாட்டிற்கு, உலகத்திற்கு விளங்கும். அதனாலேதான், கலைஞர் அவர்கள் தன்னுடைய நாடகத்திற்கு 'துருவன்' என்கிற பெயரை வைத்தார். அதனாலேதான் இன்றைக்கு டெல்லியிலே கூட, நம்முடைய தலைவர் அவர்கள் விரலைக் காட்டுகிற இடத்தில் பிரதம அமைச்சரே உருவாகக்கூடிய நிலைமை இருக்கின்றது. ஆக, இந்த நாட்டினுடைய துருவ நட்சத்திரமாக விளங்குவார் என்பதை அன்றைக்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

அதுபோல, அன்றைக்கு, 1969 இல் மனு நீதித் திட்டத்தை முதன் முதலில் உருவாக்கிய மாநிலம் தமிழகம்தான். அதனைக் கூட நம்முடைய தலைவர், கலைஞர் அவர்கள்தான், நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் ஆரம்பித்தார்கள். இதற்கு முன்னாலே, வேதத்தினைப் படித்தவர்கள், வேதத்தினைப் புரிந்தவர்கள், மனுதர்மம் என்று புதிதாக, அந்தக் காலத்திலே இதிகாசக் காலத்திலே ஏற்படுத்தியிருந்தார்கள். அந்த மனுதர்மத்தைத்தான் அந்தக் காலத்தில் நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பின்னாலே, நம்முடைய சோழ சாம்ராஜ்யத்தை, திருவாரூரை ஆண்ட சோழ அரசனுக்கு இருந்த இயற்பெயரை மாற்றி மனுநீதிச் சோழன் என்ற பெயரை வைத்தார்கள், காரணம் மனுவுக்கே நீதி சொன்னவன் என்ற காரணத்தினாலேதான், மனுநீதிச் சோழன் என்ற அந்தப் பெயர் வந்தது. அந்தக் காலத்திலேயிருந்த, அந்த மனுதர்மம் இருக்கின்றதே, அந்தத் தருமத்தை மாற்றி அமைத்தவன், இந்தச் சோழன் என்கிற காரணத்தால் அவனுக்கு, அந்தக் காலத்திலே அந்தப் பெயர் இட்டார்கள். இன்றைக்கு நமக்கு மனுநீதிச் சோழனாக விளங்குகின்ற கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், எத்தனைத் திட்டங்களைக் கொண்டு வந்தாலும், அது அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், முதலமைச்சராக இருந்த காலத்திலேதான்,



ஒவ்வொன்றாகக் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். அந்தத் திட்டங்கள் எல்லாம் இந்த நாட்டிலே இன்றைக்கும் நிலைத்து இருக்கின்றன. அதிலே ஒன்று இந்த மனுநீதித் திட்டம் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதற்கு முன்னாலே இருந்த ஆட்சிக் காலத்திலே, அந்த மனுநீதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால், கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு இடத்திலும் அந்த மனுநீதித் திட்டத்தினை அமல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். மனுக்கள் வாங்கும் அதே இடத்திலே, அப்போதே எத்தனையோ காரியங்கள் முடிவு செய்யப்படுகின்றன என்பது நாம் அறிந்த ஒன்று. தஞ்சை மாவட்டத்திலே கூட, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், இருக்கின்ற 10 தொகுதிகளிலே, ஒவ்வொரு தொகுதியாக, அந்த மனுநீதித் திட்டத்தை ஆரம்பித்து, இன்றைக்கு பல இடங்களிலே நடத்தி, நல்ல முறையில் மக்களுடைய தேவைகளை முறைப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. தஞ்சை, ஏ.டி. பன்னீர்செல்வம், நாகை-காயிதே மில்லத் மாவட்டங்கள் ஒரே மாவட்டமாக இருந்தபோது பல சிரமங்கள் இருந்தன. அவைகளை மூன்றாகப் பிரிக்கின்றபோது அந்தச் சிரமங்கள் எல்லாம் குறைந்து நிருவாகத்திற்கு சௌகரியமாக அமைகிறது என்பதை யாருமே மறுக்க முடியாது. ஆகையினால்தான் மூன்றாகப் பிரித்து இருக்கின்றார்கள். அதிலே ஒரு சிக்கல் என்னவென்று சொன்னால், இந்த அதிகாரிகளையெல்லாம் கூப்பிட்டு அடிக்கடி கூட்டங்கள் போடுகிற ஒரு திட்டம் என்பது, இப்போது நடைமுறையில் இருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் கூப்பிடுகிறார், பி.ஓ. கூப்பிடுகிறார். இன்னும் மற்ற அதிகாரிகள் கூப்பிடுகிறார்கள் என்று சொல்லி, மாவட்டத்திலே இருக்கின்ற அத்தனை பேரும் ஒரு இடத்தில் கூடுகிற ஒரு நிலைமை இருக்கின்றது. அந்தந்த இடத்திலே நிருவாகத்தைச் செய்கின்றவர்கள்--அது பஞ்சாயத்து யூனியனாக இருந்தாலும் சரி, தாலுக்காவாக இருந்தாலும் சரி, அந்தந்த இடத்திலே நிருவாகத்தைச் செய்கின்றவர்கள்--எல்லாம் ஒன்றாகக் கூடி ஒரு இடத்திலே அமைகிறபோது, அங்கங்கு நடக்கிற காரியங்கள் தடைபடுகின்றன. எங்கே சென்று விட்டார் அதிகாரி என்று கேட்டால், கூட்டத்திற்குப் போய் இருக்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். அப்போது வேலைகள் தடைபடுகின்றன. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது மாவட்ட வருவாய் அலுவலரோ வட்டங்களுக்குச் சென்று அங்கேயே ஆய்வையும், கூட்டத்தையும் நடத்தினால் நிருவாக வேலைகள் சரியாக நடக்கும்.

அதே நேரத்தில் அவர்கள் வந்து போகிற நேரமும் குறையும். ஆகவே, மாவட்டத்தினுடைய ஆய்வுக் கூட்டங்களை அந்தந்த வட்டங்களிலேயே அமைத்துக்கொள்வது நல்லது என்கிற நடைமுறை பின்பற்றப்படுமானால் கொஞ்சம் காரியங்கள் நடைபெறும் என்பதில் சந்தேகமில்லை.

*முற்பகல் 11-35*

அதுபோல், இன்றைக்கு வட்டாட்சியர்கள் எல்லாம் வட்டங்களிலே ஓராண்டுதான் பணியாற்றுகிற நிலைமை உள்ளது. காரணம், கூடுதலாக அந்த வட்டங்களிலே இருந்தால் ஏதாவது பிரச்சினை வருமோ, அவர்கள் வேலை செய்வதில் தவறு செய்வார்களோ என்ற கருத்தில் அப்படிப்பட்ட நடைமுறையைக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால், ஓராண்டுக் காலத்தில் தாசில்தார்களால் காரியங்களை நிறைவேற்ற முடியவில்லை. ஏனென்றால், அவர்கள் ஒரு காரியத்தை எடுத்து நடைமுறைப்படுத்த வருகின்ற நேரத்திலே அந்த ஓராண்டுக் காலம் முடிந்து விடுகிறது. அடுத்து, இன்னொரு தாசில்தார் வந்து விடுகிறார். அப்படி வருகிறபோது, ஓராண்டுக் காலத்தில் அவர்களால் காரியத்தை நிறைவேற்ற முடிவதில்லை. ஆகவே, இன்னொரு ஆண்டு கூடுதலாக, அதாவது, இரண்டு ஆண்டுகளாகக் கொடுத்தால் ஓரளவுக்கு அது சரியாக வரும் என்ற என்னுடைய கருத்தை வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுபோல, கிராம நிருவாக அலுவலர்கள். இன்றைக்கு நாட்டிலேயே 12506 பேர்கள் இருக்கிறார்கள். இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியாளர்கள் பழைய மணியக்காரர்களை எல்லாம்--அவர்கள் அந்த ஊரிலேயே இருந்து குறைந்த சம்பளத்திற்கு, நல்ல மரியாதையோடு பணியாற்றியவர்களை எல்லாம்--தூக்கியெறிந்து விட்டு, இன்றைக்கு அரசுத் தேர்வாணையம் மூலம் அவர்களை எல்லாம் நியமித்திருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கிராமங்களிலே இருக்கிறார்களா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டிய நிலை உள்ளது. அதை நான் சட்டமன்றத்தில் பேசுகிறேன் என்றால் நாளைக்கே கூட்டம் போட்டுப் பேசுவார்கள். கிராம நிருவாக அலுவலர்கள் சங்கம் ஒரு கண்டனக் கூட்டம் போட்டு, இந்தச் சட்டமன்ற உறுப்பினர் எங்களுக்குப் பாதகமாகப் பேசுகிறார் என்று சொல்வார்கள். இப்போதைய நடைமுறை என்னவென்றால், வேலை செய்யாமல் இருப்பதை



எடுத்துச்சொன்னால், அது தப்பு என்று நினைப்பது வழக்கமாகப் போய்விட்டது. கிராம நிருவாக அலுவலர்கள் கிராமங்களில் இருக்கிறார்களா என்றால் இல்லை என்று சொல்லும் நிலை உள்ளது. அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்றால், வட்டாட்சியர் அலுவலகம் எங்கே உள்ளதோ அங்கேயே ரூம் எடுத்துக்கொண்டு, தங்கி வருகிறார்கள். கிராமத்திற்கே போவதில்லை என்ற நிலை உள்ளது. அங்கே கிராமத்தில் உள்ள அப்பிராணி ஒருவன் சர்டிபிகேட் வாங்குவதற்கு அலைந்து கொண்டிருக்கிறான். கிராமத்தில் உள்ளவர்களுக்கு, எந்தக் காரியமாக இருந்தாலும், அங்கே கிராம நிருவாக அலுவலருடைய தலையீடு அவசியம் வேண்டியிருக்கிறது. இப்போது கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலவச வேட்டி, சேலை தரவேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். முறையாக, யார் யாருக்குக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணிக்கையை அவர்கள் கொடுப்பார்களா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அரசு கொடுப்பதை வாங்கி வைத்துக்கொண்டு, முறையே இல்லாமல் வினியோகம் பண்ணிவிடுகிறார்கள்.--இப்போது சில இடங்களிலே, தமிழ்ப் புத்தாண்டிலே, சித்திரை 1-ஆம் தேதி கொடுக்கப் போகிறோம்--அதிலே, ஏழை-எளிய மக்கள் யாராக இருந்தாலும், ஆதிதிராவிட மக்கள் இவர்களுக்கெல்லாம் வீட்டுக்கு ஒரு சேலையும், வேட்டியும் வழங்குவதிலே எந்தக் கஷ்டமும் இல்லை. அதைச் சரியாக வழங்காமல், நாமெல்லாம் ஊருக்குப் போனவுடனே வயதானவர்கள் சிலபேர் வந்து எங்களுக்கு வேட்டி கொடுக்கவில்லை, சரியாகச் சேலை கொடுக்கவில்லை, கிராம நிருவாக அலுவலர்கள் சரியாகப் பணியாற்றவில்லை என்ற குற்றச்சாட்டு எங்கும் இருக்கும்.

அதுமட்டுமல்ல, வெள்ள நிவாரண நிதியை முதல்வர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். விவசாயத் துறையிலே நிவாரணம் கொடுக்கிற போது 'செக்' ஆகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. 500 ரூபாயை முழுமையாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லும் பொழுது, அதிலே அவர்கள் ஏதாவது எடுத்துக்கொண்டு போய்விடுவார்களோ என்ற பயத்தால் அப்படிச் சொல்லப்பட்டது. அரசாங்கத்திற்கே அந்த பயம் இருக்கிறது. 100, 100 ரூபாய் அல்லது 50, 50 ரூபாயாகக் கொடுத்தால், ஒரு 100 ரூபாயை அல்லது ஒரு 50 ரூபாயை எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள் என்ற பயம் இருந்தது அதனால், அதை 'செக்' ஆகக் கொடுக்க வேண்டுமென்று

சொல்லப்பட்டது. ஆனால், அதை நடைமுறைப்படுத்துகிறபோது கொஞ்சம் சிரமம்தான். கிராம நிருவாக அலுவலர்கள், கீழே உள்ள அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால், ஏழை மக்களுக்குச் சேரவேண்டிய பணத்திலே முறைகேடுகளை ஏற்படுத்துகிற நிலைமையை நாமெல்லாம் பார்க்க முடிகிறது. கிராம நிருவாக அலுவலர்களை மாற்றுவதிலேகூட இப்போது ஒரு நடைமுறையை வைத்திருக்கிறார்கள். நகர்ப்பகுதியிலே இருக்கிற எக்ஸ்டன்ஷன் ஏரியாவில் ஓராண்டுதான் இருக்க வேண்டும் என்ற விதி வைக்கப்பட்டுள்ளது. அதுகூட ஒரு வகையிலே நல்லதுதான். ஏனென்றால், இரண்டாண்டுகள் இருந்தால், இருக்கிறவற்றை எல்லாம் பட்டா போட்டு வழிவகை பண்ணிக் கொடுத்து விடுவானோ என்ற பயம் இருக்கிறது.

அதுமட்டுமல்ல, கிராமங்களில் எல்லாம் இன்னும் எத்தனையோ ஆண்டு காலம் பட்டா வாங்க முடியாமல் நிறைய பேர் இருக்கிறார்கள். 100 ஆண்டு காலமாகக் கூடச் சிலர் குடியிருக்கிறார்கள். அதையெல்லாம் கிராம நிருவாக அலுவலர்கள் தெரிந்துகொண்டு, அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம். இத்தனை ஆண்டு காலம் இங்கேயே குடியிருக்கிறார்களே, அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்ற நடைமுறையை ஏற்படுத்தி இன்னொருவர் பெயரிலே பட்டா இருந்தால்கூட 100 ஆண்டு காலம் ஒருவன் அந்த இடத்திலே இருக்கிறான் என்றால் 'ப்ராபர்டி ஆக்டி'லே 'அட்வர்ஸ் பொசஷன்' என்பது எதற்காக இருக்கிறது? இத்தனை ஆண்டு காலம் இருந்தவனுக்கு அந்த இடத்தைச் சொந்தமாக்கிக் கொடுப்பதிலே என்ன தவறு இருக்கிறது? எத்தனையோ ஆண்டு காலமாகக் குடியிருக்கிறார்கள். யாருடைய இடம் என்று கேட்டால், என்னுடையது இல்லை என்கிறான். கலைஞர் அவர்கள்தான் முதன் முதலில் பட்டா வழங்கி தன்னுடைய இடத்திலேதான் தான் இருக்கிறேன் என்ற நிலைமையை உருவாக்குகிற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒன்றுமே பேசவில்லை, இன்னும் பேச வேண்டியிருக்கிறது.

*முற்பகல் 11-40*

கிராம நிருவாக அலுவலர்கள் எல்லாம் முறைப்படி செயல்படாமல், ஊரிலே இருக்காமல், தலைநகரத்திலே இருக்கிறார்கள். ஊரிலே இருந்தே தீர வேண்டும் என்கிற நிலைமையை நடைமுறைப்படுத்த



வேண்டும். இல்லையென்றால், நிருவாக அலுவலர்களை அவரவர்களுடைய சொந்த ஊரிலே போடுங்கள். சொந்த ஊரில் வேலை பார்த்தால்தான் பணம் கேட்க முடியாது. பணம் கேட்டால், ஊர்க்காரர்களே, அடுத்த வீட்டுக்காரனிடம் ஏன் பணம் கேட்கிறார் என்று கேட்கிற முறை வந்துவிடும். அந்தக் காலத்தில், மணியக்காரர்கள் இருந்தார்கள். பணம் வாங்க மாட்டார்கள். தங்கள் சொந்த ஊரிலே மரியாதை கெட்டுப்போய்விடும் என்பதற்காக பணம் கேட்க மாட்டார்கள். ஆகவே வி.ஏ.ஓக்கள் எல்லாம் சொந்த ஊரிலே வேலை பார்க்கும் சூழ்நிலை ஏற்பட்டால், நிருவாகம் ஓரளவு நன்றாக நடக்கும். தவறு செய்தால் கிராம மக்களே அவரைப் பிடித்து வைத்துக்கொண்டு கேட்பதற்கு முறையாக இருக்கும். எனவே, இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, இன்றைக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பெயர் வைத்திருக்கிறார்கள். நாகை காயிதே மில்லத் மாவட்டம், ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம் என்று பெயர் வைத்திருப்பதுபோல, தஞ்சைக்கு, தலைவர் பெயரில், தஞ்சை கலைஞர் மாவட்டம் என்று பெயர் வைத்தால் நன்றாக இருக்கும். தஞ்சையில் எங்களுக்கு மரியாதை வருவதற்குக் காரணம் தலைவர் கலைஞர்தான். எங்களை மதிப்பதற்கு ஆட்கள் இல்லை. கலைஞர் பிறந்த மண் என்பதால் எங்களை மதிக்கிறார்கள்; ஒரு மரியாதை இருக்கிறது. தஞ்சையிலிருந்து வருகிறோம் என்று சொன்னால் தனி மரியாதை இருக்கிறது. ஆகவே, என்னுடைய மாவட்டத்தை தஞ்சை கலைஞர் மாவட்டம் என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் இதற்கு ஒத்துக்கொள்ளமாட்டார்கள். நான் புகழ்ச்சியாகப் பேசுகிறேன் என்று கருதுவார்கள். அந்தச் சூழ்நிலை இல்லாமல், அவர்கள் இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்; இந்த மண்ணுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர். தமிழ் மக்கள் எல்லாம் அவரை விட்டால் வேறு வழியில்லை என்று கூறுகிற காலம். அவரை இந்த நாட்டு மக்கள் மதிக்க வேண்டும் என்பதால் தஞ்சை மாவட்டத்திற்கு கலைஞர் பெயர் வைப்பதில் தவறில்லை. இதிலே ஒன்றும் புகழ்ச்சியில்லை. எனவே இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, கிராம நிருவாக அலுவலர்களுக்கு புரமோஷன் கிடையாது என்று நினைக்கிறேன். அந்த நிருவாக

அலுவலர்களையெல்லாம் தாலுகா அலுவலகத்தில் அசிஸ்டென்ட் ஆகப் போடலாம். கிராம நிருவாக அதிகாரிகள் சரியாகச் செயல்படவில்லையென்றால், அரசுக்குக் கெட்ட பெயர் வரும். அவர்கள் தவறான நடைமுறைகளைச் செய்கிறார்கள். எப்படி அங்காடிகளில், அடுத்த மாநிலங்களிலிருந்து பொருட்களை வாங்கிக் கொண்டு வந்து போட்ட பிறகு, அதை எடுத்து விற்கும் போது முறைகேடுகள் நடக்கும்போது; கெட்ட பெயர் வந்துவிடுகிறதோ, அதுபோல நாம் மேலிருந்து கொண்டுவருகிற திட்டங்களை, கிராம நிருவாக அலுவலர்கள் சரியாக நடைமுறைப்படுத்தவில்லை என்று சொன்னால், அதனால் அரசுக்குக் கெட்ட பெயர் வருகிறது. ஆகையினால் அவர்களையெல்லாம் தாலுகா ஆபீசுகளுக்குக் கொண்டு வந்து போடலாம். தாலுகாவினுடைய அலுவலகத்தில் வேலை பார்த்தால், அவர்கள் இந்தத் தப்பெல்லாம் செய்ய மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை அரசாங்கம் முடிந்தால் பரிசீலிக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** அவருக்கு உரிய நேரம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. மா. இராமச்சந்திரன்:** தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் உதவி பண்ணியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மாநாட்டுக்குப்போய் இருக்கின்ற காரணத்தால், அவர்களுடைய நேரத்தையும் எங்களுக்குக் கொடுத்தால், செம்மையாகப் பணியாற்ற உதவியாக இருக்கும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** இன்னும் ஒரு நிமிடத்தில், உறுப்பினர் பேசி முடிக்க வேண்டும். சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாற்றுத் தலைவர் அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர். பொறுமையான, நிதானமான சட்டமன்ற உறுப்பினர் என்ற பெயர் பெற்றவர். (மணியடிக்கப்பெற்றது)

அதுமட்டுமல்லாமல் இப்போது திறமையாகப் பணியாற்றுகிற அதிகாரிகளுக்கு பரிசு வழங்கும் திட்டத்தை கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். பரிசுத் தொகை ரூ. 10,000, ரூ. 7,500, ரூ. 5,000 என்று அறிவித்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் அதிகாரிகளை ஊக்கப்படுத்தும் நல்ல தன்மைகளை ஏற்படுத்துகிற திட்டமாகும். அதுபோல, சீர்திருத்தக் குழுக்கள் எல்லாம் போட்டிருக்கிறார்கள்.



இப்போது என்னுடைய தொகுதியில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 150 பேர் உள்ள இடங்களுக்கு குடிதண்ணீர் என்று அறிவித்திருக்கிறார்கள். கிராமத்தில் பெண்டிர்கள் எல்லாம் இந்தத் திட்டத்தை வரவேற்கக்கூடிய திட்டமாகக் கருதுகிறார்கள். நான் கிராமத்தில் போய்ப் பார்த்தேன், குழாய்களை அடித்துக் கஷ்டப்படுவதைவிட, 150 பேருக்கு ஒரு டாங்க் மூலமாகக் குடிதண்ணீர் தருவது என்பது ரொம்ப வரவேற்கக்கூடிய நிகழ்ச்சியாகும். குடிநீர்ப் பிரச்சினையை இப்படி எளிதாக்கிவிட்டார்கள் என்ற நல்ல பெயரோடு இருக்கிறோம்.

இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்தான் எல்லாப் பொறுப்புக்களையும் பார்க்கிறார்கள். சிரமமான விஷயம்தான். அறிவிக்கப்படுகின்ற திட்டங்களையெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்தான் பார்க்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிடுகிறேன். நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடம் முதலைமுத்துவாரித் திட்டத்தினை நிறைவேற்றித் தரக் கோரியிருந்தேன். திட்டம் வந்தது. ஆனால் அறிவிக்காமல் விட்டுவிட்டார். காரணம் என்னவென்றால், எங்கள் முதலமைச்சர் பார்த்துக்கொள்வார் என ஒரு வகையான பாகுபாட்டிலே அவர் சொல்கிறார். ஆகையினாலே எங்களுடைய முதலமைச்சர், முதலைமுத்துவாரித் திட்டத்தை இந்த மானியத்திலே அனுமதிக்கப்படாத நிலையில் வேறு ஒரு வகையிலே, அதை செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

ஒரு திட்டத்தை நான் அவசியம் கேட்டுக் கொண்டு இருக்கிறேன்-- எங்கள் தொகுதியில் அதுதான் பெரிய பிரச்சினை; அது தீர்ந்துவிட்டால் எனக்கு ஒரு நல்ல பெயர் என்பதினாலே--. இந்த மாவட்ட நிருவாகம் மிகச் செம்மையாக நடைபெறுவதற்கு கழகத் தலைவர் கலைஞர், முதல்வர் அவர்கள் பல திட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கிறார்-- மாதம் ஒருமுறை என்று இருந்த மனுநீதித் திட்டத்தை இப்போது வாரம் ஒருமுறை புதன்கிழமை தோறும் என்று ஆக்கிவிட்டார்கள். முன்பு

திங்கட்கிழமை என்று இருந்தது. (மணியடிக்கப்பெற்றது) அதைக் கொஞ்சம் சொல்லிவிடுகிறேன். முன்பு திங்கட்கிழமை, திங்கட்கிழமை வாங்கினார்கள். ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஏழை எளிய மக்கள் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான மக்கள் மனுக்களைக் கொடுக்கிறார்கள். ஆனால், அவற்றை நடைமுறைப்படுத்துவது சரியாக இல்லை. அதற்கு ஒரு காலக் குறியீடு வைத்து இருக்கிறார்கள்; 100 நாட்கள், 200 நாட்கள் என்று வைத்து இருக்கிறார்கள்; ஆனால், அந்தக் காரியத்தை செய்யவில்லை என்றால், என்ன பண்ணுகிறார்கள்? அந்தக் காரியத்தைச் செய்யவில்லை என்றால், அந்தக் காரியம் செய்யாத அதிகாரியை என்ன செய்வது என்ற திட்டம் ஏதாவது இருக்கிறதா? ஒன்றும் இல்லை. அதை அப்படியே விட்டுவிடுகிறோம். (மணியடிக்கப்பெற்றது) அவர்களை ஒன்றும் பண்ணுவது இல்லை. அதிலும் ஒரு முடிவு இருக்க வேண்டும். அந்த முடிவை ஏற்படுத்தினால்தான் அந்தக் காரியம் இலகுவாக நடைபெறும். ஆகவே, அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டு, நல்ல நிருவாகம் இந்த நாட்டில் நடைபெறுகிறது; நல்லாட்சி இந்த நாட்டில் நடைபெறுகிறது; மனுநீதிச் சோழனுடைய ஆட்சி--இந்த மனு தர்மம் என்பதை, தன்னுடைய காலத்திலே நல்ல நீதியை வழங்கினான் என்பதினாலேதான், அவனுக்கு மனுநீதிச் சோழன் என்ற பட்டம் வந்தது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** போதும், உரையை முடியுங்கள்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மிகச் சிறந்த முதலமைச்சராக விளங்குகிற நம்முடைய மனுநீதிச் சோழன் காலத்திலே இந்த நிருவாகம் சிறப்பாக நடைபெறுகிறது என்பதை வரவேற்று, வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களை நான் இங்கே சொல்ல விழைகின்றேன். குறிப்பாக, நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களிலிருந்து கடைசி மட்டத்தில் இருக்கின்ற கிராம அதிகாரிகள் வரையிலும் இவர்கள் எந்த



அளவுக்குச் செயல்படுகின்றார்கள்; இவர்களுடைய செயல்பாட்டின் மூலமாக கிராமத்திலே இருக்கின்ற மக்களுடைய குறைகள் எந்த அளவுக்குத் தீர்க்கப்படுகின்றன என்ற கட்டத்திலே நின்றுகொண்டு இதை நாம் பார்க்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

நம்முடைய அமைச்சர் பெருமக்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் ஒரு மாவட்டத்திற்கு வருகின்றபோது, அந்தத் தொகுதியில் அல்லது அந்த மாவட்டத்தினுடைய மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்துகொண்டு பல்வேறு பிரச்சினைகளின்மீது ஆலோசனை நடத்துகின்றார்கள்; தீர்வு ஏற்படுவதற்கான முறைகள் கையாளப்படுகின்றன. ஆனால், சில நேரங்களில் துரதிருஷ்டவசமாக அந்த மாவட்டத்தில் வருகின்ற பிரச்சினைகள் குறித்து அந்த மாவட்டத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தகவல் கிடைப்பது இல்லை; அப்படி ஒரு சங்கடமான நிலை இருக்கின்றது. இன்னுமொன்று, வருகின்ற அமைச்சர்கள், 2, 3 அமைச்சர்கள் சேர்ந்து வந்துவிடுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இலாகா. அவர்களுடைய 3 கூட்டங்களிலும் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒரு சட்டமன்ற உறுப்பினர் கலந்துகொள்ளவே முடியாது; ஏதாவது ஒன்றில்தான் கலந்து கொள்ள முடியும். கடந்த மாதம் அல்லது 2 மாதங்களுக்கு முன்னாலே என்று நினைக்கின்றேன்; நம்முடைய கூட்டுறவு, உணவுத் துறை அமைச்சர்கள் கலந்து கொள்கின்ற நிகழ்ச்சி வந்தது. அதேபோன்று நம்முடைய மீனளத் துறை அமைச்சர் நிகழ்ச்சியும் வந்தது. அதுவும் இதைவிட முக்கியமானது. இந்த இரண்டு கூட்டங்களிலும் கலந்துகொண்டு அந்த மாவட்டத்தினுடைய பல்வேறு பிரச்சினைகளைச் சொல்வதற்கு பல விஷயங்கள் இருந்தன. ஆனால், இன்னொரு கூட்டத்தில் சரிவர கலந்துகொள்ள முடியவில்லை. ஒரு கூட்டத்தில்தான் கலந்துகொள்ள வாய்ப்பு இருந்தது. ஆக, என்னுடைய வேண்டுகோள், அப்படி வருகின்றபோது, அதற்கு அவர்களுடைய வசதி, சௌகரியங்கள் எல்லாம் வேறுவிதமாக இருந்தாலும், அதில் இந்த சட்டமன்ற உறுப்பினர்களும் முறையாகக் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கான வாய்ப்பைத் தருகின்ற வகையில் ஏற்பாடுகள் வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

இன்னும் ஒன்று; குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகின்றபோது, கேரள மாநிலம் திருவனந்தபுரத்திலிருந்து கால்

வைப்பது என்னுடைய தொகுதியில்தான். தமிழ்நாட்டினுடைய துவக்கம் என்று சொல்கின்றபோது, என்னுடைய தொகுதியில் அது வருகின்றபோது, அதுபற்றி எனக்கு எந்தத் தகவலும் இல்லை; வந்துவிட்டுச் சென்றார்கள் என்ற தகவல்தான் இருக்கிறது. அந்தக் குறைபாடுகளைக் களைய வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

*முற்பகல் 11-50*

இன்னுமொன்று, ஏற்கெனவே 1982, 1983 கால கட்டங்களிலே ஒரு வழிமுறை இருந்தது. நாம் நிறைய கடிதங்களை, நம்முடைய கிராமங்களில் இருக்கின்ற மக்களுடைய பட்டா ஆனாலும் சரி, சாலைப் பணி ஆனாலும் சரி, மின்சாரம் ஆனாலும் சரி, மருத்துவம் சம்பந்தமான ஏற்பாடுகள் ஆனாலும் சரி, இதுபோல் நிறைய பிரச்சினைகளை நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற அமைச்சர் பெருமக்களுக்கு எல்லாம் கடிதம் மூலமாக இவைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்று எழுதிக்கொண்டு இருக்கின்றோம். ஆனால் இப்போது 100 கடிதம் எழுதினால் ஒரு கடிதத்திற்குத்தான் பதில் வருகிறது. பதிலே கிடைப்பது கஷ்டம். அந்தப் பதில் இல்லாததால், அதன் தொடர்ச்சியாக எதைச் செய்ய வேண்டும், எப்படிச் செய்யவேண்டும், எப்படித் தீர்வு காண்பது என்று எல்லாவற்றிலும் பிரச்சினையாக இருக்கிறது. ஆக, அமைச்சர் பெருமக்களுக்கு நாம் தருகிற மனுவானாலும் சரி, கடிதங்களானாலும் சரி, மகஜர் ஆனாலும் சரி, செய்ய முடிந்ததை அல்லது எதைச் செய்ய முடியும் அல்லது இதில் இவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன என்று இதுபோன்ற எந்தத் தகவலாவது இருக்குமானால், அதற்குத் தக்கபடி நமது வேலைகளைக் கொண்டு செல்வதற்கு அது வசதியாக இருக்கும். அந்தவகையில் ஒரு ஏற்பாடு வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

இன்னொன்று, நம்முடைய மாவட்ட மையங்களில் நடக்கிற கூட்டம். இப்போது சர்வ சாதாரணமாகப் பார்த்தால், ஒரு வாரத்தில் ஐந்து நாட்களில் 20 மீட்டிங் வரைக்கும் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களை வைத்துக்கொண்டு கூட்டங்களை நடத்துகிறார்கள். அதிலே குறிப்பாக நகராட்சி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் வருகிறபோது, ஒரு நகராட்சியில்-குழித்துறை நகராட்சியில் இருக்கிற அதிகாரியைக் கேட்டால், மாவட்ட மையத்தில் நடக்கிற, கலெக்டர் ஆபீசில் நடக்கிற கூட்டத்திற்குச் சென்றிருக்கிறார்



என்பார்கள். போயாச்சு என்று சொன்னால் காலையில் 10 மணிக்கு ஆரம்பித்து 1-00 மணிக்கு முடிந்தாலும் அதற்கு மேல் மதியத்திற்கு மேல் கூட அந்த நிருவாக அதிகாரியோ, கமிஷனரோ கிடைக்கமாட்டார். இப்படிக் கூட்டங்கள் என்று சொல்லி நேரம் போவது மட்டுமல்லாமல், முறையாக மக்களுக்கு ஆற்றவேண்டிய பணி என்பது அதனால் தடைபடுகின்றது. ஆகவே அந்தக் கூட்டத்தின் அளவைக் கொஞ்சம் குறைத்து அவ்வளவு நேரத்தையும் மக்களின் அதிகப்படியான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் காரியங்களைச் செய்வது உதவிகரமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

புதிய பஞ்சாயத்துக்கள்; ஊராட்சிகளின் அமைப்புகள் எல்லாம் வந்து மாதங்கள் சில ஆகியும் கூட, சட்டங்கள் முறையாக நிறைவேற்றப்படவில்லை என்று ஒரு காரணத்தைச் சொன்னாலும், இன்றைக்கு மாவட்டப் பஞ்சாயத்து என்று சொல்கிறபோது அந்தப் பஞ்சாயத்திலே நம்முடைய அரசின் சார்பிலே வேலை செய்ய அதிகாரியைக் கொடுத்து இருக்கிறீர்கள். அந்த அதிகாரிக்கும் ஜில்லா பஞ்சாயத்துத் தலைவருக்கும் ஒத்துப் போகாத நிலை, குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பிரத்யேக சூழ்நிலை இருக்கிறது. அதில் வருவது எல்லாம் ஒதுக்கீடுகளில் எத்தனை கோடி... வந்தாலும், எத்தனை லட்சங்கள் வந்தாலும் சரி, இந்த அதிகாரிகளுடைய கையில்தான் வருகிறது. அவர்கள்தான் இன்னாருக்கு இன்னன்ன வேலை என்று தீர்மானிக்கிறார்கள். அது ஒரு ஜனநாயக முறையாக இருக்காது என்பது என்னுடைய கருத்து.

அந்தப் பஞ்சாயத்துத் தலைவர் உள்ளிட்டு அந்தப் பணம் அங்கே பட்டுவாடா செய்யப்படுகிறபோது, எந்த ஊராட்சிக்கு, எந்தப் பேரூராட்சிக்கு, எந்த நகராட்சிக்கு என்று அந்த இரண்டு பேரும் இருந்து தீர்மானித்து, அதை அமல் நடத்துகிறபோதுதான் நாம் இந்தத் தேர்தலை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறோம், அதன் மூலமாக இது மக்களுக்குப் பயன்படுகிற வகையில் காரியங்கள் நடக்கிறது என்று வரும். அப்படியில்லாமல், இந்த அடிப்படையில் நாம் பார்க்கவில்லையென்று சொன்னால், பிரச்சினை வளர்ந்து கொண்டே வரும். ஏனென்றால், சமீபத்திலே நம்முடைய சுற்றுலாத் துறை அமைச்சருடைய தொகுதியில் ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு நிகழ்ச்சி. அந்த ஒன்றியத்தில் பெண் ஒருவர் தலைவி. ஒரு

ஊராட்சிக்கு 40 லட்சம் ரூபாயை அந்த அதிகாரி அனுமதித்தார். அதிலே இருக்கின்ற விஷயம், அந்த ஒன்றியக் கூட்டத்தை நடத்தி, சிற்றூராட்சிகளுக்கெல்லாம் செல்லவேண்டிய பணத்தையெல்லாம் எவ்வளவு எவ்வளவு என்று பங்கு போட்டு, அந்த வேலைகளுக்காக ஒதுக்கிவிட்டார்கள். ஆனால் ஒரு பத்து நாள் தாண்டி, அங்கே இருக்கிற அசிஸ்டன்ட் கலெக்டர் பொறுப்பில் வந்திருக்கின்ற அதிகாரி, இதிலே இது போதாது, அதிலே உங்களுக்கு ஒதுக்கியிருக்கிறீர்களே, அதிலே ஒரு பத்து லட்சம் ரூபாயைக் குறைத்து கொள்ள வேண்டுமென்று ஒரு தகவலைச் சொன்னார்கள். அந்தத் தலைவி என்ன சொல்லிவிட்டார்கள் என்றால், நான் எல்லா ஒதுக்கீடுகளையும் கொடுத்துவிட்டேன். இனி அதிலே ஒன்றும் பண்ணமுடியாது என்றார்கள். ஆனால் அந்த அதிகாரி என்ன செய்தார் என்றால், அந்த கமிஷனரை அழைத்து, அவரை செக் (Cheque) போடு என்று சொல்லி அந்தப் பணத்தை இன்னொரு வேலைக்காக திருப்பிவிட்டார்கள். இந்த நிலை ஆரோக்கியகரமான, ஒரு ஜனநாயக சம்பிரதாயத்தின்படியான நிலைக்கு இட்டுச் செல்லாது என்பது என்னுடைய கருத்து.

அண்டை மாநிலமாக இருக்கின்ற கேரளாவில் ஜில்லா போர்டுக்குத்தான் முழுமையான அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஜில்லா போர்டில் இருக்கின்ற தலைவரின் பெயரில்தான் பணம் இருக்கும். குளத்தை ஆழப்படுத்துகிற வேலையானாலும் சரி, கால்வாய் சீரமைக்க வேண்டுமானாலும் சரி, அந்த ஜில்லா போர்டுக்கு என்று சில கோடிகளை ஒதுக்குகிறார்கள். அப்படி ஒதுக்குகிற பணம் அந்த ஜில்லா போர்டு தலைவருடைய கையில் அல்லது அவரது நிருவாகத்திற்குச் செல்கிறது. அதிகாரிகளை அழைத்துப் பேசி, ஒழுங்குபடுத்தி, சீராக அந்த மாவட்டம் பூராவும் செயல்படுவதற்கான நிலையை அங்கே எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கு நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டில், அந்த நிலை உருவாக்கப்படவில்லை. அப்படி ஒரு நிலை உருவாகிறபோதுதான் நம்முடைய சரியான ஜனநாயக மரபு என்பது பாதுகாக்கப்படும். மக்களுக்கு நாம் ஆற்றவேண்டிய பணிகளைச் சரிவரச் செய்யமுடியும். ஆகவே, அந்தவகையில் காரியங்களைச் செய்வதற்கு இது வசதியாக இருக்கும்.



முற்பகல் 11-55

இன்னொன்று, நான் ஒரு பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன். ஆறு, ஏழு மாதங்களாக கன்னியாகுமரி மாவட்டத்திலே ஓடக்கூடிய தாமிரபரணி ஆற்றிலே, ஒரு இடத்திலே ஒரு படகு வேண்டும். அங்கே மணலைத் திருடி இன்றைக்கு, சாதாரணமாக நடந்து போகக்கூடிய பகுதி, 25 அடி ஆழத்திற்கு மணல் எடுத்துவிட்டார்கள். நடந்து போகக்கூட முடியாது. கோடை காலத்திலேகூட கடந்து செல்ல முடியாது. எனவே ஒரு படகு வேண்டும். படகுக்கு என்ன விலை? 70,000 ரூபாய் தான். அதற்குக்கூட இன்றைக்கு அனுமதி கிடைக்காத ஒரு சூழ்நிலை, கன்னியாகுமரி மாவட்டத்துக்கு அப்படி பிரத்தியேகமான ஒரு சூழ்நிலை. அது விளாத்துறை என்ற ஊரிலே ஏற்பட்டது. அதேபோன்று பருத்திக்கடவு என்ற இடத்திலும் இதே பிரச்சினை இருக்கிறது. இதிலே இருக்கக்கூடிய சிக்கல் என்னவென்று கேட்டால், ஆறு பொதுப்பணித் துறைக்குச் சொந்தம். அந்தப் படகை விடவேண்டியவர்கள் நெடுஞ்சாலைத் துறை. இது என்ன பொருத்தம் என்பது எனக்குத் தெரியவில்லை. இரண்டு துறைகளும் சேர்ந்து செய்வது என்பது சாத்தியமும் இல்லை. ஆகவே, இந்த அடிப்படையிலே நாம் பார்க்கின்றபோது நாம் இன்னொரு பிரச்சினையையும் பார்க்கின்றவர்களாக இருக்கிறோம்.

மாவட்டங்களை ஏராளமாகப் பிரித்திருக்கிறோம். அப்படிப் பிரித்ததனுடைய பின்னணி, நம்முடைய மக்களுக்கு வசதியாகக் காரியங்களைச் செய்வதற்கும், வேலைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பிரித்தோம். ஆனால் பல மாவட்டங்களிலே என்ன நடக்கிறதென்று சொன்னால், சரியான கட்டிடங்கள் இல்லை. அவைகள் வாடகைக் கட்டிடங்களிலே இருக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது. அதற்கப்புறம், பணியாளர்களைப் பொறுத்தமட்டிலும் இந்த ஒரு அவல நிலை இருந்துகொண்டேதான் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது). போதுமான ஊழியர்களுடைய பஞ்சம்கூட புதிதாக ஏற்படுத்தப்பட்ட மாவட்டங்களில் நாம் பார்க்க முடிகின்றது. இவற்றை வேகமாகக் களைவதன் மூலமாகத்தான், நாம் எந்த அளவுக்கு அரசு எவ்வளவு முயற்சி எடுத்துக்கொண்டாலும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எவ்வளவு முயற்சி எடுத்துக்கொண்டாலும், அதை அமலாக்க வேண்டியவர்கள் அடிமட்டத்திலே இருக்கின்ற ஊழியர்கள்.

அந்தவகையிலே ஊழியர்களுடைய பற்றாக்குறையைப் போக்குவதற்கான நடவடிக்கையை நாம் மேற்கொண்டாக வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

அதேபோன்று, கன்னியாகுமரி மாவட்டத்திலே நீண்டகாலமாகப் பேசிக் கொண்டிருக்கின்ற ஒரு பிரச்சினை, மிகப் பெரிய தாலுகாவான கல்குளம் தாலுகா, அதை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று பல வருஷங்களுக்கு முன்னாலேயே கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்தவகையிலே, இந்த முறையாவது, அந்தக் கல்குளம் தாலுகாவை இரண்டாகப் பிரிப்பது என்பது, இன்று அந்தப் பகுதி மக்களுக்கு நாம் செய்கின்ற ஒரு நல்ல பணியாக இருக்கும். ஏனென்று சொன்னால், ஒரு பகுதி கடற்கரை, இன்னொரு பகுதி மலை. போய்ச் சேர முடியாது. தேர்தல் காலங்களிலேயெல்லாம் அந்தச் சங்கடங்களை அனுபவிக்கவேண்டிய கட்டாயம் அந்தத் தேர்தலிலே போட்டியிடுகின்றவர்களுக்கு வந்து சேருகின்றது. எனவே, அந்த வகையிலே காரியங்களைச் செய்ய வேண்டும்.

அதேபோல, தாலுகா மையங்களைப் பொறுத்தமட்டிலேயும் அதிகாரிகளுடைய பற்றாக்குறை அங்கே இருக்கின்றது. குறிப்பாக கருவூலம், அது சரிவரச் செயல்படுகின்றதா என்று கேட்டால் இல்லை.

அடுத்து, சாதாரணமாக நாம் ஒரு நடவடிக்கையை மேற்கொள்கின்றோம். ஒரு அதிகாரி தவறு செய்துவிட்டார். அந்தத் தவறுகளின் காரணமாக 'சஸ்பென்ஷன்' என்று சொன்ன உடனேயே, எங்கே போகின்றார்கள்? 'ட்ரிபியூனலுக்கு'ப் போகின்றார்கள். துரதிருஷ்டவசமாக, அவர்கள் 'ட்ரிபியூனலுக்குப்' போய் எந்த இடத்திலிருந்து அவர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டார்களோ அதே பகுதியிலே மீண்டும் வந்து வேலை செய்கின்ற ஒரு மோசமான சூழ்நிலை இந்த 'ட்ரிபியூனல்' என்று சொல்கின்ற ஒரு நிர்வாகம் இன்று நடத்திக்கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். குறிப்பாக நான் ஒன்றைச் சொல்லுகின்றேன். (மணியடிக்கப்பெற்றது). வனப்பகுதியிலே ஒரு அதிகாரி, 300 வருஷம் பழக்கமுள்ள ஒரு மரத்தை வெட்டினார்கள். பாரஸ்ட் அதிகாரி கூடவே இருந்து அந்த மரத்தை வெட்டினார்கள். நான், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு



சென்றபோது சஸ்பென்ட் பண்ணினார்கள். அப்படி சஸ்பென்ட் பண்ணப்பட்ட மூன்று மாதத்திற்குள்ளாகவே, ட்ரிபியூனலுக்குப் போய் அவர் திரும்பவும் வேலை வாங்கி, அதே இடத்திலேயே பணிபுரிகிறார் என்று சொன்னால், அரசாங்கம் எடுத்துக்கொள்கின்ற நடவடிக்கைகள் எந்த அளவிற்குச் சரிவர அடிமட்டங்களிலே போய்ச்சேரும்? தவறு செய்யக்கூடிய அதிகாரிகளை நாம் எந்த அளவிக்குத் தண்டிக்க முடியும்? தவறு செய்கின்ற அதிகாரிகளை எப்படி கட்டுப்படுத்திக்கொள்ள முடியும் என்பதைக்கூட இந்தத் தருணத்திலே நான் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். எல்லாத் துறைகளிலும் இந்த நோய் இருக்கின்றது என்பது எனக்குத் தெரியும். ஆக இதைக் களைவதற்குக்கூட இந்த நேரத்திலே முறையான நடவடிக்கைகள், இந்த ட்ரிபியூனலுக்குப் போனால் வரக்கூடிய சங்கடங்கள் ஆகியவற்றைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று, நீதிமன்றங்கள்; நகராட்சியிலே 15 ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள வழக்கு ஒன்று இன்னும் நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கின்றது. 15 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சின்ன பிரச்சினை. அங்கே இருக்கின்ற மார்த்தாண்டம் சந்திப்பிலே இருக்கின்ற ஒரு கழிவறையைப் புதுப்பிக்க தீர்மானித்து இலட்சக்கணக்கான ரூபாயும் ஒதுக்கப்பட்டிருந்தபோது, ஒரு தனியார் அதற்குத் தடையாணை வாங்கிவிட்டார். வருஷம் 15 தாண்டியாகிவிட்டது. எப்படிப்பட்ட நிலை அங்கே உருவாகும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகளில் நீதிமன்றங்களானாலும் சரி, ட்ரிபியூனல் ஆனாலும் சரி......

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** விரைந்து பேசி முடியுங்கள், நேரம் ஆகிவிட்டது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்சினைகளில் விரைந்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு, நன்றிகூறி விடைபெறுகின்றேன். வணக்கம்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** அடுத்து, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மற்றும் மாவட்ட நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக அரசுக்கு வருவாய் ஈட்டித் தரக்கூடிய முக்கியமான துறைகளில் இந்த வருவாய்த் துறை ஒன்றாக விளங்குகிறது. மாநில அரசால் ஒதுக்கப்படக்கூடிய நிதியை, பல்வேறு நலத் திட்டங்களாக இருந்தாலும், இயற்கைச் சீற்ற நிவாரணப் பணிகளாக இருந்தாலும், அவற்றை முறைப்படுத்தி, விநியோகம் செய்கிற முக்கியமான துறைகளில் ஒன்றாக இருப்பது வருவாய்த் துறையாகும்.

ஒருபுறத்தில் வருவாயை ஈட்டுகிறது, இன்னொருபுறத்தில் மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிற வகையில் நிதியாதாரங்களைக் கணக்கிட்டு, சரிபார்த்து கொடுக்கிற ஒரு முக்கியமான துறையாக இந்தத் துறை உள்ளது. ஆகவே, இந்தத் துறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு சீர்திருத்தங்களைச் செய்து, மாநில தலைமையிடத்தில் இருக்கிற அதிகாரிகளையும் சீரமைக்கிற பணியில் ஈடுபட்டதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைமைச் செயலகத்தில் இருந்து மக்களுக்காக திட்டங்களை உருவாக்கி, அரசாங்கத்தினுடைய கொள்கை வடிவங்களை உருவாக்கக்கூடிய அதிகாரிகளிடத்தில் என்றும் இல்லாத அளவுக்கு, சமீபத்தில் ஒரு களங்கம் ஏற்பட்டிருந்தது. அப்படிப்பட்ட துறை அதிகாரிகள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்படக்கூடிய அளவுக்கு மோசமான நிலைமை தமிழகத்தில் ஏற்பட்டது. இது சாதாரணமானதல்ல. இங்கே அமைச்சர் பெருமக்கள் எல்லாம் இருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர்கள் தங்களிடம் இருக்கக்கூடிய துறைகளைப் பற்றி மட்டும்தான் கண்காணிக்க முடியும். ஆனால் எதிர்வரிசையில் இருக்கக்கூடியவர்கள், எதிர்க்கட்சியில் இருக்கக் கூடியவர்கள், எல்லாத் துறைகளிலும் நடக்கக்கூடிய ஊனங்களை, நிருவாகத் தன்மைகளை என்னவென்று புரிந்துகொள்கிற நிலையில் இருக்கிறார்கள். எந்த மானியக் கோரிக்கையில் விவாதிக்க



வேண்டுமென்று சொன்னாலும், அதுபற்றிக் கூர்மையாக கவனித்து விவாதிக்கிற நிலைமை எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஆகியோர் இதே மாமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிறபோது ஆக்கப்பூர்வமான யோசனைகளை ஆளுகின்ற கட்சிக்குத் தந்திருக்கிற வரலாறு அவைக் குறிப்புகளில் இடம் பெற்றிருக்கின்றன. அந்த வகையில் வருவாய் ஈட்டித் தருகின்ற இந்தத் துறையில் மாநில தலைமையிடத்தில் இருக்கிற அதிகாரிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னும் ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மக்கள் நல்வாழ்வுத் துறை. அந்தத் துறை மக்களுடைய உயிரைப் பாதுகாக்கும் பணிகளில் நெருக்கமாகப் பணியாற்றுகிற துறையாகும். அந்தத் துறைக்கு ஏற்பட்டிருக்கிற நிலைமையும் இன்றைக்குச் சீரமைக்கப்பட்டிருக்கிறது. அதிலும்கூட இன்னும் களையெடுக்க வேண்டிய அவசியம் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் பெயர்களைக் குறிப்பிட்டுக் கூற விரும்பவில்லை. இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனுநீதித் திட்டம் பற்றிய ஒரு கொள்கைக் குறிப்பை கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த மனுநீதித் திட்டம் என்பது இந்தியாவில் எங்குமில்லாத அளவில் தமிழகத்தில் 1989-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு, நேரிடையாக மக்களுடைய குறைகளைக் கேட்டறிந்து அதிகாரிகள், சம்பந்தப்பட்ட துறைகள் அவற்றிற்கு பதில் அளிக்க வேண்டுமென்ற முறையில் அந்த நல்ல திட்டம் இன்றையதினம் நடைமுறையில் இருக்கிறது. நான் இன்றைக்கு நடக்கும் மனுநீதித் திட்டத்தைப் பார்க்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனுநீதித் திட்டத்தில் பல்வேறு சீர்திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே அனைத்துத் துறை அதிகாரிகளும், அனைத்துப் பகுதி மக்களுடைய கோரிக்கைகளை நான்கு வாரங்களுக்கு முன்னால் பெற்றுக் கொண்டு, அவர்களே போய் விழாவை நடத்தி--மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்ட வளர்ச்சி அலுவலர், வட்டாட்சியர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரிடையாக சென்று பதில் அளிக்க வேண்டுமென்று உள்ளது. இன்றையதினம் நடைமுறையில் அப்படி இல்லாமல், அது ஏதோ மாவட்ட ஆட்சித் தலைவர் போய் ஒரு மாலை வாங்குகிற

விழாவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவ்வளவுதான். ஆளுக்கு ஒரு மாலையோடு, மனுவோடு நிற்கிறார்கள். எந்த பதிலும் வருவதில்லை. மனுவைப் பெற்றுக்கொண்ட பிறகு அவர்கள் அந்த இடத்தில் எந்த பதிலையும் அளிக்க முடியாத அளவுக்கு, பதில் அளிக்கிறேன் என்று சொல்கிறார்களே தவிர, எந்தவொரு மனுவையும் பரிசீலிப்பதுகூட கிடையாது. அதற்கு ஒரு மாற்றத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே மனுநீதி நாள் மாதத்திற்கு ஒன்று என்று இருந்தது. இன்றையதினம் ஒரு வாரத்திற்கு ஒரு நாள் கண்டிப்பாக நடத்தப்பட வேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) பின்னால் இருந்து பேசக்கூடாது சரியாகப் படிக்கவேண்டும், . வாரத்திற்கு ஒரு தடவை கண்டிப்பாக நடத்தப்படவேண்டும் என்பதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, மனுநீதி நாள் நடத்தாத கிராமமே இருக்கக்கூடாது என்கிற நிலையையும் இன்றையதினம் கொண்டுவந்து இருக்கிறார்கள், அப்படிக்கொண்டு வந்திருப்பது சரியானது.

*பிற்பகல் 12-05*

உட்புறமாக இருக்கக்கூடிய கிராமப் பகுதிகளில் போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் இன்றையதினம் அவர்களுக்கெல்லாம் வாகன வசதி இல்லாததால் சம்பந்தப்பட்டிருக்கிற துறையினுடைய அதிகாரிகள்-கோட்ட வளர்ச்சி அதிகாரிகள், மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள்-சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தகவல் கொடுத்து உடனடியாக நீங்களெல்லாம் வந்து ஒரு இடத்திற்குப் போய் அந்த இடத்தில் பதில் சொல்லவேண்டும். மனுக்களைப் பெறவேண்டும் என்பதற்காக அழைக்கக்கூடிய திட்டத்தை இந்த மனுநீதி நாளிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இது உண்மையிலேயே வரவேற்கத் தக்கது. ஆனால் இப்போது யாரும் அப்படிப் போவதில்லை, எந்த பஸ்ஸூம் போவதில்லை, வாகனமும் போவதில்லை. இன்னும் சொல்லப்போனால் கலெக்டர் வருவார் என்று ஊர் ஊராக 'டாம் டாம்' அடிக்கிறோம். ஆனால் அவர் அங்கே வருவதில்லை, வேறு அரசுப் பணிக்காக அவர் வெளியூர் சென்று விடுவார். மாவட்டத்தினுடைய டி.ஆர்.ஓ. வந்து மனுக்களைப் பெறுவாரா என்றால் அந்த தினத்திலே வரமுடியவில்லை, வேறு அரசுப் பணி இருக்கிறது என்று சொல்லி அவர்கள் போய் விடுவார்கள். இதை எப்போது வந்து சொல்வார்கள். முதல் நாளிலே சொல்வார்களா என்றால் சொல்லமாட்டார்கள். அன்றைக்குக் காலையில் 10 மணிக்கு அதிகாரிகள் வருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற அந்த நேரத்தில்தான் அறிவிப்பார்கள். அந்த ஊர்மக்கள், மனுகொண்டு வருபவர்கள் மாலை கட்டிக்கொண்டு வந்து இருப்பவர்கள், பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுக் கொண்டு இருப்பவர்களெல்லாம் காத்திருந்து இவர்கள் சொன்ன பின்னால் தங்களுடைய பணிகளுக்குப் போகக்கூடிய ஒரு மோசமான நிலைமையிருக்கிறது. இது பல தடவை நடந்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், நானே மனுநீதி நாளுக்குச் சென்று அதிகாரிகள் வரவில்லையென்று திரும்பி வந்திருக்கிறேன். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்காவது காலத்தோடு தகவலைக் கொடுக்கக்கூடிய அளவிற்கு அந்த நிருவாகம் இருக்கிறதா என்று சொன்னால் இல்லாத நிலைமையிருக்கிறது. இதை மாற்றக்கூடிய அளவிற்கு இப்போது நிலைமை வந்திருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்றுதான் அனைத்துத் துறை அதிகாரிகளையும் அதிலே கலந்துகொள்வதற்கான முயற்சிகளை ஏற்படுத்த வேண்டும். பிறகு, வட்டாட்சியர், கோட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர்...(மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

இதிலே பல நல்ல திட்டங்கள். விபத்தினுடைய காப்புறுதித் திட்டங்களெல்லாம் இந்தத் துறைதான் செய்கிறது. இது எப்படி இருக்கிறது என்று கேட்டால், இடிவிழுந்து இறந்துவிட்டாலும் சரி, விபத்திலே இறந்துவிட்டாலும் சரி, முதியோர் பென்சனாக இருந்தாலும் சரி, விதவை பென்சனாக இருந்தாலும் சரி. அதேபோன்று கர்ப்பமுற்ற தாய்மார்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று சொன்னாலும் சரி, எப்படி இந்த வரவு-செலவு இருக்கிறது; எப்படி இந்த மனுக்கள் பரிசீலிக்கப்படுகிறது என்று சொன்னால் அநேகமாக மனு கொடுத்து குழந்தைக்கு 2 வயது வரைக்கும் அந்தத் தாய் சட்டமன்ற உறுப்பினருக்கு மனு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மூன்று மாதங்களுக்கு முன்பாகவே கருவுற்ற தாய்மார்களுக்கான நிதி கொடுக்கவேண்டும் என்று நான் மனு கொடுத்தேன்; ஆனால் குழந்தை பிறந்து மூன்று மாதமாகிறது, 4 மாதமாகிறது, ஒரு வருடமாகிறது, எங்களுக்கு நிவாரணம் கொடுக்கவில்லை, ஆகவே நடவடிக்கை எடுங்கள் என்கிறார்கள். இது எவ்வளவு பெரிய கேலிக்கூத்தாக இருக்கிறது.! எப்படி நிருவாகம் இருக்கிறது என்பதை உணர்ந்து இதை ஒழுங்குபடுத்தக்கூடிய விதத்தில்

இந்த நிருவாகத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று பாம்பு கடித்து இறக்கக்கூடியவர்கள், இடி விழுந்து இறக்கக்கூடியவர்கள், விவசாயத்திலே வேலைபார்க்கக் கூடியவர்கள், விபத்திலே இறந்துபோனவர்களுக்கும் உடனடியாக அங்கேயே பரிசீலனை செய்து அவர்களுக்கு 30 நாட்களுக்குள் கொடுக்கக்கூடிய அந்த நிவாரண உதவித் தொகை ஏன் இன்றைக்கு கிடைக்காத நிலையிருக்கிறது? என்னுடைய அனுபவம்-- அநேகமாக 3 ஆண்டு காலமாக ஒரு பெண் விவசாய வேலையிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது இறந்து போனதற்குப் பின்னர் நான் நேரடியாக தலையிட்டும் இன்றைய வரையிலும் நிவாரணத் தொகை வாங்கிக் கொடுக்க முடியவில்லை. ஒன்றுபட்டிருக்கிற மாவட்டம் இரண்டுபட்டது. இரண்டுபட்ட மாவட்டம் மூன்றாக ஆகிவிட்டது. மூன்று ஆட்சித் தலைவர்கள் வந்துவிட்டார்கள். இன்னும் கோப்பில் கையெழுத்துப் போடமுடியவில்லை. இது ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டத்தில் நடந்தது. இப்படியாக நிருவாகம் இருக்கிறது. அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால் நிருவாகத்தின் இயந்திரங்களாக இருக்கக்கூடிய நிருவாக அலுவலர்களின் பற்றாக்குறையின் காரணமாக நாங்கள் அனைத்துப் பணிகளையும் செய்ய முடியவில்லை; ஆகவே நீங்கள் கொடுக்கக்கூடிய மனுக்களெல்லாம் இங்கே அநேகமாக சிகப்பு நாடாக்குள்ளேயே தேங்கி நிற்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். எனவே, பற்றாக்குறையாக இருக்கக்கூடிய நிருவாக அதிகாரிகளை நீங்கள் நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-10

அதேபோல் கிராமத்திலே இருக்கக்கூடிய வி.ஏ.ஓ.-க்கள், கிராம நிருவாக அதிகாரிகள். அவர்களைப் பற்றி பல தடவை நான் இந்தச் சட்டமன்றத்தினுடைய, அதிகாரிகளினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறேன். இன்றைக்கு சாதாரணமாக எந்த ஒரு சான்றிதழ் வாங்க வேண்டும் என்றாலும், ஜாதிச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ், பள்ளிச் சான்றிதழ் போன்ற எந்த ஒரு சான்றிதழைப் பெறவேண்டும் என்று சொன்னாலும், முதலிலே தாசில்தாரிடம் மனு கொடுத்து, அவர் ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்குக் கொடுத்து,



ரெவின்யூ இன்ஸ்பெக்டர் நேரடியாக வில்லேஜ் ஆபீசருக்குக் கொடுத்து, அவர் அதை வாங்கி ஒரு சீலை குத்தி, கையெழுத்துப் போட்டு, திரும்பவும் ஆர்.ஐ.யிடம் கொண்டு வந்து, அவர் ஒரு சீலை குத்தி கையெழுத்துப் போட்டு, அதற்குப் பின்னால், தாசில்தாரிடம் கொண்டு போய்க் கொடுத்தபிறகு, ஒரு பெட்டியிலே அது அடங்கியிருக்கும். இதற்கு எத்தனை தடவை அலைவான்?. கிராமப்புறங்களிலே இதற்கெல்லாம் அலைந்து அலைந்து செல்ல வேண்டியுள்ளது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. எனவே, இதிலே ஒரு மாற்றம் வரவேண்டும். தாசில்தாரிடம் கொடுத்தால், வி.ஏ.ஓ-விற்கு நேராகப் போகவேண்டும். ஆர்.ஐ.யிடம் போகவேண்டிய அவசியமே இல்லை. அப்படியாவது நீங்கள் ஒரு முறையைக் கொண்டுவருவதற்கான முயற்சியிலே ஈடுபடவேண்டும் என்று நான் சொல்கிறேன். அதேபோன்று சான்றிதழ்களை ஒரு எளிதான முறையிலே அவர்கள் பெறக்கூடிய வகையிலே நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.

அதேமாதிரி ஜாதி சான்றிதழ்கள். வருடக் கணக்கிலே பல பேர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்றத்திலே அமைச்சர் அவர்களிடம் கேள்விகளைக் கேட்கின்றபோது, பல்வேறு பதில்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஜாதி சான்றிதழ்களை வழங்குவதைப் பொறுத்தவரையில், வரையறுத்து, இன்னின்ன ஜாதிகளுக்கு தான் வழங்கப்படும் என்று வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒரு போர்டாவது வையுங்கள், இப்படி உள்ள ஜாதியினர்தான் கேட்க வேண்டும் என்று சொல்லி போர்டு வையுங்கள். அவர்கள் அலையாமலாவது இருக்கட்டும். அவர்கள் எங்கேயோவெல்லாம் அலைந்து பார்த்துவிட்டு, 6 மாதம் கழித்து, சட்டமன்ற உறுப்பினர்களிடம், நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வந்து, அவர்களைப் பிடித்து, சான்றிதழ் வாங்கிக் கொடுங்கள் என்று கேட்கக்கூடிய அளவுக்கு இப்போது நிலைமை இருக்கிறது.

அதேமாதிரி மாவட்டப் பிரிவினைகளைப் பற்றி, ஒன்றிய வட்டப் பிரிவினைகளைப் பற்றி இன்றைய தினத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அநேகமாக பல மாவட்டங்களுக்கு அலுவலகங்கள் கட்டுவதற்காக நிதி எல்லாம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம் பரிசீலிக்கிற இடத்திலே இருக்கிறது. அநேகமாக அந்தத் திட்டம்

நிறைவேறும் என்று நம்புகிறேன். அதற்குரிய இடங்கள் எல்லாம் இன்றையதினம் பார்வையிடப்பட்டு, அந்த வளாகங்களைக் கட்டுவதற்கான இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றன. எனவே, ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்திற்கு நீங்கள் நிதி ஒதுக்கிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள-ஏற்கெனவே வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஒரு பதிலைச் சொன்னார்கள்--தலைஞாயிறு என்ற ஊரை தலைமையிடமாகக் கொண்டு வட்டாட்சியர் அலுவலகம் ஒன்றை உருவாக்க வேண்டும். அதேபோல் திருவாரூரைச் சேர்ந்த திருக்குவளையை ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்திலே இணைக்க வேண்டும். அப்படி இணைப்பதன் மூலமாகத்தான் ஊர்களுக்கு சிக்கல் இல்லாமல், அதைக் கொண்டுவர முடியும். அன்றைக்கு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்கூட அறிவித்தார்கள். அந்தத் தலைஞாயிறு என்பதினுடைய தாலுகா தலைநகரம் வேதாரண்யத்திலே இருக்கிறது. அங்கேயிருந்து 40 கிலோ மீட்டர் சென்று வரவேண்டியிருக்கிறது. ஆகவே, தலைஞாயிறு ஒன்றியம்தான் அதற்குப் பொருத்தமான இடம். எனவே, அங்கே வட்டாட்சியர் அலுவலகத்தைத் துவக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று திருத்துறைப்பூண்டியினுடைய வட்டாட்சியர் அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து முத்துப்பேட்டையை தலைமையிடமாகக் கொண்ட வட்டாட்சியர் அலுவலகத்தை துவக்க வேண்டும். மன்னார்குடியில் உள்ள கோட்ட வருவாய் அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து திருத்துறைப்பூண்டியைத் தலைமையிடமாகக் கொண்டு நீங்கள் துவக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று கோட்டூர். இந்த கோட்டூர் என்பது மன்னார்குடி ஒன்றியத்திலே இருக்கக்கூடிய பெரிய வட்டமாக இருக்கிறது. எனவே, மன்னார்குடியை இரண்டாகப் பிரித்து, கோட்டூரை மையமாக கொண்ட ஒரு வட்டாட்சியர் அலுவலகத்தைத் துவக்க வேண்டும். அப்படித் துவக்கினால்தான் நல்லது. இது எல்லாம் பெரிய பஞ்சாயத்து.



***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்த ஒரு செய்தியைப் பற்றி ஒரு கோரிக்கை வைக்கிற காரணத்தால் ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். மன்னார்குடி ஒன்றியம், கோட்டூர் ஒன்றியம் இரண்டும் சேர்ந்துதான் மன்னார்குடி வட்டம். கோட்டூர் ஒன்றியத்தையும், ஒரு வட்டமாக ஆக்கினால், மன்னார்குடியும் ஒரேவொரு ஒன்றியம் உள்ள ஒரு வட்டமாகும். ஒவ்வொரு ஒன்றியமும் ஒரு வட்டமாக ஆவது தற்கால சூழ்நிலையில் இயலாத ஒன்று.

**திரு. ஜி. பழனிசாமி:** மாற்றுத் தலைவர் அவர்களே, மக்களுடைய தொகை, எண்ணிக்கையினுடைய அடிப்படையிலே அதைப் பாருங்கள். ஒன்றிய அளவுகூட பார்க்க வேண்டாம். மக்களுடைய எண்ணிக்கையினுடைய அளவுகோலைப் பார்த்தோம் என்று சொன்னால்தான் அவைகளைப் பிரிப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்க முடியும். அதனால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். மக்கள் தொகை அடிப்படையில் அந்த வட்டங்களைப் பிரிப்பது சாத்தியமாக இருக்கும். அவர்களுடைய தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** சீக்கிரம் பேசி முடியுங்கள். நேரமாகிவிட்டது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதேபோல் கொரடாச்சேரி. திருவாரூருக்கு அருகிலே இருக்கிற கொரடாச்சேரியை இரண்டாகப் பிரிக்க வேண்டும். அதேபோல் கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள எட்டையபுரம். மாண்புமிகு உறுப்பினர் அய்யலுசாமி அவர்கள் இதுகுறித்து ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இதுகுறித்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் தொடர்ந்து--, என்னோடு அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினராக இருந்தபோது தொடர்ந்து-- இந்தக் கோரிக்கையை வைத்துக் கொண்டிருப்பார்கள். எனவே, எட்டையபுரத்தில், பாரதி பிறந்த மண்ணில் ஒரு வட்டத்தைத் துவக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்திக் கொண்டிருப்பார்கள். அதையும் நீங்கள் துவக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஆவுடையப்பன்.

*பிற்பகல் 12-15*

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த மானியத்தின்மீது உரையாற்ற வாய்ப்பளித்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும் நன்றியைக் கூறி, எனது உரையைத் துவக்குகின்றேன்.

ஒரு நாட்டினுடைய முதுகெலும்பு என்பது கிராமங்களாகும். அந்தக் கிராமங்கள் வளர்ச்சி பெற்றால்தான் ஒரு நாடு முன்னேறுகிறது என்பதை உணரமுடிகிற அளவில் இன்றையதினம் கிராமங்கள் முன்னேறி இருக்கின்றனவா; கிராமத்தினுடைய முன்னேற்றத்திற்கு ஆளுகின்ற அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் இன்றையதினம் நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

முந்தைய காலத்தில் மணியக்காரர்கள், கர்ணம், கணக்குப் பிள்ளைகள் என்று பரம்பரையாக அவர்கள் இருந்துவந்தார்கள். அதற்குப் பின்பு அவர்களை இரவோடு இரவாக வீட்டிற்கு அனுப்பிவிட்டு, அரசு அலுவலர்கள் என்ற முறையில் வி.ஏ. ஓ.--க்கள் நியமிக்கப்பட்டார்கள். இப்போது நியமிக்கப்பட்டிருக்கின்ற வி.ஏ.--ஓ.க்கள் அரசு அதிகாரிகளாகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர, நாட்டு மக்களிடம் - கிராம மக்களிடம்-- தொடர்பு கொண்டு, அவர்களுடைய கோரிக்கைகளை, அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுகின்றவகையில் அவர்களுடைய பணி அமையவில்லை. அவர்களுக்குள் -- 'அசோசியேஷன்' - சங்கங்கள் வைத்துக் கொண்டு, இன்றையதினம் நாட்டு மக்கள், கிராம மக்களுடைய தேவைகளைச் செயல்படுத்த முன்வராத நிலை இருந்துகொண்டிருக்கிறது. நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வதெல்லாம், இன்றையதினம் அரசு அதிகாரிகளாகச் செயல்படக் கூடிய அந்த வி.ஏ.ஓ.--க்களை தாலுகா அலுவலகங்களில் எழுத்தர்களாக நியமனம் செய்து, மீண்டும் அந்தந்த கிராமத்தில் அந்தக் கிராம மக்களிலே படித்த ஒருவரை கிராம நிர்வாக அதிகாரியாக நியமனம் செய்தால், அந்தக் கிராமத்தில் இருக்கக்கூடிய மக்களோடு ஒன்றி, அவர் பழகுகின்ற வாய்ப்பும், அந்த மக்களுடைய தேவைகளை உணர்ந்து, அதற்குரிய



நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய நிலையும் இருந்துவரும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி நியமிக்கப்படுகிற நேரத்தில் அவர்கள் தவறு செய்வதற்கும் வாய்ப்புகள் குறைவாக இருக்கும் என்பதையும் நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராம நிருவாக அதிகாரிகள் இருந்த காலத்தில் ஒரு கிராமத்தில் ஒரு குற்ற நிகழ்ச்சி நடைபெற்றது என்றால், அவரிடம் போய் புகார் செய்தால், அவர் யாதாஸ்து தயார் செய்து, அந்தப் புகாரையும் தயார் செய்து, அதை நீதிமன்றத்திற்கு ஒன்றும், தாலுகா அலுவலகத்திற்கு ஒன்றும், காவல் நிலையத்திற்கு ஒன்றும் அனுப்பி வைப்பது வழக்கம். ஆனால் இப்போது இருக்கக்கூடிய கிராம நிருவாக அதிகாரிகள் அப்படி யாதாஸ்து புத்தகம் என்ற ஒன்று இருக்கிறதா என்பதை மறந்த சூழ்நிலையில் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். பழைய காலத்தில் அது இருந்தது என்றால், கடந்த காலத்தில் அது இருந்தது என்றால், அந்தக் கிராமத்தில் ஒரு குற்ற நிகழ்ச்சி நடைபெற்றது என்றால், அதில் சம்பந்தப்பட்டவர் யார், அந்தக் குற்றத்தைப் புரிந்தவர் யார், அதில் பாதிக்கப்பட்டவர் யார் என்பதை உடனடியாக அந்தக் கிராம அதிகாரியிடம் புகார் செய்தால், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வது வழக்கம். ஆனால் இன்றையதினம்.. யாதாஸ்து புத்தகம் இருக்கிறதா, அப்படி ஒரு புகார் தயார் செய்யப்பட வேண்டுமா, நீதிமன்றத்திற்கு அது அனுப்பப்பட வேண்டுமா என்பதுகூட தெரியாத நிலையில், கிராம நிருவாக அதிகாரிகள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பழைய நிலை, அதாவது யாதாஸ்து தயார் செய்து நீதிமன்றத்திற்குப் புகார் மனுவை அனுப்புகின்ற அந்த நிலை, மீண்டும் கொண்டுவரப்பட வேண்டுமென்று நான் இங்கே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

அதேபோன்று இன்றையதினம் 1963-ஆம் ஆண்டு பிறப்பு இறப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு சட்டம் அமலுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால், 1963-க்கு முன்பாகப் பிறந்தவர்களோ அல்லது 1963-க்கு முன்பாக இறந்தவர்களோ பதிவு செய்யாமல் இருந்தால், அதற்கு விளக்கம் அந்தச் சட்டத்தில் இல்லை. இப்போது, கிராம நிருவாக

அதிகாரிகளிடம் போய் பதிவு செய்வோம் என்றால், அவர் அந்த நேரத்தில் இல்லாமல் இருந்தாலோ அல்லது பதியாமல் விட்டுச் சென்றுவிட்டாலோ, திரும்பவும் நீதிமன்றத்திற்குத்தான் அதைப் பதிவதற்காகச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அதை நீக்கி தாலுகா அலுவலகத்திலோ அல்லது மீண்டும் ஒரு வருடத்திற்குப் பின்பாகவோ அதை வி.ஏ.ஓ.-விடம் பதியக் கூடிய ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். மேலும், பிறப்பு, இறப்பு பதிவு செய்வதைப் பொறுத்தமட்டில் 'retrospective effect' என்று சொல்வார்களே அந்தமாதிரி ஒரு அமைப்பு அதில் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த 'retrospective effect' -ஐ 'Birth and Death Registration Act, 1963' சட்டத்தில் கொண்டுவர வேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, இப்போது இருக்கின்ற நிலையில் நீதிமன்றத்திற்குச் சென்று அந்த 'Birth and Death Registration' அதாவது பிறப்பு, இறப்பு காலத்திற்காக நாம் பதிவு செய்யச் செல்வோம் என்றால், இதற்காக பேப்பர்களிலே விளம்பரங்கள் கொடுத்த பின்பு பல இன்னல்களுக்கு உள்ளாக்கப்படக் கூடிய சூழ்நிலை இருந்து கொண்டு இருக்கின்றது. பேப்பர்களிலே விளம்பரம் கொடுப்பதன் மூலம் அதிகமான செலவுகளை அந்தப் பதிவு செய்பவர்களுக்கு உருவாக்கக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, இந்தப் பேப்பர்களிலே விளம்பரம் கொடுப்பதையெல்லாம் தவிர்த்து, எளிதான முறையில் பிறப்பு, இறப்பு பதிவு செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, இப்போது ஜாதி சான்று வாங்க வேண்டும் என்று சொன்னால், ஜாதி சான்று கொடுப்பதற்கு தாசில்தார்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, 1986-க்கு முன்பாக கொடுக்கப்பட்ட சான்று, அதாவது இப்போது இருக்கக் கூடிய மாணவன், அந்த மாணவனுடைய தந்தை எஸ்.டி. என்ற 'சோளகர்' சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்றாலும், காட்டுநாயக்கர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்றாலும், அவர் எஸ்.டி. சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்று சர்டிபிகேட் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், இப்போது இருக்கக்கூடிய மாணவன் போய் தனது தந்தைக்குக் கொடுத்தது போல் அதே ஜாதி சான்று எஸ்.டி. என்று எனக்கு வேண்டும் என்று கேட்டால் அதைக் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். அதற்காக இங்கேகூட ஒரு 'மானுவல்' என்னிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.



அந்த 'மானுவலிலே' 'கைட்லைன்' கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 'கைட்லைன்லே' 'சோளகர்' சமுதாயத்தை எஸ்.டி. சமுதாயம் என்று குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், 'சோளகா' என்று ஆங்கிலத்திலே எழுதப்பட்டிருந்தால் அது வேறு சமுதாயம், 'சோளகர்' என்று இருந்தால், எஸ்.டி. சமுதாயம் என்று குறிப்பிட்டுள்ளதால் 'சோளகர்' சமுதாயத்தை அந்த மாதிரி ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தால் ஜாதி சான்று கொடுக்க மறுக்கிறார்கள், காட்டுநாயக்கர் ஜாதி சான்றும் கொடுப்பதற்கு இப்போது மறுக்கிறார்கள். இன்றைக்கு அந்த நிலைதான் காட்டுநாயக்கர் ஜாதிச் சான்றைப் பொறுத்தமட்டிலும் கூட நெல்லையில் இருந்து கொண்டிருக்கின்றது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், வட்டாட்சியர் அலுவலகங்களிலே எழுத்தர்களாக பணியேற்ற பின்பு பதவி உயர்வு பெற்று, வட்டாட்சியர்களாக வருகின்றனர். எழுத்தராக பதவியேற்று, பதவி உயர்வு பெறும்போது அவர்கள் நீதிபதிகளாக பணிபுரிந்தாக வேண்டும் என்ற நிலை இருந்து கொண்டிருக்கின்றது. 'Special Judicial Magistrate' என்று சொல்லக்கூடியவகையில் அவர்கள் நீதிமன்றங்களில் நீதிபதிகளாக 3 மாதம் பணிபுரிகிறார்கள். அந்த மூன்று மாதங்களில் அவர்கள் குற்ற வழக்குகளை விசாரணை செய்கிறார்கள். விசாரணை செய்து, தண்டிக்கவும் செய்கிறார்கள். விடுதலையும் செய்கிறார்கள். உதவியாளர்களாக நியமனம் செய்யப்படுகிற அவர்கள், எழுத்தர்களாக பணிபுரிகின்ற அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் சட்டம் படிக்காமலேயே நீதிபதியாகப் பணிபுரிந்து, தண்டனையும் கொடுக்கக்கூடிய நிலை இன்றையதினம் இருந்து கொண்டிருக்கின்றது. அதுமாதிரியான ஒரு நிலையைத் தடுக்க வேண்டும். சட்டம் படித்தவர்கள்தான் நீதிபதியாக பணியாற்ற வேண்டுமென்ற நிலையை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

அதேபோன்று இப்போது நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மாவட்ட ஆட்சியர் என்பவருக்கு வருவாய் சம்பந்தப்பட்டதாகத்தான் அவருடைய பொறுப்பு இருக்கிறது. ஆனால் பொது நிருவாகம் என்பது அவருக்காகக் கூடுதலாக ஒப்படைக்கப்பட்ட ஒரு பொறுப்பு. இந்த வருவாய், பொது நிருவாகம் இரண்டையும் ஒரே அதிகாரி பார்ப்பதன் மூலம் பல

கஷ்டங்கள் ஏற்படுகின்றன. கலெக்டர் அவர்கள் சில இடங்களில்--ஒரு ரெக்கமண்டிங் அதாரிட்டி--ஒரு பரிந்துரை செய்யக்கூடிய அதிகாரியாகத்தான் மற்ற துறைகளில் இருந்து கொண்டிருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் கூறுகின்ற அந்தப் பரிந்துரைகளை ஒரு சில மாவட்டத்தில் இருக்கக்கூடிய பல்வேறு துறையைச் சேர்ந்த அதிகாரிகள் கேட்பதுகூட இல்லை. குறிப்பாகச் சொல்லப்போனால் நெல்லை மாவட்டத்தில்--எஃப்.டி - ஃபீல்டு டைரக்டர் என்று சொல்லக்கூடிய வன இலாகா அதிகாரி. மாஞ்சோலைக்கு பஸ் சென்றுகொண்டிருந்தது. கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்பு அந்த பஸ் நிறுத்தப்பட்டுவிட்டது. ஏன் நிறுத்தப்பட்டது என்றால் வன விலங்குகளுக்கு இரவு நேரங்களில் தொந்தரவு கொடுக்கக்கூடாது. அதனால் பஸ்ஸை நிறுத்திவிட்டோம் என்று கூறுகிறார்கள். ஆனால் அதே சாலையில் தனியார் வாகனங்கள் செல்கின்றன. தனியார் வாகனங்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் அரசு வாகனங்களை மட்டும் இன்றையதினம் தடை செய்திருக்கிறார்கள். கலெக்டர் பலமுறை பரிந்துரை செய்தும் எஃப்.டி. அவர்கள் பொதுமக்களுக்கு உதவுகின்ற விதத்தில் பஸ்களை விடுவதற்குத் தயாராக இல்லை. அந்த அளவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்தும் பல்வேறு துறையில் இருக்கக்கூடிய மாவட்ட அதிகாரிகள் கேட்காமல் கூட இருக்கக்கூடிய வாய்ப்புகள் இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** சீக்கிரமாக உரையை முடியுங்கள்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, வன இலாகா அதிகாரிகள் இதற்கு முன்பு மாடுகள் அல்லது கால்நடைகள் போய் அந்த வனங்களில் மேய்ந்தால் அதற்கு அபராதம் விதிப்பதில்லை. பாஸ் கொடுத்திருக்கிறார்கள். உரிய கட்டணத்தைக் கொடுத்தால் பாஸ் கொடுத்திருந்தார்கள். ஆனால் இன்றையதினம் ஒரு மாடு வனத்தில் போய் மேய்ந்தால் அதைப் பிடித்து வைத்துக்கொண்டு 500 ரூபாய் வசூல் செய்யக்கூடிய, அபராதம் விதிக்கக்கூடிய நிலை இருந்துகொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பலமுறை எடுத்துச் சொல்லியும் இன்றையதினம் அந்த வன இலாகா அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையைக்கூட கேட்க மறுக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



இங்கே தமிழ் வளர்ச்சிக்காக ஒரு அமைச்சரைக்கூட தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் நியமித்திருக்கிறார்கள். இப்போது நெல்லை மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயே ஹுசூர் சிரஸ்ததார் என்று ஒரு போர்டு தொங்கிக் கொண்டிருப்பதை என்னால் பார்க்க முடிகிறது. அந்த ஹுசூர் சிரஸ்ததார் என்பவர் ஹோசூரிலிருந்து வந்தாரா என்னவென்றுத் தெரியவில்லை. அந்த ஹுசூர் சிரஸ்ததார் என்ற போர்டை உடனடியாக மாற்றுவதற்கு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தினுடைய ஆட்சியாளர் அலுவலகத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களை உள்ளடக்கிய ஒரு ஆட்சிமொழிக் கருத்தரங்கு நடைபெற்றது. அங்கேயே அவர் அதைத் தெரிவித்திருந்தால் உடனே அவர்கள் திருத்தியிருப்பார்கள். என்றாலும் ஒவ்வொரு மாவட்டத்தினுடைய பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் மாண்புமிகு உறுப்பினர்கள்தான். அவர்கள் சுட்டிக்காட்டினால் உடனடியாகத் திருத்தி அவர்கள் மாற்றம் செய்துவிடுவார்கள். எனவே உறுப்பினர் அவர்களே அந்த முயற்சியை மேற்கொண்டு அதற்கான சிறப்புக்களை அவரே பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்பவர்களுக்கும்தான் இன்றையதினம் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுகிறது; வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** மானியக் கோரிக்கைகளைத் தாண்டிப் போகிறீர்கள். நேரம் இல்லை. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களானாலும்

அவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற நிலையை இந்த அரசு உருவாக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். இதற்குக் காரணம் என்னவென்றால் நான் எனது தொகுதிக்குச் சென்றபோது பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்னிடம் வந்து வீட்டுமனைப் பட்டா வேண்டும்; வீடு கட்டித்தர வேண்டும் என்று கேட்டார்கள். நான் அங்கே என்னுடன் வருகை தந்திருந்த அதிகாரிகளிடம் கேட்டேன். அவர்கள் குறிப்பிட்ட தொழிலைச் செய்பவர்களுக்குத்தான் வீடு கட்டிக் கொடுக்க முடியும்; குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வீடு கட்டிக் கொடுக்க முடியும் என்று கூறினார்கள். அந்த நிலை மாறி பொருளாதார நிலைமைக்கு ஏற்ப அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவுகள் வழங்கவேண்டுமென்று பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

பிற்பகல் 12-30

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்தத் தாக்கீதும் வருவது இல்லை. உதாரணமாகச் சொன்னால் ஒவ்வொரு துறையிலிருந்தும், வாரியத்திலிருந்தும் வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கீடுகள் எவ்வளவு; அடுத்து தேர்ந்தெடுக்கப்படும் பணிகள் என்ன என்பதை எல்லாம் எந்த ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து தெரியப்படுத்துவது இல்லை. அதையெல்லாம் மாற்றி இந்த மாவட்டத்தில் என்னதான் நடக்கிறது என்பது அந்த மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றவகையில் அதை அனுப்பி வைக்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நன்றி சொல்லிவிடுகிறேன்.

நெல்லை செழிக்க திட்டங்கள் தீட்டி அணைகள் 5 கட்ட நிதி ஒதுக்கீடு செய்துள்ள அரசு வாழ்க, அரசுக்குத் தலைமை ஏற்று இருக்கும் தலைவர் வாழ்க என்று தமிழ் மக்கள் வாழ்த்துகிறார்கள் என்று கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** அடுத்து திரு. பி.என். வல்லரசு.

***திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாவட்ட நிருவாகம் என்னும் மானியத்தின்மீது நான் சார்ந்து இருக்கின்ற அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். ஒரு மாவட்ட நிருவாகம் சிறந்தால்தான் ஒரு மாநிலத்தின் நிருவாகமே சிறக்கும் என்றால் அது மிகையாகாது. தமிழ்நாட்டில் 29 மாவட்டங்கள் இருக்கின்றன. இந்த 29 மாவட்டங்களில் 29 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இன்று தமிழ்நாட்டு மக்களுடைய பிரச்சினைகளைத் துரிதமாகத் தீர்த்தும், மக்களுடைய நலன்களைப் பாதுகாத்தும், இன்று, துரிதமாக செயல்பட்டுக் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அத்தனை பேரும் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்கு ஒரு கணையாழியாக திகழ்கிறார்கள் என்றால் அதுவும் மிகையாகாது.

எங்களுடைய மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அன்றும், இன்றும் நல்ல மாவட்ட ஆட்சித் தலைவர்களை அரசு நியமித்து மாவட்டத்திற்கு நல்ல ஒரு நிருவாகத்தை வழங்கியிருக்கிறார்கள். அன்று ஒரு திரு. வரதராஜுலு, ஐ.ஏ.எஸ்., அன்று ஒரு திரு. தேவராஜ், ஐ.ஏ.எஸ்., ஒரு சோலை ஐயர், ஐ.ஏ.எஸ்., போன்ற பல ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை எங்களுக்கு வழங்கி இன்று திரு. காசி விசுவநாதன், ஐ.ஏ.எஸ். என்னும் ஒரு சிறந்த நிருவாகியை எங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவராக வழங்கியிருக்கிற கலைஞர் அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் டி.ஆர்.ஓ. என்று சொல்லப்படுகின்ற மாவட்ட வருவாய் அதிகாரி ஆர்.டி.ஓ. என்று சொல்லப்படுகின்ற கோட்டாட்சியர், தாசில்தார் என்று சொல்லப்படுகின்ற வட்டாட்சியர் ஆகிய அத்தனை பேரும் ஒரு சங்கிலிப் பின்னலைப் போல், இன்றையதினம் வருவாய்த் துறை நிருவாகத்தை நிருவகித்துக்கொண்டு வருகிறார்கள்.

அதேபோல், மாவட்டக் காவல் துறை, மாவட்ட நீதித் துறை, மாவட்ட மருத்துவத் துறை, மாவட்ட பொதுப்பணித் துறை, இப்படி பல்வேறு மாவட்டத் துறைகளின் பல்வேறு மாவட்ட அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் ஒருங்கிணைந்து, இன்றையதினம், ஒரு நல்ல நிருவாகத்தைத் தந்து கொண்டிருக்கிறார்கள்.

மாவட்ட நிருவாகத்தில், மத்திய, மாநில அரசுகளுடைய நிதிகளைக் கொண்டு சில, பல மக்கள் நலத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அப்படி மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் மத்திய மாநில அரசுகள் கொடுக்கின்ற அந்த நிதிகளை வைத்து இன்றைய தினம் திட்டங்கள் தீட்டப்படுகின்ற கால கட்டத்தில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களைக் கலந்து ஆலோசித்து அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், மக்களுடைய பிரச்சினையை சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் நன்கு தெரிந்து இருக்கிற காரணத்தால் மத்திய, மாநில அரசுகளுடைய நிதிகளை ஒதுக்கீடு செய்கின்றபோது, திட்டங்களை ஒதுக்குகின்றபோது அவர்களையும் வைத்து கலந்து ஆலோசிக்க வேண்டுமென்று மீண்டும் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்ட நிருவாகத்திலே பொதுமக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்காக இன்றையதினம் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே மனுநீதித் திட்டம், மக்கள் குறை தீர்க்கும் நாள் என்ற இரண்டு பெரிய திட்டங்களை இன்று நம்மால் காண முடிகிறது. இந்த இரண்டு பெரிய திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டு மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்ற ஒரு சிறந்த நிலையைக் கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பிற்பகல் 12-35

மாவட்ட நிருவாகத்தில் ஏற்படுகின்ற குற்றங்களை, குறைகளைக் களையவும், நிருவாகத்தை நவீனப்படுத்தவும், "வருவாய்த் துறை நிருவாகச் சீர்திருத்தக்குழு" ஒன்றை முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகம் அவர்களுடைய தலைமையிலே நியமித்துள்ள கலைஞர் அரசை நான் பாராட்டுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், நிருவாகம் சீராகச் செயல்படவும், மக்களுக்கு அவர்களுடைய தேவையை விரைவாகச் செய்து முடிக்கவும் 4 புதிய மாவட்டங்களை உருவாக்கி இராஜாஜி மாவட்டம், எம்.ஜி.ஆர்.மாவட்டம், வைகை-வீரன் அழகுமுத்து மாவட்டம், ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம் என்று பல்வேறு தலைவர்களுடைய பெயர்களிலே, பெயர் சூட்டி புதிய மாவட்டங்களை உருவாக்கித் தந்திருக்கிற டாக்டர் கலைஞர் அவர்களை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.



ஆனால், அதேநேரத்தில், வெள்ளையரை எதிர்த்து, தென்பாண்டி மண்டலத்தில் முதல் கட்ட சுதந்திரப் போராட்டத்தை நடத்திய மாவீரன் புலித்தேவன் பெயரில் மாவட்டப் பெயரைச் சூட்ட வேண்டுமென்று டாக்டர் கலைஞர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கலைஞருடைய அரசு இன்றையதினம் பொதுமக்களுடைய மனுக்களுக்கு நல்ல முடிவு ஏற்பட வேண்டும், அவர்களுடைய கோரிக்கை துரிதமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்றுதான் இன்று மக்கள் குறை தீர்க்கும் நாளை உருவாக்கியிருக்கிறது. எனவே, அந்த மனுக்களுக்கு ஒரு மாத காலத்தில் நல்ல முடிவு கிடைக்க வேண்டும்; அல்லது கூடினால் 100 நாட்களிலாவது நல்ல முடிவுகள் கிடைக்க வேண்டுமென்று அரசு விரும்புகிறது.

பேறுகால உதவி, விபத்து நிவாரணத் தொகை போன்றவைகள் உரிய காலத்திலே கிடைக்க வேண்டுமென்று அரசு திட்டமிடுகிறது. ஆனால், அவை அத்தனையும் அவ்வாறு நடைபெறுகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில், எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என்ற நிலையில் அன்றைய அமைச்சர்கள் மட்டுமல்லாமல் அதிகாரிகளும் அதிலே மூங்கியிருந்த காரணத்தினால், வட்டாட்சியர் போன்ற அலுவலகங்களில் இன்றையதினம் பிறப்பு இறப்புச் சான்றிதழ் வழங்க வேண்டுமென்றால் ரூபாய் 3,000, ரூபாய் 5,000 என்று கேட்கின்ற நிலை. ஊனமுற்றோர், முதியோர் பென்ஷன் பெற வேண்டுமென்றால் ரூபாய் 200, 300 என்று கேட்கின்ற அவலநிலை. பேறுகால உதவி, விபத்து உதவி போன்ற தொகைகளை வழங்குவதற்கு எதையோ எதிர்பார்த்து, திட்டமிட்டு காலதாமதம் ஏற்படுத்துகின்ற சூழ்நிலை. இப்படியாக அடிமட்டத்தில் ஊழல்கள் இன்று இறக்கை கட்டிப் பறக்கின்றன என்றால் அது மிகையாகாது.

எனவே, மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டும், மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த அரசுக்கு, கீழ் மட்டத்திலே சில தடைகள், அரசு அதிகாரிகள் மூலம் தடைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, மக்களுக்குச் சேர வேண்டிய திட்டங்கள் சேராத காரணத்தினால் அவைகள் யாவும் காகிதத்தில் எழுதப்பட்ட சர்க்கரையாகவே உள்ளன. எனவே, வட்டாட்சியர்

போன்ற கீழ் மட்ட அலுவலகங்களில் நடைபெறுகின்ற முறைகேடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ், பிரமலைக் கள்ளர்களுடைய நலனைப் பாதுகாக்கின்ற, கள்ளர் சீரமைப்புத் துறை ஒன்று இயங்கிக்கொண்டு இருக்கிறது. அந்தக் கள்ளர் சீரமைப்புத் துறையில் எப்பொழுது பார்த்தாலும் ஓய்வு பெறுகின்ற தனித் துணை ஆட்சியர்களே பொறுப்பேற்றிருக்கிறார்கள். 2, 3 மாதத்திலேயே ஓய்வு பெறுகின்ற அதிகாரிகளாகப் பார்த்து, திட்டமிட்டு, ஓய்வு பெறுகின்ற அதிகாரிகளைத் தொடர்ந்து நியமனம் செய்கிறார்கள். சென்ற பட்ஜெட் கூட்டத்தில்கூட நான் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டேன். கள்ளர் சீரமைப்புத் துறைக்கு நியமிக்கும் அதிகாரிகள் அத்தனைப் பேருமே ஓய்வு பெறுகின்ற அதிகாரிகளாக இருக்கின்ற காரணத்தினால், அந்தக் கள்ளர் சீரமைப்புத் துறையினுடைய வளர்ச்சிக்குப் பாடுபடாமல், தாங்கள் செல்கின்ற இடங்களில் கலெக்ஷனிலே கவனம் செலுத்தி, சென்று விடுகின்றார்கள். இன்று கள்ளர் சீரமைப்புத் துறை அழிந்து கொண்டிருக்கிறது. எனவே, இளமையான அதிகாரிகளை, மக்களுக்குப் பணி புரிகின்ற அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று மீண்டும் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

கள்ளர் சீரமைப்புத் துறையில்--மதுரை மாவட்டத்தைப் போலவே, திண்டுக்கல் மாவட்டத்திற்கும், வைகை வீரன் அழகுமுத்து மாவட்டத்திற்கும் ஒரு தனித் துணை ஆட்சியரை நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டிலே 2 கோடி தேவர் இன மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அந்த 2 கோடி தேவர் இன மக்களிடத்திலே ஒரு இனம் புரியாத மன வேதனை, ஒரு ஆதங்கம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கிற 29 மாவட்ட ஆட்சித் தலைவர்களிலே ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர்கூட தேவர் இனத்தைச் சேர்ந்தவர் இல்லை என்ற ஆதங்கம் தேவர் இன மக்களிடையே இப்போது இருந்து கொண்டிருக்கிறது. அதேபோல, தலைமைச் செயலகத்திலேகூட இன்றையதினம் அங்கே உரிய ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளாக தேவர் இனத்தைச் சார்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருந்தும், அவர்களுக்கு முக்கிய பதவிகள்



வழங்கப்படவில்லை என்ற வேதனையும், ஆதங்கமும் தேவர் இன மக்களுக்கு இருக்கிறது என்பதைத் தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று தமிழகத்தில் கிராம நிருவாக அதிகாரிகள் கிராமங்களிலே நிலவரி வசூல் செய்வதையும், கிராம சொத்துக்களைப் பாதுகாப்பதையும் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அலுவலகங்கள் இல்லை. எனவே, கிராம நிருவாக அதிகாரிகளுக்கு அலுவலகங்கள் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு ஓய்வூதியம் கலைஞருடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. அந்த முன்னாள் கிராம நிருவாக அதிகாரிகளுக்கு மாத ஓய்வூதியம் ரூ. 175 கொடுத்துக் கொண்டிருப்பதை ரூபாய் 300-ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மரணமடைந்த முன்னாள் வி.ஏ.ஓ.-க்களுடைய குடும்பங்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ. 100 வழங்கப்படுகிறது. அதை ரூ. 200-ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-40

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீது, கடந்த ஆட்சியிலே தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில், ஆட்சிக்கு உடந்தையாக, ஊழலுக்கு உறுதுணை புரிந்த அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதைத் தமிழக மக்கள் அறிய விரும்புகிறார்கள். அந்த நடவடிக்கையின் காரணமாக இன்றுள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அச்ச உணர்வோடு கோப்புகளை நகர்த்துவதில்லை என்ற ஒரு குறைபாடு இன்று பேசப்பட்டு வருகிறது. எனவே, இன்றையதினம் தலைமைச் செயலகத்திலும், மாவட்ட நிருவாகத்திலும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அச்சப்படுகிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றம் செய்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சிலர் நீதிமன்றத்திலே நிறுத்தப்பட்டிருப்பதையொட்டி அதுபற்றிய முடிவு என்ன என்ற கருத்தைக் கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி நீதிமன்றம்தான் முடிவு

சொல்ல வேண்டும். அதுவரை பொறுத்திருக்க வேண்டும். இரண்டாவது, அதிகாரிகள், தலைமைச் செயலகத்திலேயும்கூட கோப்புகளை நகர்த்துவதில்லை, அதிகாரிகள் அஞ்சுகிறார்கள் என்று சொன்னார்கள். பெரும்பாலான அதிகாரிகள் நேர்மையாக இருக்கின்ற காரணத்தினால் கோப்புகள் நகருகின்றன.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. பி. என். வல்லரசு, ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. பி.என். வல்லரசு:** எனவே, அவை முன்னவர் அவர்கள் கூறியதைப் போல இன்றையதினம் இருக்கின்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடத்திலே அச்சம் போக்கி அவர்கள் சீரிய முறையில் நடவடிக்கை எடுக்க அரசு உதவி செய்ய வேண்டுகிறேன்.

மாவட்டத்திலே வறட்சி ஏற்படுகிறது. புயல் சேதம் ஏற்படுகின்றது. அப்படி வறட்சி, புயல் சேதம் ஏற்படுகின்ற காலகட்டத்தில் மாவட்ட நிருவாகம் பம்பரம் போல் சுழன்று, போர்க்கால அடிப்படையில் அந்த மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட வறட்சி காலத்திலும்கூட மக்களுக்குச் சேர வேண்டிய பலன்கள் முழு அளவில் சேருவதில்லை. இடைத்தரகர்கள் பெற்றுக்கொள்கிறார்கள் என்ற சூழ்நிலையில் மாவட்ட நிருவாகம் அதை மக்களுக்குச் சென்றடைகின்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

தென் மாவட்டங்களில் இன்றைய தினம் ஏற்பட்டிருக்கின்ற கடும் வறட்சி, குடிநீர்ப் பஞ்சம் இவற்றைப் போக்க அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமாயும், அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமாயும் கேட்டுக் கொள்கிறேன்.

அரசு அதிகாரிகள் ஓய்வு பெறுகின்ற காலகட்டத்தில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கின்ற ஒரு சூழ்நிலையிருக்கிறது. என்று அரசு அதிகாரி ஓய்வு பெறுகின்றாரோ அன்று பார்த்து தற்காலிக நடவடிக்கை அல்லது இரண்டு மூன்று நாட்கள் இருக்கின்றபோது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, சட்டப் பிரச்சினைக்காக சில நடவடிக்கைகள் எடுத்தே தீர வேண்டும்.



ஓய்வுபெற அனுமதித்துவிட்டால், பின்னர் சில நடவடிக்கைகள் எடுக்க முடியாது. ஓராண்டு காலம், இரண்டாண்டு காலம் ஒரு குற்றச்சாட்டு பரிசீலனை செய்யப்பட்டாலும்கூட, ஓய்வுபெறுகின்றபோது அந்த அனுமதி வழங்கப்பட்டுவிட்டால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கின்ற உரிமையை அரசு இழந்துவிடுகிறது. ஆகவே, முறையான நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் அந்தக் கடைசி நேரத்திலே அவர்கள் ஓய்வு பெற அனுமதிக்க முடியாத நிலை ஏற்பட்டு அந்த ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதே போன்று, அவர்கள் நல்ல அதிகாரிகளாக இருப்பார்களானால் அவர்கள் ஓய்வுபெறுகின்ற காலகட்டத்தில் உற்சாகப்படுத்த, ஊக்கப்படுத்த, தலைமைச் செயலாளர் மூலமாகவோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவோ நற்சான்றிதழ் வழங்கி அவருக்கு ஒரு மனநிறைவு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் நாட்டினுடைய அமைச்சர்களுக்கு இப்போது சம்பளம் குறைந்த அளவில் இருக்கிறது. நாங்கள் பம்பாய் சென்றிருந்த காலகட்டத்தில், பம்பாய் சட்டமன்ற எம்.எல்.ஏ.-க்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் சம்பளம்-எம்.எல்.ஏ.-க்களுக்கே 10 ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்படுவதைத் தெரிந்து கொண்டோம். இன்றையதினம் கடுமையாகப் பணியாற்றுகின்ற நமது அமைச்சர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்க வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 11-மாவட்ட நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கையில் பேச அனுமதித்த உங்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுடைய அன்றாடப் பிரச்சினையை அலசி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய முழுப் பொறுப்பு மாவட்ட நிருவாகத்திற்குள்ளது. அந்த மாவட்ட நிருவாகம் செம்மையாகச் செயல்பட்டால்தான் அரசினுடைய திட்டங்கள் அனைத்தும் பாமர மக்களைச் சென்றடையும். அதேபோல,

வருவாய்த் துறை. வருவாய்த் துறையும், மாவட்ட நிருவாகமும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து செயல்பட்டால்தான், அரசு, தான் நினைத்த குறிக்கோளை எட்ட முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன். மாவட்ட நிருவாகத்தில் ஒரு அங்கமாக விளங்கக்கூடிய வருவாய்த் துறை எவ்வாறு தூங்கிக் கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாமன்றத்திலே சென்ற 1996-ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், மேட்டூர், இராசிபுரம் ஆகிய மூன்று பகுதிகளையும் இந்த அரசு வறட்சிப் பகுதிகளாக அறிவித்தது. வறட்சிப் பகுதிகளாக அறிவித்தார்களேயொழிய கூட்டுறவு விவசாயக் கடன்களைப் பொறுத்தவரையில், குறுகியகாலக் கடன்களை மத்தியகாலக் கடன்களாகவோ அல்லது மத்திய காலக் கடன்களை நீண்டகாலக் கடன்களாகவோ மாற்றுவதற்கு எந்த ஏற்பாட்டையும் செய்யவில்லை. கூட்டுறவுத் துறை அதிகாரிகளைக் கேட்டால், வருவாய்த் துறையிலிருந்து எங்களுக்கு அந்த மாதிரி தாக்கீது வரவில்லை என்று சொல்கின்றார்கள். வருவாய்த் துறையினரிடம் கேட்டால் அரசிடமிருந்து எங்களுக்கு இன்றுவரை எந்தத் தகவலும் வரவில்லை என்று கூறுகின்றார்கள். ஆகவே, அரசினுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வர விரும்புகின்றேன். ஒரு வட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவித்து என்ன பயன்? மக்களுக்கு, அந்தப் பகுதி வறட்சிப் பகுதி என அறிவித்ததனால், அந்த நன்மைகள் சென்று அடைய வேண்டாமா? ஆகவே, இதைத்தான் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12-45*

அதேபோல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் அந்த விவசாயக் கடன்கள் எல்லாம் தள்ளி வைக்கப்படவில்லை. அந்த அணாவாரி சான்றிதழ்கள் எல்லாம் கொடுக்க முடியாத காரணத்தினால் அந்தக் கடன்கள் எல்லாம் அப்படியே இருந்து, அந்தக் கடன்களை அதிகாரிகள் வசூல் பண்ணிவிட்டார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். தற்போது, இராசிபுரம் அதே போன்று வறட்சிப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால் மீண்டும் இந்த ஆண்டு அந்தப் பகுதியை வறட்சிப் பகுதியாக இந்த அரசு அறிவிக்க வேண்டும் என்று உங்களை நான் கேட்டுக் கொள்கின்றேன்.



அதே போல், மனுநீதித் திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த திட்டமானது முழுமையாகச் செயல்படவில்லை என்று அரசே அறிவித்திருக்கின்றது. அதற்காக பல குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்து மாற்றி அறிவித்திருக்கிறார்கள். ஆறு வாரமாக இருந்தது. நான்கு வாரம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இருந்தபோதிலும், அந்த நான்கு வார காலத்திற்கு முன்பே அங்கு சென்று மனுக்களை வாங்கி பரிசீலனை செய்து, மனுநீதி நாள் அன்று அதற்குத் தக்க பரிகாரம் காண வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய அருமைத் தோழர் திரு. பழனிசாமி அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையேதான் நானும் இங்கே குறிப்பிடுகிறேன். அவர்கள் நான்கு வாரங்களுக்கு முன்பே அந்த இடத்திற்குச் செல்வதில்லை. மனுநீதி நாள் அன்றுதான் அந்தப் பகுதிக்குச் செல்கின்றார்கள். சென்றதற்குப் பின்பு அங்கு கொடுக்கின்ற மனுக்களை வாங்கிக் கொள்கிறார்கள். மனுக்களை வாங்கி, முடிந்தவரை பரிசீலனை செய்கிறார்கள். முடியாதவற்றுக்கு அதிகக் காலதாமதம் செய்கிறார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, மாவட்டப் பிரிவினையைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு இந்த அரசு நான்கு மாவட்டங்களைப் புதிதாக உருவாக்கியிருந்தது. அதிலே, சேலத்தை இரண்டாகப் பிரித்து, நாமக்கல்லைத் தலைமையிடமாக வைத்து இராஜாஜி மாவட்டம் என்ற ஒரு மாவட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. முன்பு, ஆத்தூர், தலைவாசல் ஆகிய பகுதிகளை இந்த இராஜாஜி மாவட்டத்துடன் இணைப்பதற்காக ஒரு திட்டத்தைத் தயாரித்தார்கள். அந்தத் திட்டத்தின்படி இராசிபுரம் மையப் பகுதியாக இருக்கும் நாங்கள் எல்லாம் இராசிபுரம்தான் அதனுடைய தலைநகராக இருக்கும் என்று நினைத்தோம். இருந்தபோதிலும், ஆத்தூர், தலைவாசல் ஆகியவை அந்தப் பகுதியிலே சேராத காரணத்தாலும் எங்களுடைய பகுதியான இராசிபுரம் ஒதுக்குப்புறமாக இருந்த காரணத்தினாலும், நாங்கள் இராசிபுரத்தை தலைநகராக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வற்புறுத்தவில்லை. அடுத்தபடியாக, இராசிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு வருவாய்க் கோட்டம் அமைக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டிருந்தோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட சேலம் வந்தபோது, அதற்காக அனைத்துக் கட்சியினரையும் அவர்கள் சந்தித்தார்கள். அப்போது, ஒரு புதிய

வருவாய்க் கோட்டம் அமைப்பதற்கு இரண்டு வட்டங்கள் தேவை என்றும். இராசிபுரத்தில் ஒரு வட்டம்தான் இருக்கின்றது என்றும், ஆகவே இதிலே சாத்தியக்கூறு இல்லையென்று முதல்வர் அவர்கள் அப்போதே பதில் கூறினார்கள். தற்போது சேந்தமங்கலம் தொகுதியில் இருக்கின்ற கொல்லிமலையை ஒரு தனி வட்டமாக ஆக்க வேண்டும் என்று பல காலமாக நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே கொல்லிமலையைத் தனி வட்டமாக ஆக்கி, இராசிபுரத்தில் புதிய வருவாய்க் கோட்டம் அலுவலகம் அமைத்திட வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாவட்டத் தலைமையிடத்தைப் பார்ப்பதற்காக, அங்குள்ள தலைமையிடக் கட்டிடங்களைப் பார்ப்பதற்காக உயர்மட்டக் குழு நாமக்கல் வந்தது. உயர்மட்டக் குழுவிடம், அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும், எந்தெந்தப் பகுதி எந்தெந்த இடத்திலே இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுக் காட்டினார்கள். அந்த ஆய்வுக் குழுவினர் திருச்செங்கோடு பகுதியிலும், மோகனூர் பகுதியிலும் உள்ள இடங்களைச் சென்று பார்த்தார்களேயொழிய, இராசிபுரம் மக்களுடைய கோரிக்கையான நாமக்கல்லில் இருந்து இராசிபுரம் வரும் வழியில், அதாவது தேசிய நெடுஞ்சாலை 7-ல் நாமக்கல்லிலிருந்து இராசிபுரம் வழியாகச் சேலம் செல்லும் சாலையில் அந்த இடத்தின் எந்தப் பகுதியிலே அமைக்கப்பட வேண்டும் என்ற குறைந்தபட்சக் கோரிக்கையை ஏற்று, அவர்கள் அந்த இடத்தை ஆய்வே செய்யவில்லை என்பதை இந்த மன்றத்தில் மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

தற்பொழுது சேலம் மாவட்டத்தில் எடப்பாடி வட்டம் என்றும், கெங்கவள்ளி வட்டம் என்றும் புதிதாக இரண்டு வட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் கெங்கவள்ளி வட்டத்திலுள்ள தலைவாசல் பகுதி மக்கள், 'கெங்கவள்ளி வட்டத்துடன் இணைய மாட்டோம், எங்கள் பகுதி மீண்டும் ஆத்தூர் வட்டத்தில் இணைய வேண்டும்' என்று போர்க்கொடியைத் தூக்கியிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் உண்ணாவிரதம்கூட இருந்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) இப்போதுதான் பேசவே ஆரம்பித்தேன். அந்தப் பகுதியில் இருக்கிற அனைத்துப் பஞ்சாயத்துத் தலைவர்களும்,



தலைவாசல் பகுதி ஆத்தூரில்தான் இருக்கவேண்டுமென்று அவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே, இதுகுறித்து அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**•மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தலைவாசல் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய அனைவரும் சொல்லவில்லை. ஏற்கெனவே, கெங்கவள்ளி மையப்பகுதியாக இருந்ததால் வட்டத் தலைநகரம் என்று அரசு அறிவித்தது. தலைவாசல் பகுதியில் இருப்பவர்கள், வட்டத் தலைநகர் வேண்டுமென்று கேட்டார்கள். அது அப்போது இயலவில்லை. அவர்கள் கேட்பதெல்லாம் தலைவாசல் ஒன்றியம், கொட்டவாடி ஒன்றியம் ஆகிய இந்த இரண்டை மட்டும் ஆத்தூர் ஒன்றியத்தோடு சேர்க்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதுகூட சாத்தியமாக இருப்பதாக அரசு கருதவில்லை.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நானும் அதே கருத்தைத்தான் கூறுகிறேன். காட்டுக்கொட்டை, தலைவாசல் ஆகிய இரண்டும் ஆத்தூர் ஒன்றியத்தோடு மீண்டும் சேர வேண்டுமென்று அவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதுபோன்று, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில் எங்கள் தலைவர் மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்களுடைய கோரிக்கையான மணல்மேல்குடியில் தாலுகா ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அடுத்தபடியாக, இராஜாஜி மாவட்டத்தில் தற்காலிகமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் துவக்கப்பட்டிருக்கிறது. அங்கு Project Office திட்ட அலுவலகம் இன்னும் வந்து சேரவில்லை. இதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, ஒரு ஆலோசனையைக் கூற விரும்புகிறேன். (சிரிப்பு) ஏன் எதிர்க்கட்சிகள் ஆலோசனை கூறக் கூடாதா? மூன்று அடுக்கு முறை என்று சொல்வார்கள். அதாவது, வட்டாட்சியகம், கோட்டாட்சியகம் மற்றும் மாவட்ட ஆட்சியகம் என்று வருவாய்த்

துறையானது மூன்று அடுக்கு முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நாம் ஒரு வேலையைப் பற்றி வட்டாட்சியரிடம் தெரிவித்தால், அவருக்குள்ள வேலைப்பளுவின் காரணத்தாலும் அவரால் அதைச் செய்ய முடியாத காரணத்தாலும், மாவட்ட ஆட்சியரிடம் அந்த வேலையை விட்டுவிடுகிறார். எனவே, ஒவ்வொரு வேலைக்கும் மாவட்ட ஆட்சியரிடம் சென்று அவரை அணுக வேண்டுமென்பது சிரமமாக இருக்கிறது. எனவே, வட்டாட்சியர் அலுவலகத்தில், டெபுடி கலெக்டர் அந்தஸ்தில் வட்டாட்சியருக்கு மேலே ஒரு அதிகாரியையும், அதுபோல் கோட்டாட்சியர் அலுவலகத்தில் டி.ஆர்.ஓ. அந்தஸ்தில் ஒரு உயர் அதிகாரியையும் நியமித்தால் வேலைகள் மிகவும் எளிதாக நடைபெறும் என்ற ஆலோசனையைக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அடுத்து, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், 1975 ஆம் ஆண்டு மத்திய அரசிடம் போராடி, வாதாடி, குடியரசு தினத்தன்றும், சுதந்திர தினத்தன்றும் ஆளுநர் கோட்டையில் கொடியேற்றுவதற்குப் பதிலாக, முதலமைச்சரே கொடி ஏற்ற வேண்டுமென்று வாதாடிப் பெற்றார்கள். அதை எங்களுடைய ஆட்சிக் காலத்தில் விரிவுபடுத்தி, மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட அமைச்சர்கள் கொடியேற்றலாம் என்று அறிவித்தோம். தற்பொழுது அது நடைமுறையில் இல்லை. ஆகவே, மாவட்டத் தலைநகரங்களில் அமைச்சர்கள் கொடியேற்றவும், தாலுகா அளவில் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடியேற்றவும், ஊராட்சி மன்றத்தில்...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களில் அமைச்சர்கள் கொடியேற்றுவது ஆகஸ்டு 15 அன்றா, அல்லது குடியரசு தினத்தன்றா? கடந்த ஆட்சியில் எப்படி இருந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் சொல்ல வேண்டுமென்று வேண்டுகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஆகஸ்டு 15 அன்று. அடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிறுசேமிப்பு என்ற வகையில் தொகையை



வசூலிக்கிறார்கள். அந்தத் தொகையை எதற்கு வேண்டுமானாலும் செலவு செய்யலாம் என்று இருக்கிறது. அதற்குப் பதிலாக, மாவட்ட அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் சேர்ந்து அந்தத் தொகையை செலவு செய்யலாம் என்று ஒரு மாற்றத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) எங்களுடைய புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் திருச்சியை மாநிலத்தின் தலைநகரமாக மாற்ற வேண்டுமென்று ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் பல காரணங்களால் அது தடைப்பட்டது.

பிற்பகல் 12-55

தற்போது நான் சொல்லிக்கொள்வது நீங்கள் முழுமையாக தலைநகரை சென்னையிலிருந்து திருச்சிக்கு மாற்றவில்லை யென்றாலும்கூட பரவாயில்லை. தற்போது மதுரையிலே உயர்நீதி மன்றக் கிளையை அமைப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்; தென் மாவட்டங்களிலேயிருந்து எதற்கெடுத்தாலும் சென்னைக்கு வரவேண்டுமென்ற நிலையை மாற்றி, திருச்சியை இரண்டாம் தலைநகராக அறிவிப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மற்றும் மாவட்ட நிருவாகம் குறித்த இந்த முக்கியமான மானியக் கோரிக்கைகளின் மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். "எண்சாண் உடம்பிற்கும் தலையே பிரதானம்" என்று சொல்வார்கள். அந்தத் தலையிலிருக்கிற மூளையிலிருந்து நரம்புகள் வழியாக ரத்த ஓட்டம் நடைபெற்று, உடம்பானது சீராக இயங்குகிறது என்று உடலியல் கூறு எடுத்துச்சொல்கிறது. அதைப்போல இன்றைக்கு மூளையாகத் திகழ்ந்து கொண்டிருக்கிற மாநிலத் தலைமை ஆட்சியிலிருந்து, பல்வேறு நரம்புகளாகப் பரவிக் கிடக்கின்ற மாவட்ட நிருவாகம், வட்ட நிருவாகம், ஏனைய நிருவாகங்கள் எல்லாம் இணைந்து இன்றைக்கு இந்த ரத்த ஓட்டமானது, மாண்புமிகு முதல்வர் டாக்டர்

கலைஞர் அவர்களுடைய சீரிய முயற்சியினாலே, சீரான ரத்த ஓட்டமாக, சிறப்பான நிருவாகமாக நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருப்பதை நல்லோர்கள் பாராட்டுகிறார்கள். எனவே நாங்களும் பாராட்டுகிறோம் என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

"அரசன் எவ்வழியோ, குடிகள் அவ்வழி" என்று சொல்வது நம்முடைய தமிழ் மரபு. அந்த வகையிலே பார்க்கிறபோது 1969-ஆம் ஆண்டு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது இந்த மனுநீதித் திட்டத்தை தமிழ்நாட்டிலே அறிமுகப்படுத்தினார்கள். அதுவும் இந்தியாவிலே முதன்முறையாக தமிழகத்தில்தான் டாக்டர் கலைஞர்தான் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள் என்பதைத் தமிழக மக்கள் இன்றைக்கும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறார்கள். இன்றைக்கு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரை மனுநீதிச் சோழனைப் போல மக்கள் காணுகிறார்கள் என்று சொன்னால் அது வெறும் மரபல்ல; வெற்றுப் பேச்சல்ல என்பதை அவர்கள் தமது நடைமுறையிலே நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கன்றைத் தேர்க் காலிலே கொன்றான் என்பதற்காக தாய்ப் பசுவின் கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்பதற்காக, தன்னுடைய ஒரே மகன் என்றாலும்கூட, தவறு செய்ததற்காக தன் மகனைத் தேர்க் காலிலே இட்டான் என்ற சிறப்பு பெற்றவன் மனுநீதிச் சோழன். அத்தகைய சிறப்பான இடத்தைப் பெறுகின்ற வகையிலேதான், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், இந்த அவையிலே 'என்னுடைய மகனே தவறு செய்தாலும்கூட நான் நிச்சயமாக விடமாட்டேன், நிச்சயமாகத் தண்டிப்பேன்' என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பாக வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாங்கள் பெருமையாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகையால் மனுநீதித் திட்டத்தினைக் கொண்டு வந்தார் என்பதற்காக மட்டுமல்லாது நிருவாகத்திலே யார் தவறு செய்தாலும் அதைத் தட்டிக் கேட்கிற நெஞ்சுறுதி படைத்தவராக அவர்கள் இருக்கின்ற காரணத்தால்தான் இன்றைக்குத் தமிழகமானது சிறப்பான நிருவாகத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மனுநீதித் திட்டம் வாரத்திற்கு ஒரு நாள். புதன்கிழமையிலே நடப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.



ஏற்கெனவே கடந்த ஆண்டிலே நடைபெற்றதை ஆய்வு செய்ததன் விளைவாக, அலுவலர்கள் இதிலே போதிய ஆர்வம் காட்டவில்லை என்பதை மனதார ஒப்புக்கொண்டு, இந்த ஆண்டிலேயிருந்து அவைகள் சரிவர அமல்படுத்தப்பட வேண்டுமென்று குறிப்பாக இந்த அரசு இருக்கின்ற காரணத்தினால்தான், இந்த மானியக் கோரிக்கை அறிக்கையிலே சிறப்பான விதிமுறைகளை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதிலும் தயவுதாட்சண்யம் இல்லாமல் இந்த மனுநீதித் திட்டத்தை தள்ளிப்போடுவது, நிறுத்தி விடுவது, அல்லது அதிகாரிகள் அதில் பங்கேற்காமல் தட்டிக் கழிப்பது, ஆகிய இவைகளெல்லாம் இருக்கக்கூடாது என்றவகையிலே விதிமுறைகளை இந்த அறிக்கையிலே சொல்லியிருப்பது, உண்மையிலேயே இந்த நாட்டு மக்களுடைய நலனிலே இந்த அரசு எந்த அளவுக்கு அக்கறை கொண்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுவதாக நாம் பார்க்கிறோம்.

பிற்பகல் 1-00

அதுமட்டுமல்ல, இந்த ஆட்சி ஒரு தூய்மையான நிருவாகத்தை அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான், மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்லக்கூடியவகையில் பல நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஊழலற்ற நிருவாகத்தை அளித்திட 'ஆம்புட்ஸ்மென்' என்ற அமைப்பினை உருவாக்குவதற்கு நீதிபதி இராமானுஜம் அவர்கள் தலைமையில் ஒரு உயர்நிலைக் குழு, ஒளிவு மறைவு இல்லாமல் ஒப்பந்தப்புள்ளி வழங்குகின்ற வகையில், அதற்கு நேர்மையான வழிமுறைகள், பொதுமக்கள் தகவல் பெற உரிமைச் சட்டம், அதேபோன்று, மாண்புமிகு முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகம் அவர்கள் தலைமையில் வருவாய்ச் சீரமைப்புக் குழு, இதுபோன்ற பல்வேறு சிறப்பான திட்டங்களை, நிருவாகம் செம்மையாக நடைபெறுவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். மடியிலே கனம் இல்லையென்றால் போகின்ற வழியிலே பயம் இருக்காது என்பார்கள். அதேபோல, இந்த ஆட்சியானது, இன்றைக்கு மடியில் கனம் இல்லாமல், தான் செல்கின்ற பாதையில் பயமில்லாமல் மிகச் சிறப்பாகப் போய்க் கொண்டிருக்கிறது என்பது ஒன்றே நமக்குப் போதும். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு சீரான, சிறப்பான நிருவாகத்தைத் தந்து கொண்டிருக்கின்றது இந்த அரசு என்பதற்கு எடுத்துக்காட்டாக நாம் எவ்வளவோ எடுத்துச் சொல்லலாம்.

அதேபோன்று, இன்று ஸ்தலத்திலே முடிவு எடுத்து, மனுதாரருக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில் தரப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்ற செய்தியினையும் நாம் கவனிக்க வேண்டும். இதற்கு முந்தைய ஆட்சிக் காலத்திலே நடைபெற்ற குறைபாடுகளை மக்கள் மறந்து விடவில்லை. பலர், பேறுகால உதவி என்பதை, பிள்ளையைப் பெற்ற பின்னால்கூட பெறமுடியாமல் இருந்த நேரமெல்லாம் உண்டு. இன்னும் சொல்லப்போனால், அவர்களுடைய கோரிக்கைகள் மறுக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்ட நேரமெல்லாம்கூட உண்டு. அதேபோல விபத்து உதவிகள் சிலருக்குக் கிடைக்காமலேயே போன நிலைமைகள் எல்லாம் உண்டு. ஆனால், இன்றைக்குப் பேறுகால உதவி, கருவுற்ற 7-ஆம் மாதத்திலிருந்து 30 நாட்களுக்குள் அவர்களுக்கு கிடைத்திடல் வேண்டும்; 30 நாட்களுக்குள் விபத்து நிவாரணம் கொடுக்கப்பட வேண்டும்; முதியோர் உதவித் தொகை 60 நாட்களுக்குள் தரப்பட வேண்டும் என்று காலக்கெடுவினை அறிவித்திருக்கிறார்கள். தாமதிக்கப்பட்ட நீதிகூட அநீதியாகிவிடும் என்ற அடிப்படையிலே, மக்களுக்கு அளிக்கப்படும் உதவிகள் அவர்களுக்குத் தாமதமாகப் போய்க் கிடைப்பதைவிட, அந்த உதவிகளைச் செய்யாமல் இருப்பதே மேலானது என்பதைக் கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அதிகாரிகளுக்கு இத்தகைய காலக்கெடுவினை நிர்ணயித்து, அவற்றைச் சிறப்பாகச்.... செயல்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கையாளுகின்றார்கள் என்று நான் நினைக்கிறேன். எனவே, இந்த முறையை நாங்கள் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அதேபோல, 'நமக்கு நாமே' என்ற திட்டத்தை இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்திலே 'சீரணி' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். இன்றைக்குச் சென்னையிலே இருக்கின்ற சீரணி அரங்கம்கூட அமையப்பெற்றது அத்தகைய சிறப்பான முறையிலே உருவான திட்டத்தின்மூலம்தான். திருவிளையாடல் புராணத்திலே பார்க்கின்றபோது, வைகை ஆற்றிலே வெள்ளம் வந்த போது, ஆற்றின் கரையை அடைப்பதற்கு வீட்டிற்கு ஒருவர் வேண்டுமென்று கேட்ட நேரத்திலே, ஒரு கிழவியின் வீட்டிற்குப் பங்களிப்பாகச் செல்வதற்கு ஆண் மகன் இல்லாதபோது, சிவபெருமானே அந்தக் கிழவிக்காகச் சென்று, பிட்டுக்கு மண்



சுமந்ததாக, திருவிளையாடல் புராணக் கதை சொல்கின்றது. எனவே, அந்தக் காலத்திலிருந்தே, தங்களுடைய தேவையை நிறைவு செய்து கொள்வதற்காக, அந்தப் பகுதி வாழ் மக்களே தங்களுடைய பங்களிப்பை, தங்களுடைய உழைப்பை தானம் செய்திடல் வேண்டும் என்ற நோக்கத்திலே அந்தக் கதை சுட்டிக்காட்டுவதாக நான் கருதுகிறேன். அந்த வகையிலே, இன்றைக்கு 'நமக்கு நாமே' என்ற திட்டத்தை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே சிறப்பாகச் செயல்பட்டு வந்த சீரணித் திட்டமானது, என்ன காரணத்தினாலோ இடையிலே நின்றுபோய் விட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறியாதவர் அல்ல; புரியாதவர் அல்ல. நாட்டு மக்களுடைய நிலைமைகளையெல்லாம் நன்கு உணர்ந்தவர்கள். எனவே, தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள், அண்ணா அவர்கள் உருவாக்கித் தந்த சீரணித் திட்டத்தைப்போல இளைஞர்களுடைய உழைப்பு, நேரம் ஆகியவை பல்வேறு சூழ்நிலைகளிலே விரயம் ஆக்கப்படுவதைத் தடுத்து, பயனுள்ள வகையிலே, நாட்டு மக்களுடைய வளர்ச்சிக்காகப் பயன்படுகின்ற வகையில், நல்ல பல தொண்டுகளை இளைஞர்கள் மூலமாகப் பெற இந்தத் திட்டத்தின் மூலம் வழிவகை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, மக்கள் குறை தீர்க்கின்ற அந்த நாளிலே, அதிகாரிகளை ஊக்கப்படுத்துவதற்காக, துணை ஆட்சியாளரையும், அவர்களுக்கு உதவியாளரையும் நியமித்து, அவர்களுக்கு ஊக்கப் பரிசுகளெல்லாம் வழங்கப்பட்டு வருகின்றன. இதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால், குறைகளைத் தீர்ப்பதற்காக அந்த மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கின்றபோது, ஒருசில நேரங்களிலே, சம்பிரதாயமான முறையிலே பதில் சொல்கின்றார்களே தவிர, பாதிக்கப்பட்டவர்களுக்குச் சரியான வகையிலே அவர்கள் பதில் சொல்வதில்லை. கிராமப்புற மக்கள் மனுச் செய்தால், 'கொரி' என்று சொல்வார்களே, அதைப்போல ஒரு கேள்வியைப் போட்டு, இந்தக் காரணத்திற்காக மறுக்கப்படுகின்றது என்று சொல்லிவிட்டு, அத்தோடு ஓய்ந்து விடுகிறார்கள்.

*பிற்பகல் 1-05*

ஆனால் நியாயமான அவர்களுடைய கோரிக்கையை, ஏதோ ஒரு சிறு நிருவாகத் தவறினை மட்டுமே சுட்டிக்காட்டி மறுப்பது என்பது,

எந்தவகையிலேயும் நியாயமல்ல, ஆகவே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இந்தமாதிரியான சிறுசிறு குறைகளைப் பெரிதுபடுத்தாமல், அந்தக் கிராமப்புற மக்கள் அல்லது ஏழை, நடுத்தர மக்கள் அளிக்கின்ற அந்த மனுக்களின் மீதான முடிவை, அவர்களுக்குப் பயன்தரக்கூடிய வகையிலே, குறித்த நேரத்திலே வழங்கிடல் வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட நிருவாகத்தைப் பொறுத்த அளவிலே, எவ்வளவோ சீர்திருத்தங்களை நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். இருந்தாலும்கூட, சில இடங்களிலே அந்தச் சீர்திருத்த காரியங்களை நடைமுறைப்படுத்துவதிலே, சில ஆட்சியாளர்கள் தயங்குவதாக நான் அறிகிறேன். எடுத்துக்காட்டிற்காக, சென்னை மாவட்டத்திலே இருக்கக்கூடிய ஆட்சியாளர் அலுவலகத்திலே, வெறும் மூன்று மாதங்களே பணி செய்திருக்கக்கூடிய ஒரு வட்டாட்சியரை உடனடியாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால், மாவட்ட நிருவாக சீர்திருத்தக் குழுவினுடைய பரிந்துரை என்னவென்றால், ஓராண்டோ அல்லது ஒன்றரை ஆண்டோ அவர்கள் தொடர்ந்து பணி செய்யலாம் என்ற ஒரு பரிந்துரை இருக்கிறது. ஆகவே, சிலருடைய பணிகள், சில இடங்களிலே பயன்படுத்தப்படுகிறபோது, அங்கே உடனுக்குடனான மாற்றல் என்பது, 3 மாதங்கள் அல்லது 6 மாதங்களுக்குள்ளாக மாற்றல் செய்து கொண்டே இருப்பது என்பது, எந்தப் பணியும் சிறப்பாக நடைபெற காரணமாக இருக்காது என்பதால், மாவட்ட நிருவாக சீர்திருத்தக் குழுவினுடைய பரிந்துரையை ஏற்று, அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே, ஓராண்டோ அல்லது ஒன்றரை ஆண்டோ தொடர்ந்து பணியாற்ற, வட்டாட்சியர்களுக்கு அனுமதி வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர் அலுவலகங்களிலே, போதுமான அலுவலர்கள் இல்லாத காரணத்தினால், அந்த மனுக்களின் மீது நடவடிக்கை எடுப்பது, அங்கே இயலாமல் இருந்து கொண்டிருக்கிறது. அதேபோல், மாவட்ட ஆட்சியர்களும், வட்டாட்சியர்களும் தங்குவதற்கு வீட்டுவசதி இல்லாமல், அவர்கள் தவியாய் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு நிமிடங்களில், நீங்கள் உங்களது உரையை முடித்துக் கொள்ளவேண்டும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** எனவே, மாவட்ட ஆட்சியர்களுக்கும், வட்டாட்சியர்களுக்கும் வீடுகள் கட்டித்தர ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், இறப்பு பிறப்புச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் போன்றவைகளை வழங்கக்கூடிய அதிகாரங்களை--சாதிச் சான்றிதழை வேண்டுமானால், வட்டாட்சியர் அளவுக்குக் கொண்டு செல்லலாம்; ஆனால், இறப்பு பிறப்புச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் போன்றவற்றை வழங்கக்கூடிய அதிகாரங்களை--அந்தந்த வருவாய் கிராம நிருவாக அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சித் தலைவர்களுக்குக் கொடுக்க அனுமதி வழங்கினால், பல நேரங்களிலே அந்த மக்களுக்கு அது எளிமையாகவும், சிறப்பாகவும் பயன்படும் என்ற காரணத்தினால், இதை அரசு கவனிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சட்டப்பேரவை உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கோ, வட்டாட்சியர் அலுவலகத்திற்கோ செல்கின்றபோது, அங்கிருந்து பணி செய்வதற்கு என்று தனி அறை எதுவும் கிடையாது. எனவே, சட்டமன்ற உறுப்பினர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ, அந்த அலுவலகங்களுக்குச் செல்கிறபோது, அவர்கள் அங்கிருந்து பணி செய்வதற்குத் தனி அறையோ, அல்லது அவர்களுக்கு உதவி செய்வதற்கு என்று ஒரு தொடர்பு அலுவலரையோ ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

'பக்கத்து இலைக்குப் பாயசம் கேட்பது' போல, நான் கேட்கவில்லை. இருந்தாலும், இந்த நேரத்திலே, மற்ற உறுப்பினர்கள் சொன்னதைப்போல, நானும் ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர்களுக்கு சம்பளத்தை, மாத ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு ரூபாய் சம்பளம் வாங்குவதாகச் சொல்லிக் கொண்டு, ஊரையே கொள்ளையடிப்பதைவிட, முறையாக சம்பளம் பெற்றுக் கொண்டு, நாட்டு மக்களுக்கு உழைக்கிறவர்களுக்கு,

நேர்மையான முறையிலே, நாணயமான முறையிலே, சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுப்பது, எந்தவகையிலும் தவறாகாது என்ற அடிப்படையிலேதான் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு ஊதியத்தை உயர்த்தி வழங்க வேணடுமென்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய மாவட்ட பிரச்சினை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறோம். எங்களுடைய திருவள்ளுவர் பெரம்பலூர் மாவட்டத்திற்கான தலைநகரினை (குறுக்கீடு) அதாவது மாண்புமிகு அமைச்சர்களுக்கு என்று வருகிறபோது, அது இயல்பாகவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் வழங்குவதற்கு முடியும். ஏனென்றால், கலைஞர் அவர்கள் யாரையும் விட்டுவிடமாட்டார்கள். எல்லோரையும் கருத்திலே கொண்டுதான் காரியம் ஆற்றுவார்கள் என்ற காரணத்தினால்தான், நான் பொதுவாக அமைச்சர்களுக்குக் கூடுதல் சம்பளம் வழங்க வேண்டும் என்று சொன்னேன்.

அடுத்து, எங்களுடைய மாவட்டமான திருவள்ளுவர்-பெரம்பலூர் மாவட்டத்திலே, தலைநகர் பகுதியிலே அலுவலகத்தை அமைப்பதற்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, நானும், எங்களுடைய கட்சி நிறுவனத் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்களும் கொண்டு வந்திருக்கிறோம். அல்லி நகரத்திலோ அல்லது குன்னம் பகுதியிலோ அந்த அலுவலகத்தை அமைக்க வேண்டுமென்று மீண்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அதேபோல், எங்களுடைய கட்சியைச் சார்ந்த சட்டப்பேரவை உறுப்பினர் எடப்பாடி திரு. கணேசன் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். எடப்பாடி வட்டத்தோடு, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தை இணைக்க வேண்டுமென்று அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். எனவே, அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திருக்குவளையைத் தனி வட்டமாக அறிவித்ததற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புக்



கொண்டால், அது நிச்சயமாக அரசே ஒப்புக்கொண்டுள்ளது போலத்தான். (குறுக்கீடு) அப்படியென்றால் சரி. அதனைப் பரிசீலித்து நிச்சயமாக இந்த ஆண்டே அதனை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அடுத்து, செந்துரை, வட்டமாக இருக்கின்ற காரணத்தால் அதற்கு வட்டாட்சியர் அலுவலகம் கட்ட ஒப்பளிப்பு வழங்கியதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், 250 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட அலுவலகம் கட்ட ஒப்பளிப்பு வழங்கியதற்காகவும் இந்த நேரத்திலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், உடையார்பாளையம், பெரம்பலூர் ஆகிய பகுதிகளுக்கு வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கி இருப்பதற்கும் மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

சீரான, சிறப்பான, செம்மையான நிருவாகத்தை வழங்கிக் கொண்டிருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களுடைய இந்த மானியக் கோரிக்கை மிகச் சிறப்பாக நாட்டு மக்களுக்கு மேலும் பல நன்மைகளை அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மனுநீதி திட்டமானது மேலும் பல நன்மைகளை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்களும், மற்றவர்களும் ஒத்துழைக்க தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது பதிலளித்து அவை முன்னவர் பேராசிரியர் அவர்கள் உரையாற்ற இருக்கின்றார்கள். இடையில் நண்பர் திரு. சுந்தரம் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்ட ஒன்றுக்கு நான் அவரிடத்திலே வினா எழுப்பினேன். அமைச்சர்களை எல்லாம் மாவட்டத் தலைநகரங்களுக்கு அன்றிருந்த முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் அனுப்பி பரந்த மனப்பான்மையைக் காட்டிக்கொண்டார்கள்; அதைப்போல அமைச்சர்களை எல்லாம் மாவட்டத் தலைநகரங்களுக்கு அனுப்பிக் கொடியேற்றுகின்ற பணியைச் செய்யச் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டார். நான் அப்போது அவரைத் திரும்பக் கேட்டேன். அவர்கள் அப்படி

அமைச்சர்களை அனுப்பியது ஆகஸ்ட் 15-லா, ஜனவரி 26 குடியரசு நாளிலா என்று கேட்டேன். அதற்கு மாண்புமிகு சுந்தரம் அவர்கள் ஆகஸ்ட் 15 என்று குறிப்பிட்டார். அந்தப் பதிலை அவரிடமிருந்து பெறுவதற்காகத்தான் அதை நான் கேட்டேன். ஆனால் உண்மை அது அல்ல. அவர் சொன்னது தவறான தகவல். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், அமைச்சர்கள் என்மீது ஆதங்கப்படக்கூடாது என்பதற்காக. இவன் மாத்திரம் கோட்டையில் கொடியேற்றுகிறான்; நம்மை எல்லாம் மாவட்டத் தலைநகரங்களுக்கு அனுப்ப சுந்தரம் சிபாரிசு செய்தும்கூட அனுப்ப மறுக்கிறாரே என்று எண்ணிவிடக் கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன்.

அன்றைக்கு முன்னாள் முதலமைச்சரான செல்வி ஜெயலலிதா அவர்கள் அமைச்சர்களை எல்லாம் கொடியேற்றுவதற்கு மாவட்டத் தலைநகரங்களுக்கு அனுப்பியது ஆகஸ்ட் 15 அல்ல, ஜனவரி 26 குடியரசு நாளில்தான் அனுப்பினார்கள். காரணம், ஜனவரி 26 குடியரசு நாளில் கவர்னர்தான் கொடியேற்றுகிறார். ஏற்கெனவே ஆகஸ்ட் 15-லும் கவர்னர் கொடியேற்றினார். ஜனவரி 26-லும் கவர்னர் கொடியேற்றிக் கொண்டிருந்தார். 1969-லே நான் பொறுப்புக்கு வந்த நேரத்தில் அன்றைக்குப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அவர்களோடு வாதிட்டு, பல கடிதங்கள் எழுதி, நேரடியாகப் பேசியதன் காரணமாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள் கொடியேற்றுவதில் என்ன தவறு இருக்கிறது? குடியரசுத் தலைவர் கொடியேற்றுகிற நாளில் கவர்னர் கொடியேற்றிவிட்டுப் போகட்டும், பிரதமர் அங்கே--டெல்லியில் கொடியேற்றும்போது நாங்கள் எங்கள் மாநிலத் தலைநகரங்களிலே கொடியேற்றினால் என்ன என்று கேட்டு, நான் கேட்ட காரணத்தால் இந்தியாவில் உள்ள எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்குக் கொடியேற்றுகின்ற உரிமை, அன்றைக்கு இருந்த இந்தியப் பிரதமர், மறைந்த அன்னை இந்திராகாந்தி அவர்களால் வழங்கப்பட்டது. ஆனால் ஜனவரி 26-ல் எல்லா அமைச்சர்களுக்கும் கொடியேற்றுகின்ற உரிமை மாவட்டத் தலைநகரங்களுக்கு வழங்கப்பட்டதற்கு என்ன காரணம் என்றால், அப்போது இருந்த முதலமைச்சருக்கும், அப்போது இருந்த தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி அவர்களுக்கும் இடையிலே இருந்த கசப்பின் காரணமாக கவர்னர் சென்னா ரெட்டி அவர்கள் குடியரசு நாளில் காந்தி சிலைக்கு அருகே கொடியேற்றுகின்ற நேரத்தில் அமைச்சர்கள் யாரும் இருந்து அவரைக் கௌரவப்படுத்திவிடக் கூடாகு என்பகற்காகத்



திட்டமிட்டு, அமைச்சர்களை எல்லாம் அன்றைக்கு வெளியூர்களுக்கு அனுப்பிய அந்த நிகழ்ச்சியைத் தயவுசெய்து ஒப்பிட்டு, அதைப் பரந்த மனப்பான்மை என்று நண்பர் சுந்தரம் அவர்கள் எண்ணிக்கொள்ள வேண்டாம் என்ற குறிப்பை மாத்திரம் உணர்த்தி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 9, 11 ஆகிய இரண்டு கோரிக்கைகள்மீதும் அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் 9 பேர் இங்கே உரையாற்றி இருக்கிறார்கள்.

இந்தக் கோரிக்கையில் மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்பது பற்றிய குறிப்புகள் எதுவும் அவையில் வைக்கப்படவில்லை. காரணம், மாநில ஆட்சித் தலைவரான ஆளுநருக்காக, அரசியல் சட்டப்படி அளிக்கப்பட வேண்டிய நிதி, செலவுக்கான நிதி, நேர்முகமாக வழங்கப்படுகின்ற ஒரு முறை இருப்பதன் காரணமாக விவாதிக்கப்படுவதில்லை. ஆனால், அதோடு தொடர்பாக, மாநிலத் தடைமைப்பீடமாக இருக்கின்ற தலைமைச் செயலகம், இங்கே வீற்றிருக்கின்ற அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், அது பற்றியும் ஓரளவு, பல்வேறு நிதிநிலை அறிக்கைகள் மூலமாக, நீங்கள் அறிந்து கொள்ள முடியும். குறிப்பாக, அமைச்சர்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டும், சட்டமன்ற உறுப்பினருடைய ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் இங்கே இரண்டு மூன்று மாண்புமிகு உறுப்பினர்களாலே எடுத்துச் சொல்லப்பட்டது. இந்தக் கோரிக்கை ஊதியத்தை உயர்த்துவதற்காக, அந்த அடிப்படையில் எண்ணிப் பார்ப்பதற்கானதல்ல. சட்டமன்றம் என்ற முறையிலே விவாதிக்கப்படுகிறபோது, அந்தக் கருத்து இடம் பெறுவது இயற்கை. இருந்தாலும் கூட, ஊதியத்தை உயர்த்துவது என்பது, இந்தக் கால கட்டத்தில் கருதப்படக்கூடிய ஒன்றாக இல்லையென்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-15

தலைமைச் செயலகத்தினுடைய பணிகளும் சுணக்கப்படுகின்றன, கோப்புகள் வேகமாக நகரவில்லையென்ற ஒரு கருத்து இங்கே

சொல்லப்பட்டது. தலைமைச் செயலகத்தில், பழைய கோப்புகளை எடுத்துப் பார்க்கிறபோது நகர்த்தவே முடியவில்லை, அவ்வளவு அழுத்தமாக, அந்தக் கோப்புகள் பதிந்து போய் இருக்கின்றன. அந்தக் கோப்புகளை நகர்த்துவதிலே சற்றுச் சிரமம் ஏற்பட்டாலும், தொடர்ந்து ஆற்றவேண்டிய கடமைகள் தலைமைச் செயலகத்தாலே முறைப்படி தான் ஆற்றப்படுகின்றன. சில பிரச்சினைகளில் முடிவு எடுப்பதற்குத் தாமதம் ஆகின்ற காரணத்தினால், காலதாமதம் ஆகிறது என்று கருதப்பட இடம் உண்டே தவிர, அவைகள் முறையாகத்தான் நடக்கின்றன.

சில வெட்டுத் தீர்மானங்களில் தலைமைச் செயலகத்திற்கு வருகிறவர்களுக்கெல்லாம், இங்கே தேவையான வசதிகள், உணவு விடுதி, கழிப்பிடங்கள் இவையெல்லாம் வேண்டுமென்ற ஒரு கருத்து, என்ன காரணத்தினாலோ இடம் பெற்றிருந்தது. ஒரு வேளை, அந்த வசதிகள் அதிகமாகுமானால், வேலையே இல்லாமல், இங்கே பல பேர் வர ஆரம்பித்து விடுவார்கள். எனவே, அந்த வசதிகள், இப்போது இருக்கின்ற வசதிகள், போதுமான அளவு இருப்பதாகத் தகுந்த அளவிற்கு விளக்கங்கள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. எனவே, அவை பற்றிக் கருதப்படுவதற்கு அவசியமில்லையென்று இங்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

பொதுவாக, வெட்டுத்தீர்மானங்கள் தருகின்ற நண்பர்கள், 'கொள்கையை விளக்க' என்பதற்காக வெட்டுத் தீர்மானங்கள் தந்திருக்கிறார்கள். அவர்களிலே பல பேர் உரையாற்றி யிருக்கின்றார்கள். உரையாற்றியதன் காரணமாக, கொள்கை விளக்கம், அவர்கள் அதன் மூலமாக, எந்த விளக்கம் பெற வேண்டுமென்று விரும்பினார்களோ, அது இந்த அவைக்கே கிடைத்திருக்கின்றது. எனவே, அந்த அடிப்படையிலே, வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்துவதற்கு அவசியமில்லையென்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக மாவட்ட நிருவாகம் என்று அழைக்கப்படுவது, மாநில நிருவாகத்திற்கு அடிப்படையாக இருக்கின்ற நிருவாகம் என்ற முறையிலே மட்டுமல்லாமல், மக்களோடு நெருக்கமான உறவு தொடர்பு கொண்ட நிருவாகம் என்ற முறையிலேதான் நீண்டகாலமாக, மாவட்ட நிருவாகம் கருதப்பட்டு வந்திருக்கிறது ஒரு காலக் கட்டத்தில், ஆட்சி என்பதே மாவட்ட நிருவாகம்தான். அதுவும் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னால், ஜனநாயக ஆட்சிமுறை



வருவதற்கு முன்னால், மாவட்ட நிருவாகம் நடத்துவதுதான் சமூகத்திற்கே, மக்களுக்கே கிடைக்கிற ஆட்சியினுடைய பயன்கள். எனவே, அவ்வளவு அடிப்படையாக இருந்தது மட்டுமல்லாமல், அரசினுடைய வருமானத்திற்கான வரி என்ற அடிப்படையில், ஒரு காலத்திலே நிலவரிதான், வரியிலேயே மிக முக்கியமான பங்கு வகித்தது. காலப்போக்கில், பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு, ஒரு பக்கம் விவசாயமும் பல்வேறு வகையிலே பாதிக்கப்பட்டு, இன்னொரு பக்கம் சமூக வாழ்க்கை முறையிலே, பல்வேறு மாற்றங்கள் உருவானதன் காரணமாக, 'ரெவின்யூ' என்று சொல்லப்படுகிற அந்தத் தலைப்பிற்குரியதாக மாவட்ட நிருவாகம் எல்லாம் இருந்தாலும் கூட, கிடைக்கிற 'ரெவின்யூ' குறைவுதான்; செலவுதான் அதிகம். அதனால், மொத்தத்திலே, மாநிலத்திலே கிடைக்கிற வருமானத்திலே ஒரு குறிப்பிடத்தக்க பகுதிக்கு மேல் மாவட்டத்தின் மூலமாக, அந்த மாவட்ட மக்களுடைய நலன்களுக்காகச் செலவழிக்கப்படுகிறது என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். எனவே, மக்களை நெருங்குவது, மக்களுடைய தேவையை நிறைவேற்றுவது என்பதில் ஒரு மையமான பகுதியாக இருந்து செயல்படுவது மாவட்ட நிருவாகம். அதை மேலும் மக்களிடத்திலே கொண்டு செல்வது கோட்டாட்சி, அதற்கு மேலும் அதிகம் நெருக்கம் உடையதாக இருப்பது வட்டாட்சி. நடைமுறையில் மக்களோடு தொடர்ந்து செயல்படுகின்ற ஒரு இடமாக அமைந்திருப்பது வருவாய் கிராம நிருவாகம். எனவே, இந்தத் துறை அமைப்பு முறை, நீண்டகாலமாக இருக்கும் அமைப்பு முறை. அவ்வப்போது ஆட்கள் மாற்றப்படுகிறார்கள்; சில வட்டங்களுடைய அளவுகள் மாற்றப்படுகின்றன. இருந்தாலும், மிக நீண்டகாலமாக இருக்கிற அமைப்பு என்பதன் காரணமாக அந்த நிருவாகத்திலே உள்ள குறைபாடுகள் அவ்வப்போது களையப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டிய ஒன்றாகத்தான் இருக்கிறதே தவிர, எல்லாக் குறைகளும் நீங்கியதாக இருக்க முடியாது.

பிற்பகல் 1-20

ஒருமுறை, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லும்போது, 50 பேர் நிற்கிற வரிசையில், முதலிலே இருக்கிற ஒருவன் கையிலே நல்ல பனிக் கட்டியை எடுத்துக்கொடுத்து, கடைசி ஆள் வரையில் கொடுத்தனுப்பச் சொன்னால், அது கடைசியிலே போய்ச்சேருகிறபோது பனிக்கட்டி இருந்த இடம் தெரியாது போய் விடும் என்று சொன்னதைப்போல, தொடர்ந்து நிருவாக

நாட்டினுடைய வளர்ச்சி என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட
ஒன்று. அந்தக் கிராம நிருவாகமே ஒரு குளறுபடிக்கு கடந்த
ஆட்சியில் ஆளாகிவிட்டது. அங்கே உள்ள நிருவாகத்தை நடத்திவந்த
கிராம மணியக்காரர்கள், கிராமக் கர்ணங்கள், இவர்களையெல்லாம்
ஓர் இரவிலே அவர்களுடைய பணியிலிருந்து விரட்டி விட்டதன்
காரணமாக ஏற்பட்டது இந்நிலை. படிப்படியாக முறைப்படி சில
காரியங்கள் செய்யப்பட்டிருக்குமானால் மாற்றம்கூடக் கொண்டு
வரலாம். படிப்படியாகவும், முறைப்படியாகவும் செய்யாமல்,
மொத்தமாக அவர்கள் தூக்கியெறியப்பட்டதன் காரணமாக--அந்த
கிராம நிருவாகத்தை நடத்திக் கொண்டிருந்த, பாரம்பரியம்
உள்ளவர்கள்-இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர் திருநெல்வேலி
தொகுதியைச் சேர்ந்த ஆவுடையப்பன் அவர்களும், திருவோணம்
தொகுதியைச் சேர்ந்த இராமச்சந்திரன் அவர்களும்
சொன்னதைப்போல--அந்தக் கிராம அதிகாரிகள் பொதுமக்களுடைய
மரியாதையைப் பெறுவதற்காகவாவது கட்டுப்பாட்டோடு, ஒரு
நெறியோடு நடந்து கொண்டார்கள். அதே வகையிலே, அதே
உணர்வோடு நடந்து கொள்ளக்கூடியவர்களாக அரசு பின்னர்
நியமித்த கிராம நல அலுவலர்கள் கிராம நிருவாக அலுவலர்களாக
பொறுப்பேற்றுக்கொண்ட அலுவலர்கள் செயல்பட்டதாகக் கூற
முடியவில்லை. அவர்கள் கிராமத்து மக்களுடைய தலைவர்கள்
என்ற முறையிலே முன்னாலே இருந்தவர்கள் பணியாற்றினார்கள்.
இவர்கள், அரசு அலுவலர்கள், நாம் ஏதோ பணியாற்றுகிறோம்
என்ற உணர்வோடு இருக்கிற காரணத்தினால்தான், இங்கே எடுத்துச்
சொல்லப்படக்கூடிய குறைபாடுகளுக்கு ஓரளவுக்கு
இடமளித்திருக்கிறது. இந்த அவையிலே உள்ள மாண்புமிகு
உறுப்பினர்கள் எடுத்துக்கூறிய குறைபாடுகளைக் கிராம நிருவாக
அலுவலர்களாக இருந்து இன்றையதினம் பொறுப்பில் உள்ளவர்கள்
அந்தக் குறைபாடுகளை எண்ணிப்பார்த்து நீக்கிக் கொள்வார்கள்,
அந்தக் குறைபாடுகளுக்கு ஆளாகாமல் இருக்க முயற்சிப்பார்கள்
என்றும் நான் எதிர்பார்க்கிறேன். ஏனென்றால், சட்டமன்ற
உறுப்பினர்கள் எடுத்துச் சொல்வதைவிட அந்தக் குறைபாடுகளை
எடுத்துச் சொல்வதற்கு வேறு யாரும் கிடையாது. இன்னும்
சொல்லப்போனால், இங்கே தரப்படுகிற செய்திகளை அறிகிறபோது,
தங்களுடைய குறைகளைத் திருத்திக் கொள்வதன் மூலமாகச்
சமூகத்திற்கு ஏற்றவர்களாக, மக்களுக்கு ஏற்றவர்களாகத் தங்களை
ஆக்கிக் கொள்ள வேண்டும். எந்தக் கிராமத்திலே பணியாற்ற
வேண்டுமோ அந்தக் கிராமத்திலே, அந்தச் சூழல் உள்ள

வட்டாரத்திலே இல்லாமல்--தங்காமல் வட்டாட்சியர் அலுவலகத்திலே தங்கிக் கொண்டோ அல்லது அங்கே சுற்றிக்கொண்டோ இருக்கக்கூடிய அலுவலர்கள் இருக்கிறார்கள் என்றால் அது ஒரு குறைபாடு. எனவே அப்படி ஏதேனும் சில அலுவலர்கள் பொறுப்பில்லாமல் நடந்து கொள்வார்களேயானால், அந்தச் செய்திகள் அரசுக்குத் தெரியுமானால், மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரியுமானால் உரிய நடவடிக்கை மேற்கொள்வதன் மூலமாக திருத்துவதற்கு, முறைப்படுத்துவதற்கு முயற்சிக்கப்படும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-25

அதுமட்டுமல்ல, குறிப்பாக நம்முடைய தமிழ்நாட்டிலே மாவட்டங்களுடைய அளவு மிகப் பெரியதாக இருப்பதாக நீண்ட காலமாக உணரப்பட்டு வந்து, அவ்வப்போது மிகப் பெரிய மாவட்டங்களாக உள்ளவை பிரிக்கப்பட்டன. அந்த நோக்கத்தில் மாவட்டங்களைப் பிரிப்பதன் மூலமாகச் சீரமைப்புச் செய்து, நல்ல நிருவாகத்திற்கு அடிகோல வேண்டுமென்ற அடிப்படையில்தான், தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு, வைகை-வீரன் அழகுமுத்து மாவட்டம், நாமக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு இராஜாஜி மாவட்டம், திருவாரூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருவள்ளூரைத் தலைமையிடமாகக் கொண்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் என்ற 4 புதிய மாவட்டங்கள் இந்த ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து இயங்கி வருகின்றன.

மாவட்டங்களுடைய பெயர்கள், ஏதோ விருப்பத்தின் அடிப்படையில் யாருடைய பெயரையாவது சூட்டவேண்டுமென்பதற்காக மட்டும் சூட்டப்படுவதில்லை. மாவட்டங்களின் பெயர்கள், அவை அமைந்துள்ள இடங்களின் வரலாற்றுச் சிறப்புக்களை, அங்கே பிறந்து, வளர்ந்து, மறைந்த பெரியோர்களின் பெருமைகளைப் புலப்படுத்திட வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில், தமிழகத்தின் புகழ்மிக்கத் தலைவர்களை நினைவுகூர்கிற அளவிலேயும் அமைக்கப்பட்டன. அந்த முறையிலேதான் அண்ணா மாவட்டம், ஏ.டி.பி. மாவட்டம், திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டம், எம்.ஜி.ஆர். மாவட்டம் என்ற பெயர்கள் சூட்டப்பட்டன. கடந்த ஆண்டு மாவட்ட நிருவாக மானியக் கோரிக்கையின்போது, புதியனவாகத்



தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்ட மாவட்டங்கள் இந்த ஆண்டு முதல் தேதியிலிருந்து செயல்பட்டு வருகின்றன. இந்த மாவட்டங்களுக்கும், ஏற்கெனவே தொடங்கப்பட்டு, இதுவரை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் கட்டப்படாத நிலையில் உள்ள மாவட்டங்களுக்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடங்கள் அடுத்து மூன்று ஆண்டுகளில் கட்டப்படும் என கடந்த ஆண்டு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அந்த அறிவிப்பின்படி 4 கோடி ரூபாய்த் திட்ட மதிப்பீட்டில், சிதம்பரனார் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம், அனுமதிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. விரைவில் புதிய கட்டிடத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் இயங்கத் தொடங்கும் என்ற செய்தியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் 3 கோடி ரூபாய் செலவில் விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில், பெருந்திட்ட வளாகங்கள் தெரிவுசெய்யப்பட்டு கட்டிடப் பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, அதன்படி கட்டிடப் பணிகள் தொடங்கி மட்ட அளவில் (லின்டல் லெவல்) வளர்ந்துள்ளன. விரைவில் இக்கட்டிடம் முடிவு பெற்று, புதிய இடத்தில் மாவட்ட நிருவாகப் பணிகள் தொடங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடப் பணிகள் தொடங்கப்பட்டுவிட்ட போதிலும், நீதிமன்றத் தடை ஆணை காரணமாக அப்பணியைத் தொடர முடியாத நிலை இன்றைக்கு உள்ளது. எனினும் கட்டிடப் பணியை மீண்டும் தொடங்குவதற்கு நீதிமன்றத் தடை ஆணையை விலக்கிக் கொண்டு, நம்முடைய பணியைத் தொடங்குவதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதைத்தவிர, கரூர்-தீரன் சின்னமலை, நாகை-காயிதே மில்லத், திருவாரூர்-ஏ.டி. பன்னீர்செல்வம், எம்.ஜி.ஆர்., இராஜாஜி, வைகை-வீரன் அழகுமுத்து ஆகிய மாவட்டங்களுக்குக் கடந்த முறை முதல்வர் குறிப்பிட்டபடி இடங்களைத் தெரிவு செய்வதற்கு உயர்மட்டக் குழு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளது. அந்தக் கட்டிடங்கள் எல்லாம் ஒரே வளாகத்தில் அமைவதற்குப் பெரிய கட்டிடங்களாக அமைக்கப்பட வேண்டியிருக்கிற காரணத்தால் திட்டமாக அமைக்கப்பட வேண்டியிருக்கிற காரணத்தால் இடங்களைத் தேர்வு செய்வதற்கான ஆய்வுகள் நடைபெறுகின்றன. அங்கே புதிய கட்டிடங்களைக் கட்டி முடித்து மாவட்ட ஆட்சியர்

அலுவலகங்கள் அனைத்தையும் அவற்றிற்கான கட்டிடங்களில் செயல்பட வைக்கும் வகையில் இந்த அரசு உறுதி மேற்கொண்டு விரைந்து செயலாற்றி வருகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடங்கள் மட்டுமின்றி, வட்டாட்சியர், வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் என இதர அலுவலகங்களுக்கான கட்டிடங்களையும் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பியவாறு பொதுமக்களின் நன்மைகளையும் கருத்தில் கொண்டு 9 கோடி ரூபாய் செலவில் திருச்செந்தூர், லால்குடி, உடையார்பாளையம், திருச்செங்கோடு, மதுராந்தகம், திருத்தணி, உத்தமபாளையம், திருவாரூர், குளித்தலை, பெரம்பலூர் ஆகிய இடங்களில் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகங்களும். . . .

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல போச்சம்பள்ளி, கமுதி, பாப்பிரெட்டிபட்டி, பேரையூர், செந்துறை, குன்னம், அரவக்குறிச்சி ஆகிய 7 இடங்களில் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களும் விரைவில் கட்டப்பட உள்ளன.

கடந்த ஆட்சியினரால் முறைகேடாகப் பணிநீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பகுதிநேர கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை இந்த அரசு கடந்த ஆண்டு அறிவித்தது. அதனடிப்படையில் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதுபற்றித் தீர்மானித்துள்ளது. அதுகுறித்து ஏற்கெனவே டிரிபியூனலின் தீர்ப்பைக் கேட்டு அவர்கள் விண்ணப்பித்து, அல்லது அவர்கள் வழக்குத் தொடர்ந்து, அந்த டிரிபியூனல் அவர்களுக்குச் சாதகமான தீர்ப்பு வழங்கி இருந்தது. இருந்தாலும் அந்தக் கிராம அலுவலர்களுக்கு அந்த ஓய்வூதியம் வழங்குவதற்கு மறுத்து கடந்த கால அரசு, உச்சநீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தது. டிரிபியூனல் தீர்ப்பைச் செயல்படுத்த விரும்பாமல், அதற்கு மாறான தீர்ப்பைப் பெற வேண்டும் என்று உச்சநீதிமன்றத்திலே வழக்கு தாக்கல் செய்து இருந்தது. இப்படி மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலே உள்ள அந்த



அலுவலர்களுக்கு எப்படியும் இந்த அரசு உதவ வேண்டும் என்ற அடிப்படையில், உச்சநீதிமன்றத்திலே தாக்கல் செய்து இருந்த வழக்கைத் திரும்பப் பெற்று, மனுவைத் திரும்பப் பெற்று, 14-11-1980 அன்று பணி இழந்து உயிருடன் உள்ள முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மாதம் ரூபாய் 175 ஓய்வூதியம் மற்றும் அதனுடைய இணைந்த பயன்கள்--ரூ. 175 மட்டுமல்ல, அதோடு சேர்ந்து அவர்களுக்கு வழங்கக்கூடிய பயன்களும்--அளிப்பதற்கு ஆணைகள் பிறப்பித்துள்ளது இந்த அரசு. 14-11-1980 அன்று பணி இழந்து மரணம் அடைந்த முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பத்திற்குக் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூபாய் 100 வழங்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் 5-12-1986 முதல் வழங்கப்படும்; இதனால் பயன்பெறுகிறவர்கள் 15 ஆயிரம் பேர்; இவர்களுக்கு 1986 முதல் வழங்குவதன் காரணமாக இப்போது மொத்தமாகக் கிடைக்கிற தொகை 21,500 ரூபாய். இத்தொகை ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல, இன்றைக்கு இந்தத் துறை அமைப்பு முறையில் இப்போதுள்ள மாவட்டங்கள் 29; புதிய மாவட்டங்கள் 4. கோட்டங்கள் 72; அதில் புதிது 6. வட்டங்கள் 195; அதில் புதிது 11. உள்வட்டங்கள் 1,109. வருவாய்க் கிராமங்கள் 17,273. இதில் குமரி மாவட்டத்தில் இப்போது 26 கிராமங்கள் தனி ரெவின்யூ வில்லேஜ் ஆக டீ-மார்கேட் செய்யப்பட்டு, பிரித்து அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. இந்தக் கிராம நிருவாகம் மிகச் சீராக நடைபெற வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாகத்தான்--கிராம அதிகாரிகளே எல்லா நன்மைகளையும் செய்துவிடக்கூடியவர்களாக இல்லை; இன்னும் சொல்லப்போனால், வருவாய் இலாகாவுக்குக் கூட கடந்த காலத்திலே, கடந்த கால ஆட்சியைப்பற்றி மக்கள் பேசுவதைப்போல, அந்த இலாகாவைப்பற்றிப் பேசுகிற ஒரு காலம் இருந்தது; அந்த நிலையிலே இருந்து பல காரணங்களால் மெல்ல விடுபட்டு வருவதாகத்தான் நான் நம்புகிறேன்; எனவே, அந்த இலாகாவிலே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல, சான்றிதழ் பெறுவதற்கு பல இடர்ப்பாடு, அதுவும் சாதிச் சான்றிதழ் பெற வேண்டுமானாலும் கையூட்டு, ஒரு நண்பர் பேசுகிறபோது சொன்னார், ஆயிரம், இரண்டாயிரம் தந்து பெற வேண்டி இருக்கிறது என்றார். அதேபோல, பிறப்பு-இறப்புச்

சான்றிதழ் பெறுவதிலே இடர்ப்பாடு இருக்கிறது என்றார். அதிலேயும் குறிப்பாக ஆவுடையப்பன் அவர்கள், பிறப்பு-இறப்புச் சான்றிதழ்கள் பதிவு செய்வதிலேயே சிக்கல் இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். அந்தப் பதிவு செய்வதிலே உள்ள சிக்கல்--நிருவாகச் சீர்திருத்தக் குழுவினாலே, முன்னாள் தலைமைச் செயலாளர் திருவாளர் சபாநாயகம் தலைமையில் உள்ள குழுவினாலே இந்த வருவாய்த் துறை பற்றி ஆய்வு நடத்தப்படுகிறது. திருவாளர் சபாநாயகம் குழு மூலமாக, பெறும் கருத்துக்களால் இந்த முறைகேடுகளுக்கு அதிக இடம் இல்லாமல் என்னென்ன வகையில் சீர்திருத்தம் செய்யலாம் என்பதும் நிச்சயமாகக் கருதப்படும்.

*பிற்பகல் 1-35*

அதேபோல் கஜானாவில் கொண்டுபோய் பணம் கட்டிவிட்டு அதற்குப் பின்னால்தான் சில சான்றிதழ்களைப் பெறவேண்டுமென்ற நிலை இருப்பதற்குப் பதிலாக, கோர்ட் பீஸ் ஸ்டாம்ப் என்று சொல்லப்படுகின்ற நீதிமன்றப் பதிவுக்குப் பயன்படுகின்ற அந்த ஸ்டாம்புகள் மூலமாகவும், அத்தொகைக்கு ஈடாகத் தந்து இந்தச் சான்றிதழ்களைப் பெறலாம் என்ற கருத்தும் ஏற்கப்பட்டிருக்கின்றது. இவைகள் தவிர, பேறுகால உதவி கோரும் மனுதாரருக்கு கருவுற்ற ஏழாவது மாதத்திலிருந்து முப்பது நாட்களுக்குள் அந்தப் பேறுகால உதவி வழங்கவேண்டுமென்று அரசு அந்தத்துறை அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறது. விபத்து ஏற்பட்ட முப்பது 'நாட்களுக்குள் விபத்து நிவாரணத் தொகை வழங்கப்படவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. முதியோர் உதவித்தொகை கோரும் மனுக்கள் மீது 60 நாட்களுக்குள் முடிவு எடுக்கப்படவேண்டும். பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ள பல்வேறு மனுக்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் 100 நாட்களுக்கு மேல் இருக்கக்கூடாது. ஒருவேளை சில மனுக்கள் 100 நாளைக்கு மேல் முடிவெடுக்கப்படாமல் இருக்குமானால், அந்த அலுவலகத்தின் தலைமை அலுவலர் நாள்தோறும் அம்மனுக்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யவேண்டும். இவையெல்லாம் மனுநீதித் திட்ட விதிமுறைகளாக வகுக்கப்பட்டவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



நிச்சயமாக இந்த விதிமுறைகளைப் பின்பற்றுவார்கள், அல்லது அவற்றுள் ஏதேனும் அப்படி நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருக்குமானால், இங்கே மேலே உள்ள மாநிலத் தலைமை அலுவலர்களுக்குத் தெரிவித்து, அந்தக் குறைகளைப் போக்க முற்படுவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று, இந்த மனுநீதித் திட்டம் என்பது மக்களை நாடிச் சென்று, தேடி நீதி வழங்குகின்ற திட்டம். மக்கள் குறை போக்கும் திட்டம் என்பது நாடி வருகின்றவர்களுக்கு ஒருநாள் காத்திருந்து அந்த நாளில் வருகின்ற அனைவருடைய குறைகளையும் போக்குவதற்கு முயற்சிக்கின்ற திட்டம். இது வாரத்திலே புதன் கிழமைதோறும் நடப்பது மனுநீதித் திட்டம். இது மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கோட்டாட்சி அலுவலர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், அவர்கள் மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளுக்குச் சென்று மற்ற துறை அலுவலர்களையும் சேர்த்துக்கொண்டு அந்தக் கிராமத்தில், மக்கள் எளிதாக அந்தப் பகுதியை விட்டு நகர்ப்பகுதிக்கு வரமுடியாத அளவுக்கு இருக்கிற உட்பகுதிகளுக்குச் சென்று, அவர்களிடத்தில் நேரடியாகக் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்கிற, இன்னும் சொல்லப்போனால், கிராம மக்களின் நலம் நாடி செய்யப்படுகிற அரசுப் பணியாக இந்தப் பணி அமைந்திருக்கிறது. அதுபோல, குறைசொல்ல வருகின்றவர்களுக்கு, அதிகாரிகளும் எல்லா நாளும் எல்லா நேரமும் தலைமை அலுவலகத்தில் இருப்பதில்லை என்பதால் திங்கட்கிழமைதோறும் அந்தந்த அலுவலகங்களில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவரது தலைமையிடத்தில், வருவாய்த்துறை அலுவலர்கள் அவரவர்களுடைய தலைமையிடத்தில், கோட்டாட்சித் தலைவர் என்றால் அவருடைய தலைமையிடத்தில் வட்டாட்சியர் அவருடைய தலைமையிடத்தில், அந்தத் திங்கட்கிழமை முழுவதும் இருந்து, வருகிற பிரதிநிதிகள், வருகிற மக்கள், தருகின்ற குறைபாடுகளையெல்லாம் ஆய்வு செய்து, தகுந்த முடிவெடுத்து, நியாயம் வழங்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இங்கேகூட சில மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள். ஏற்கெனவே மனுநீதித் திட்டத்தில், 6 வாரத்திற்கு முன்னர் சென்று, அவர்களுடைய மனுக்களைப் பெறவேண்டுமென்று சொன்னது இந்த 6 வார காலம் என்பது அதிகமாக இருக்கிறது, இடைவெளி அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தாலேயும், வேகமாக, சுறுசுறுப்பாக இயங்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால் போய்

அந்த மனுக்களைப் பெற்று, உடனடியாக அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டும், இடையிலே 6 வார காலம் ஓட்டம் என்று காலம் வீணாகக்கூடாது என்ற அடிப்படையிலேயும் 4 வார காலமாக இடைவெளி வைத்து, முன்கூட்டியே தீர்மானித்தவாறு மாவட்ட ஆட்சித் தலைவரும் அரசு அலுவலர்களும் எந்தக் கிராமத்தில் முகாமிடச் செல்கிறார்களோ, அந்த வட்டாரத்தைச் சுற்றிவந்து அவர்களுடைய குறைகளை அறிந்துகொண்டு வந்து ஒரு இரண்டு வார காலத்திற்குள் அதற்கான முடிவான கருத்து என்ன என்பதை அந்தந்தத் துறை அதிகாரிகளிடமிருந்து பெற்று, அதோடு மனுநீதித் திட்ட நாளில் மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்ற அலுவலர்களும் அங்கே சென்று, அப்படிச் செல்கிறபோதுகூட அவரவர்கள் தனித்தனி வண்டியில் செல்வதால் நினைத்த நேரத்தில் போய் அவர்களது பணியில் தாமதம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக, ஒரே வண்டியிலே பெரும்பாலான அலுவலர்கள் ஒன்றாகச் சென்று அந்த மனு நீதித் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தவேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. இதேபோலத்தான், மக்கள் குறை தீர்க்கிற அந்தப் பணியும்கூட மிகச் சிறப்பாக நடைபெறவேண்டும் என்பதற்கு இப்போது இருக்கின்ற அலுவலர் மட்டுமல்லாமல், இந்தக் குறைகளைப் போக்குகின்ற இந்தப் பணிக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், "மக்கள் குறை தீர்க்கும் பிரிவு" ஏற்படுத்தப்பட்டு, அதன் பொறுப்பாளராக ஒரு தனித் துணை ஆட்சியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கென்றே ஒரு தனி அலுவலர் உயர் தகுதி உடையவராக இருக்கிறார். இவருக்கு உதவியாக ஒரு உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அனைத்துத் துறைகளுக்கும் சென்று பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களின்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்று அறிய மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டும். இதற்காக இவருக்கு ஒரு ஊர்தி அளிக்கப்பட்டுள்ளது. மனுக்களின் மீது முடிவு செய்வதில், திறமையாகப் பணிபுரியும் தனித் துணை ஆட்சியாளர்களுக்கு முதல் மூன்று பேருக்கு என்ற முறையில் ரூபாய் 10,000, 7,500, 5,000 என்று மதிப்புள்ள இந்திரவிகாஸ் பத்திரம் 'தேசிய சேமிப்புப் பத்திரங்கள்' அவர்களுக்குப் பரிசாக வழங்கி ஊக்குவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பொதுமக்களுடைய குறைகளைப் போக்குவதற்கு மாவட்ட அளவில் எந்தெந்த அளவிற்கு, எந்தெந்த முறைகளைப் பயன்படுத்தி மக்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்தலாம்



என்பது கருதப்பட்டு, செயல்படுத்தப்படுகிறது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-40

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேயே தங்களுக்கு ஒரு அறை வேண்டும் என்று கேட்டார்கள். அப்படியொரு கருத்து எழுந்தாலும் எல்லா உறுப்பினர்களும் கேட்கமாட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிற அந்த நகரிலேயே இருக்கிற அந்தச் சட்டமன்ற உறுப்பினருக்கு அதிலே கொஞ்சம் மிகுந்த ஆர்வம் இருக்கக்கூடும். மற்ற உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிற ஊருக்குச் செல்லவே பல நேரங்களிலே தேவையும் இருக்காது, அதைப் பயன்படுத்தவும் முடியாது. எலலாவற்றையும்விட, அவர்கள் பொதுமக்களைச் சந்திக்க வேண்டுமானால், மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டங்கள் நடத்துவதற்காக வைத்திருக்கிற அந்த மண்டபம் அல்லது அந்த இடம் அல்லது அந்த அறை, அதையே தேவைப்படுமானால் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவித்து உரிய நேரத்திலே அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இரண்டாவதாக, மாவட்ட ஆட்சித் தலைவர்களோ, அலுவலர்களோ மக்களுடைய பிரச்சினைகளை அவர்கள் நேரடியாகக் கேட்டுத் தீர்ப்பதற்காகக் கூட்டுகிற நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களை அழைக்க வேண்டும் என்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. அது எளிது அல்ல, இன்னும் சொல்லப்போனால் அது நிருவாகப்பணி. ஒவ்வொரு நிருவாகப்பணியிலேயும், அவ்வப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் ஆலோசனை சொன்னால், அதிலேயும் ஒரு மாவட்டத்திலே ஏழெட்டு சட்டமன்ற உறுப்பினர்கள்; ஆளுக்கொரு யோசனை சொன்னால் மாவட்ட ஆட்சித் தலைவர் இயங்கவும் முடியாது. இங்கே எப்படிக் கோட்டாட்சி எந்த இடத்திலே அமையவேண்டும் என்பதிலே, வட்டம் எங்கே அமையவேண்டும் என்பதிலே, எந்தப்பகுதி எந்த வட்டத்திலே சேர்க்கப்படவேண்டும் என்பதிலே, எந்தக் கிராமம் எந்த வட்டத்திலே இருந்தால் நல்லது என்பதிலே, திருக்குவளை, யாருக்குப் போக வேண்டும் என்பதிலே, இப்படி வருகிற இந்த வேறுபாடுபோல பல வேறுபாடு வருகிறபோது மாவட்ட ஆட்சித் தலைவர்களோ, நிருவாகிகளோ அவர்களுடைய கடமையை நிறைவேற்ற முடியாது.

எனவே அது சாத்தியமாகாது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள், மக்கள் பணியாற்றுவதற்கு எந்தநேரத்திலே வேண்டுமானாலும் மாவட்ட ஆட்சித் தலைவரை அவர் ஊரிலே இருப்பாரேயானால் சந்திக்கலாம்.

இன்னொரு கருத்து, இப்படி மனுநீதித் திட்டம் நடைபெறுகிறபோதுகூட சில அலுவலர்கள் அங்கே வருவதில்லை என்று ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டது. எல்லா அலுவலர்களும் வரவேண்டும் என்று கட்டாயமாக அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதுவும் 'கெசட்டட் ஆபீசர்ஸ்' என்று அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் யாராக இருந்தாலும் கட்டாயம் அங்கே வந்து சேரவேண்டும், வந்திருந்து பதிலளிக்க வேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் இந்தப் புதிய வட்டங்கள், கோட்டங்கள் பற்றி பல உறுப்பினர்கள் இங்கே எழுப்பியிருக்கிறார்கள் அல்லவா? புதிய வட்டங்களை உருவாக்க 14 கோரிக்கைகளும் புதிய வருவாய்க் கோட்டங்களை உருவாக்க இரண்டு கோரிக்கைகளும் மாண்புமிகு பேரவை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. அவைகளில், நீலகிரி மாவட்டம், மலைப்பகுதி, கூடலூர் தொகுதி பேரவை உறுப்பினர் திரு. பா. மு. முபாரக் அவர்கள் அளித்த கோரிக்கை தக்க முறையில் விரிவாக முன்னரே பரிசீலனை செய்யப்பட்டது. அதன்படி, உதகமண்டலம் வட்டத்தைப் பிரித்து 'குந்தா' என்ற புதிய வட்டமும், கூடலூர் வட்டத்தைப் பிரித்து 'பந்தலூர்' என்ற புதிய வட்டமும் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* உறுப்பினர்களின் மற்ற கோரிக்கைகள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டது என்று பொருள் அல்ல. சில ஆண்டுகளில் தொடர்ந்து இவைகள் ஏற்கப்பட்டுக் கொண்டே வரும். இந்த ஆண்டு என்பதற்குப் பதிலாக, இரண்டு ஆண்டுகள் கழித்து ஒரு காலக் கட்டத்தில் அது இடம்பெறும் என்றுதான் பொருளே தவிர அவை புறக்கணிக்கப்படவில்லை; பல்வேறு நிலைகளில் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளன என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



வாங்கப்பட்ட அவருடைய மாளிகைதான் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அண்மையில் அவர் மறைந்ததையொட்டி பல அமைப்புகள், அங்கேயுள்ள திராவிட முன்னேற்றக் கழக நிருவாகிகள் எல்லாம் அந்த மாளிகைக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் நடைபெறுகிற மாளிகைக்கு, அவரது பெயரைச் சூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றும், அவர்கள் ஏற்கெனவே தங்களுடைய மாளிகையை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு வழங்கினார்கள் என்ற அந்த அடிப்படையிலும் அந்த மாளிகைக்கு 'மன்னர் இராஜகோபாலத் தொண்டைமான் மாளிகை' என்று பெயர் சூட்டப்படும் என்று இந்த அரசின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

*பிற்பகல் 1-45*

அடுத்து சில பணிகள் செம்மையாக நிறைவேறாதது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதிலே ஒன்று, சிதம்பரனார் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட 11-9-1989-ல் அடிக்கல் நாட்டப்பட்டது. பல்வேறு காரணங்களால் இக்கட்டிடப் பணி 4-3-1997 வரை ஆரம்பிக்கப்படவில்லை. பல்வேறு காரணங்கள் என்ன என்பதை நீங்கள் எல்லோரும் புரிந்துகொள்ளலாம். பல்வேறு காரணங்களால் அதாவது தேவையற்ற காரணங்களால் அந்தப் பணி நிறைவேறவில்லை அல்லது தொடங்கப்படவில்லை. அந்தப் பணி, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடப் பணி, 5-3-1997-ல் மீண்டும் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு, கட்டிடம் அடிமட்டம் வரையில் கட்டப்பட்டுள்ளது. அது தொடர்ந்து, விரைந்து கட்டப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பழைய தாலுகா அலுவலகக் கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்து போய்விட்டன, புதிய கட்டிடம் வேண்டுமென்று பல உறுப்பினர்கள் இங்கே எழுப்பினார்கள். அரசாங்கக் கட்டிடம் இல்லாமல் வாடகைக் கட்டிடத்தில் இருக்கிற வட்டாட்சியர் அலுவலகங்கள் பல இருக்கின்றன. எனவே வாடகைக் கட்டிடத்தில் இருக்கிற அலுவலகங்களை முதலில் அரசு கட்டிடங்களுக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டை செய்து விட்டு, அப்புறம்

இடைப்பாடியையும் அதுபோன்ற வட்ட அலுவலகங்களையும் திரும்பிப் பார்க்கலாம் என்று அரசு கருதுகிறது. ஏனென்றால் பல்வேறு கட்டிடங்கள் புதியதாகக் கட்டப்பட வேண்டிய அவசியம் இருந்தாலும்கூட, வாய்க்கும் நிதியை பரவலாகத்தான் வழங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இன்னும் பல உறுப்பினர்களுடைய கருத்துக்கள் குறித்து நான் மேலும் பல விளக்கங்கள் சொல்லலாம் என்றாலும், இந்தச் சட்டசபையும் தொடர்ந்து இருக்கும், நாங்களும் இருப்போம், நீங்களும் பிரச்சினைகளை எழுப்புவீர்கள், தொடர்ந்து விளக்கலாம் என்ற எண்ணத்தோடு, அவ்வப்போது பல கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புண்டு என்ற நம்பிக்கையில், வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாது, இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரக் கேட்டு, என் உரையை நான் நிறைவு செய்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 108,29,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 11-- மாவட்ட நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 11 - மாவட்ட நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 331,88,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு



வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3-4-1997) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-49 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

132. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் இருபத்திரண்டாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

133. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள் (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

101.மானியக் கோரிக்கை எண் 11--மாவட்ட நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

102. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் எட்டாவது அறிக்கை, 1996-97.

103. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை, 1996-97.

104. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பத்தாவது அறிக்கை, 1996-97.





## இணைப்பு

(296-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மாவட்ட நிருவாகம்

### கொள்கை விளக்கக் குறிப்பு—1997-98

**1. முன்னுரை:**

1980 ஆம் ஆண்டு வருவாய் வாரியம் (Board of Revenue) கலைக்கப்பட்ட பின்னர், மாநில அளவிலான வருவாய், நில நிருவாகம் மற்றும் நிலச் சீர்திருத்தம் குறித்த பணிகள், வருவாய் நிருவாக ஆணையர், நில நிருவாக ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர் ஆகிய மூன்று ஆணையர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.

**2. மாவட்ட வருவாய் நிருவாகம்:**

(1) வருவாய் நிருவாக ஆணையரைத் தலைவராகக் கொண்டு வருவாய் நிருவாகத் துறையின்கீழ் மாவட்ட நிருவாகம் இயங்குகிறது. மாவட்ட அளவில், மாவட்ட வருவாய் அலுவலர்கள், வருவாய்க் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் துணையுடன் வருவாய்த்துறைப் பணிகள் மற்றும் பொது நிருவாகத்தையும் மாவட்ட ஆட்சியர்கள் கவனித்துக் கொள்கிறார்கள். மேலும் மாவட்ட அளவில், பல்வேறு துறைகளின் செயல்பாட்டிற்கும் மாவட்ட ஆட்சியர்கள் ஒருங்கிணைந்து உதவுகின்றனர்.

(2) மாவட்ட நிருவாகத்திற்கு மாவட்ட ஆட்சியர் தலைவராக இருப்பதால், எத்துறை தொடர்பான குறைகளாக இருப்பினும் அவற்றைத் தீர்ப்பதற்கு பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரையே அணுகுகின்றனர். எனவே, மாவட்ட ஆட்சியரும் பல நிலையிலான வருவாய் அலுவலர்களும் மக்கள் குறைகளை விரைவில் தீர்ப்பதற்கு முனைப்புடன் செயல்பட வேண்டியுள்ளது. இதற்கென 'பொதுமக்கள் தொடர்புத் திட்டம்' (மனுநீதித் திட்டம்) மற்றும் 'மக்கள் குறை தீர்க்கும் நாள்' ஆகிய இரு பெரும் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகின்றது.

**(அ) பொதுமக்கள் தொடர்புத் திட்டம் (மனுநீதித் திட்டம்):**

1. இந்தியாவிலேயே முதன்முதலில் தமிழகத்தில்தான், 1969 ஆம் ஆண்டு, இந்த அரசால் மக்கள் குறைகளைத் தீர்ப்பதற்கென மனுநீதித் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களால் நடத்தப்படுகிறது. இதர அரசுத் துறை அலுவலர்களும் இதில் பங்கேற்கின்றனர்.

2. இத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து கடந்த ஆண்டில் ஆய்வு செய்யப்பட்டபோது, இத்திட்டத்தை நடத்தும் அதிகாரிகள் இத்திட்டத்திற்குப் போதிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பது தெரிய வந்தது. எனவே, சமுதாயத்திற்குச் சிறப்பான சேவையை அளிக்கும் வகையில் இத்திட்டம் சீரமைக்கப்பட வேண்டுமெனக் கருதி அரசாணை (நிலை) எண் 186, வருவாய்த் துறை, நாள் 17-2-1997-இல் கீழ்க்கண்டவாறு ஆணையிட்டுள்ளது :—

(1) மனுநீதித் திட்டம் நடத்துவதற்கான காலவரம்பு.

தற்போது மாதம் ஒருமுறை நடத்தப்படும் மனுநீதித்திட்டம், இனி ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைகளில் நடத்தப்பட வேண்டும்.

(2) மனுநீதித் திட்டத்தை நடத்தும் அலுவலர்கள்.

ஒவ்வொரு மூன்றாண்டு கால இடைவெளிக்குள் மனுநீதித் திட்டம் நடத்தப்படாத கிராமங்களே இல்லை என்ற அளவில் இத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தத்தக்க வகையில் மாவட்ட ஆட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கோட்டாட்சியர் உள்ளிட்ட அனைத்து அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களாலும் மனுநீதித் திட்டம் நடத்தப்பட வேண்டும். மனுநீதித் திட்டத்தை நடத்தும் ஒவ்வொரு அலுவலருக்கும், இத்திட்டத்தை நடத்துவது கட்டாயமாக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் வரையறுக்கும் திட்டத்தின்படி மனுநீதித் திட்டத்தை கட்டாயமாக நடத்த வேண்டும். எந்தவொரு காரணத்திற்காகவும், இத்திட்டம் நடத்தப்படுவதைத் தள்ளிவைக்கவோ அல்லது நிறுத்தவோ கூடாது.

(3) மனுநீதித் திட்டம் நடத்தப்பட வேண்டிய இடங்கள்.

மிகவும் உள்ளடங்கிய கிராமங்களில் மனுநீதித் திட்டம் நடத்தும் பொருட்டு இச்செயல்திட்டம் வகுக்கப்படவேண்டும் என மாவட்ட



ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும், மாவட்டாட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் உள்ளிட்ட அனைத்து அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களும் எந்தெந்த கிராமங்களுக்கு, எந்தெந்த தேதிகளில் செல்ல வேண்டும் என்பதை மாவட்ட ஆட்சியர் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு முன்னரே தெரிவிக்க வேண்டும்.

(4) மனுநீதித் திட்டம் குறித்த முன் அறிவிப்பு.

தற்போது, மனுநீதித் திட்டம் குறித்து முன்னறிவிப்பு செய்ய 6 வாரங்களுக்கு முன்னரே ஒரு சார்நிலை அலுவலரை சம்பந்தப்பட்ட கிராமத்திற்கு அனுப்பி மனுக்களைப் பெற்று வர ஏற்பாடு செய்யப்படுகின்றது. இனி, இந்த 6 வார காலம் என்பதை மாற்றி 4 வார காலத்திற்கு முன்னர் சம்பந்தப்பட்ட கிராமத்திற்குச் சென்று மனுநீதி நாள் பற்றிய அறிவிப்பை வெளியிட்டு மனுக்கள் பெற்றுவர வேண்டுமெனத் திருத்தியமைக்கப்படுகிறது.

(5) மனுநீதித் திட்ட கூட்டங்களில் அனைத்துத்துறை அலுவலர்களும் கலந்து கொள்ளுதல்.

மனுநீதி நாட்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும் வருவாய்த்துறை சம்பந்தப்பட்டது மட்டுமல்லாமல், இதர துறைகள் சம்பந்தப்பட்டதாகவும் இருப்பதால் மாவட்டாட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் நடத்தும் மனுநீதித் திட்டக் கூட்டங்களுக்கு அனைத்துத் துறைகளையும் சார்ந்த மாவட்ட அளவிலான அலுவலர்கள் கட்டாயம் பங்குகொள்ள வேண்டும். கோட்டாட்சியர்/அரசிதழ் பதிவுபெற்ற இதர அலுவலர்கள் நடத்தும் கூட்டங்களுக்கு, இதரத் துறைகளைச் சேர்ந்த வட்ட நிலையிலான அலுவலர்கள் கலந்துகொள்ள வேண்டும்.

(6) மனுநீதித் திட்டக் கூட்டங்களுக்குச் செல்லுவதற்கு பொதுவான பேருந்துகளை ஏற்பாடு செய்தல்.

ஒவ்வொரு அலுவலரும், தத்தம் வாகனங்களில் கிராமங்களுக்குச் செல்லும்போது, அதனால் ஒரே நேரத்தில் போய்ச்சேர இயலாமல் போவதுடன், பலவிதமான இடர்பாடுகளும் ஏற்படுகிறது. எனவே, தற்போதுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி தலைமையிடங்களிலிருந்து அதிகாரிகளை அழைத்துச் செல்ல பொதுவான பேருந்துகளை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அரசு மீண்டும் வலியுறுத்துகிறது.

[1997 ஏப்ரல் 2

**(7) மனுநீதித் திட்ட நாளன்று கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள்:**

மனுநீதித் திட்டம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமத்திலிருந்து 4 வாரங்களுக்கு முன்னதாக அறிவிப்பு செய்து பெறப்பட்ட மனுக்களின் மீதான அறிக்கைகள், சம்பந்தப்பட்ட இதர துறை அலுவலர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளதா என்பதை அக்கிராமத்திற்கு மனுநீதி நாளன்று செல்வதற்கு முன்னர் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். பின்னர், மனுநீதித் திட்டம் நடத்த உத்தேசிக்கப்பட்ட கிராமத்திற்கு சென்றடைய வேண்டும். முதலில், ஏற்கெனவே பெறப்பட்ட மனுக்களின் மீதான முடிவுகளை சம்பந்தப்பட்ட மனுதாரரிடம் தெரிவிக்க வேண்டும். பின்னர், மனுநீதித் திட்ட நாளன்று பெறப்படும் மனுக்களை கூடுமானவரை அவ்விடத்திலேயே முடிவு செய்யும்பொருட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களை, சம்பந்தப்பட்ட இடங்களுக்கு அனுப்பி, அங்கேயே ஆய்வு மேற்கொள்ளச் செய்து, முடிவான பதிலை அன்றே தெரிவிக்க வேண்டும். தலத்திலேயே முடிவு எடுக்க இயலாத நிலையிலுள்ள மனுக்களை அதற்கென வரையறுக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவுசெய்து அதன் முடிவை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வுசெய்து மனுதாரருக்கு 1 மாத காலத்திற்குள் முடிவான பதில் கொடுக்க வேண்டும்.

**(8) மனுநீதித் திட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்களை முடிவு செய்தல்:**

மனுநீதித் திட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்களை முன்னுரிமை அடிப்படையில் ஆய்வு செய்து, மக்களின் குறைகள் தீர்க்கப்படவேண்டும். மேலும், கீழ்க்காணும் இனங்களின் மீது குறிப்பிட்டுள்ள நாட்களுக்குள் உதவி வழங்கப்படவேண்டும் :—

(1) பேறுகால உதவி கோரும் மனுதாரருக்கு கருவுற்ற ஏழாவது மாதத்திலிருந்து 30 நாட்களுக்குள் பேறுகால உதவியை வழங்க வேண்டும்.

(2) விபத்து ஏற்பட்ட 30 நாட்களுக்குள் விபத்து நிவாரணத்தொகை வழங்க வேண்டும் ;



1997 ஏப்ரல் 2]

(3) முதியோர் உதவித்தொகை கோரும் மனுக்கள் மீது 60 நாட்களுக்குள் முடிவெடுக்கப்பட வேண்டும்;

(4) பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு மனுக்கள்மீது முடிவெடுக்கப்படாமல் 100 நாட்களுக்கு மேல் இருக்கக்கூடாது. ஒருவேளை சில மனுக்கள் 100 நாட்களுக்கு மேல் முடிவெடுக்கப்படாமல் இருக்குமானால் அலுவலகத்தின் தலைமை அலுவலர் நாள்தோறும் அம்மனுக்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய வேண்டும்;

(5) 200 நாட்களுக்கும் மேல் நிலுவையில் உள்ள மனுக்கள் "நிக்நெட்" மூலம் கணிப்பொறியில் பதிவு செய்யப்படவேண்டும். அவற்றின் முன்னேற்றம் குறித்து மாவட்டாட்சியர் நாள்தோறும் தாமே ஆய்வு செய்ய வேண்டும்.

**9. மனுநீதித் திட்ட செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தல்:**

துறைத் தலைவர்கள், தங்கள் சுற்றுப்பயணத்தின்போது மனுநீதித் திட்ட பதிவேடுகளை தணிக்கை செய்ய வேண்டும். இதனால் இம்மனுக்களை முடிவு செய்வதில் முன்னேற்றம் காண வழி ஏற்படும். ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும் மாவட்ட வருவாய் அலுவலர்/ கோட்டாட்சியர் மற்றும் மனுநீதித் திட்டத்தை நடத்தும் ஏனைய அலுவலர்கள், மாவட்ட ஆட்சியரால் வரையறுக்கப்பட்ட திட்டத்தின்படி கிராமங்களுக்குச் சென்று மனுநீதித் திட்டம் நடத்துகிறார்களா என்பதைக் கண்காணித்து, அறிக்கை பெற்று, ஆய்வு செய்து, தங்களது அறிக்கைகளை ஒவ்வொரு மாதமும் 25ஆம் தேதிக்குள் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையருக்கு அனுப்ப வேண்டும். முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், ஒவ்வொரு மாவட்டாட்சியரிடமிருந்தும் பெறப்படும் மாதாந்திர அறிக்கைகளை ஆய்வு செய்து, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு தக்க அறிவுரை வழங்குவதுடன் ஒவ்வொரு காலாண்டிற்கும் அரசிற்கு விரிவானதொரு காலமுறை அறிக்கை அனுப்ப வேண்டும்.

[1997 ஏப்ரல் 2

### 3. "நமக்கு நாமே"

மனுநீதித் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இடைக்காலத்தில் ஏற்பட்ட தொய்வைப் போக்கி, சீரமைத்து, மக்கள் "நமக்கு நாமே" என்ற உணர்வின் அடிப்படையில் தங்கள் தேவைகளைத் தாங்களே முயன்று நிறைவு செய்துகொள்ளத்தக்க வகையில் தங்கள் மனப்பான்மையை வளர்த்திடும் நிலைக்கு இத்திட்டத்தின் வாய்ப்புகளை உருவாக்கிட இந்த அரசு முடிவு செய்துள்ளது. கிராமத்திலே ஒருங்கிணைந்த மனித ஆற்றலை உருவாக்கி அரசின் உதவிக் கரத்தைக் கொண்டு அந்தக் கிராமத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில், "நமக்கு நாமே" என்ற திட்டம் செயற்படுத்தப்பட இருக்கிறது. பஞ்சாயத்துராஜ் சட்டத்திலே ஊர்ச் சபைகள் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. 2 மாதத்திற்கு ஒரு முறை, 3 மாதத்திற்கு ஒரு முறை ஊர்ச் சபை கூட்டப்பட்டு, ஊரினுடைய தேவைகள் எல்லாம் அவர்கள் மூலமாக உணரப்பட்டு, எந்தெந்த அரசுத் திட்டங்களை, அந்தத் தேவைகளை நிறைவேற்றப் பயன்படுத்தலாம், எதை உள்ளூர் மக்களின் தன்னார்வத் தொண்டோடு, அரசு உதவியோடு நிறைவேற்றலாம் என்பவைகளையெல்லாம் வரையறுப்பதற்காக இந்த "நமக்கு நாமே" திட்டம் பயன்படும்.

இந்தப் பணி சிறப்பாக நடைபெறுவதற்காக ஒரு திட்டமே வகுக்கப்பட்டு ஆந்திராவிலும், கேரளாவிலும் நடைமுறையிலே இருப்பதாக அறிந்து அதைப்பற்றி ஆந்திர அரசுடன் தொடர்பு கொண்டு, அந்தக் குறிப்புகளெல்லாம் பெறப்பட்டுள்ளன. நடைமுறையிலே உள்ள ஆந்திர, கேரள திட்டங்களை அதிகாரிகளை அங்கேயே அனுப்பி, நடைமுறைகளைக் கண்டறிந்து ஆய்வு செய்து அவற்றின் சிறப்பான அம்சங்களை இந்த "நமக்கு நாமே" திட்டத்திலே சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### (ஆ) மக்கள் குறை தீர்க்கும் நாள்:

1. எல்லா மாவட்டங்களிலும் ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அந்நாளில் மாவட்ட ஆட்சியர்கள்/கோட்டாட்சியர்கள், மற்றும் வட்டாட்சியர்கள் தங்களது தலைமையிடத்திலேயே இருந்து, பொதுமக்களிடமிருந்து



1997 ஏப்ரல் 2]

மனுக்களைப் பெற்று, அவர்களது குறைகளைத் தீர்ப்பதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கின்றனர். மாவட்ட ஆட்சியர்களும் மற்றும் மனுக்களைப் பெறும் இதர அலுவலர்களும், சம்பந்தப்பட்ட சார்நிலை அலுவலர்களிடமிருந்தும், இதர துறை அலுவலர்களிடமிருந்தும் அறிக்கைகளைப் பெற்று, மனுதாரருக்கு முறையான பதிலை குறிப்பிட்ட நாளில் அளிக்கிறார்கள்.

2. மக்கள் குறைகளைத் தீர்ப்பதற்காக விரிவான நடைமுறையை அரசு நிர்ணயித்துள்ளது. பாமர மக்கள் தங்களது குறைகள் தீர்க்கப்படுவதற்கு அரசு அலுவலகங்களில் பின்பற்றப்படும் பல்வகை நடைமுறைகள் மற்றும் குறியீடுகள் பற்றி தகவல் அறிவிப்புப் பலகை மற்றும் தகவல் மையம் மூலம் வேண்டியவற்றைத் தெரிந்து கொள்ளச் செய்வது அரசின் நோக்கமாகக் கருதி வகை செய்யப்பட்டுள்ளது.

3. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, அதற்கு பொறுப்பாக ஒரு தனித் துணை ஆட்சியர் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு உதவியாக ஒரு உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அனைத்துத் துறைகளுக்கும் சென்று பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களின்மீது துரித நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்று அறிய, மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டும். இதற்காக இவருக்கு ஓர் ஊர்தி அளிக்கப்பட்டுள்ளது. மனுக்களின்மீது முடிவு செய்வதில் திறமையாக பணிபுரியும் தனித் துணை ஆட்சியாளர்களுக்கு ரூ. 10,000 ரூ. 7,500, மற்றும் ரூ. 5,000 மதிப்புள்ள இந்திர விகாஸ்/தேசிய சேமிப்புப் பத்திரங்கள் முறையே முதல், இரண்டு, மூன்றாம் பரிசுகளாக வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றது.

4. ஓய்வூதியதாரர்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவற்றை விரைவில் தீர்ப்பதற்காக அனைத்து மாவட்டங்களிலும், நான்கு மாதங்களுக்கு ஒருமுறை ஓய்வூதியதாரர்களின் குறைதீர்க்கும் நாள் நடத்தப்படுகிறது.

5. முதலமைச்சரின் தனிப்பிரிவின் மூலம் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் பொறுத்தவரை, அவைகள் மீது முடிவு எடுத்து மனுதாரர்களுக்கு 30 நாட்களுக்குள் பதிலளிக்கப்படவேண்டும்.

[1997 ஏப்ரல் 2

### (இ) சான்றுகள் வழங்கும் முறையை எளிதாக்குதல்

மாவட்ட நிருவாகத்திடமிருந்து பொதுமக்கள் பல்வேறு நோக்கங்களுக்காக சான்றுகளைப் பெற வேண்டியுள்ளது. ஒவ்வொரு சான்றுக்கும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணம் சலான் மூலமாக அரசு கருவூலத்தில் செலுத்தப்படவேண்டும். இந்த முறை ஏழைகளுக்கும், படிக்காதவர்களுக்கும் சிரமமாகவும் மற்றும் கால விரயமானதாகவும் உள்ளது. பொதுமக்களின் சிரமத்தைத் தவிர்ப்பதற்கு இந்த முறை அரசினால் எளிதாக்கப்பட்டுள்ளது. தற்போது வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண். 247, வருவாய்த்துறை, நாள் 28-2-1997-ன்படி இருப்பிடச் சான்று மற்றும் வருமானச் சான்று பெறுவதற்கான கட்டணத்தை நீதிமன்ற வில்லையாகவோ அல்லது அரசு கருவூலத்தில் சலான் மூலமாகவோ செலுத்தலாம்.

### (ஈ) வருவாய் நிருவாகத்தைச் சீரமைத்தல்

பொதுமக்களின் தேவைகளை திறம்பட நிறைவேற்றுவதற்கு ஏதுவாக மாவட்ட வருவாய் நிருவாகத்தை நவீனமாக்க சில சீரமைப்புகள் தேவையெனக் கருதப்பட்டது. எனவே, சென்ற வரவு—செலவுத் திட்டக் கூட்டத்தொடரில் அறிவித்தபடி "வருவாய்த் துறை நிருவாகச் சீர்த்திருத்தக் குழு" ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு திரு. பி. சபாநாயகம், இ.ஆ.ப. (ஓய்வு) தலைவராகவும், திரு. வி. கே. லட்சுமணன், சட்டமன்ற உறுப்பினர், துணைத் தலைவராகவும் உள்ளனர். இரு முன்னாள் நிருவாகிகளும், ஒரு தொழில்நுட்ப வல்லுநரும் இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர். குறைதீர்க்கும் நடைமுறையை மேம்படுத்துவதற்காக கருத்து வழங்குமாறு இக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இக்குழு 12-9-1996 முதல் செயல்படத் தொடங்கி தனது பணியினைச் செய்து வருகிறது. இக்குழு தனது அறிக்கையினை ஓராண்டுக்குள் அளிக்க வேண்டும் என அரசு விரும்புகிறது.

### (உ) வருவாய் அலுவலர்களுக்குப் பயிற்சி

விரைவாகவும், சிறப்பாகவும் கடமை ஆற்ற உதவும் வகையிலும், வருவாய் நிருவாகம் குறித்த அண்மைக்காலம் வரையிலான விவரங்களை அறிந்து கொள்வதற்காகவும், கிராம நிருவாக அலுவலர் முதல்



1997 ஏப்ரல் 2]

வட்டாட்சியர் வரை உள்ள அனைத்து வருவாய்த் துறை அலுவலர்களுக்கும் பயிற்சித் திட்டம் ஒன்றை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இப்பயிற்சித் திட்டம் கீழ்க்கண்ட பிரிவுகளைக் கொண்டுள்ளது:—

பிரிவு -1: சென்னையில் உள்ள அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிறுவனத்தால் பயிற்சியாளர்களுக்கு (வட்டாட்சியர்கள் மற்றும் துணை ஆட்சியர்கள்) நடத்தப்படும் பயிற்சி.

பிரிவு- 2: மாவட்டங்களில் வட்டாட்சியர்கள் மற்றும் துணை ஆட்சியர்களால் வருவாய்த் துறை அலுவலர்களுக்கு நடத்தப்படும் பயிற்சி.

அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சியாளர்களுக்கான பயிற்சித் திட்டத்தின்கீழ் 75 வருவாய்த் துறை அலுவலர்களுக்கு இவ்வாண்டில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியாளர்கள் மற்ற வருவாய்த் துறை அலுவலர்களுக்கு மாவட்டங்களில் பயிற்சி அளிக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதுகாறும் கிராம நிருவாக அலுவலர்கள் முதல் வட்டாட்சியர்கள் வரை 3,861 வருவாய்த்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 3. மாவட்டங்களைச் சீரமைத்தல்

மாவட்ட நிருவாகம் திறம்படச் செயல்படவும், மக்களின் தேவைகளைத் துரிதமாகத் தீர்க்கவும், சமூக நலத் திட்டங்களைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்தவும் மிக அதிக பரப்பு கொண்ட மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் ஆகியவற்றைச் சீரமைப்புச் செய்தல் அவசியமாகிறது.

(2) அந்நோக்கம் நிறைவேற 25-7-1996 அன்று அமைக்கப்பட்ட கீழ்க்கண்ட 4 புதிய மாவட்டங்கள், 6 புதிய வருவாய்க் கோட்டங்கள் மற்றும் 11 புதிய வட்டங்கள் ஆகிய அனைத்தும் 1-1-1997 முதல் செயல்பட்டு வருகின்றன,

## புதிய மாவட்டங்கள்

| பிரிக்கப்பட்ட மாவட்டங்களின் பெயர் | புதியதாக அமைக்கப்பட்ட மாவட்டங்களின் பெயர் | புதிய மாவட்டங்களின் தலைமையிடம் |
|---|---|---|
| 1. சேலம் | இராஜாஜி | நாமக்கல் |
| 2. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் (தற்போது அண்ணா மாவட்டம்). | எம்.ஜி.ஆர். | திருவள்ளூர் |
| 3. மதுரை | வைகை-வீரன் | தேனி அழகுமுத்து |
| 4. (அ) தஞ்சாவூர் | | |
| (ஆ) நாகை-காயிதே மில்லத் | திருவாரூர்-ஏ.டி.பன்னீர்செல்வம் | திருவாரூர் |

## புதிய வருவாய்க் கோட்டங்கள்

| மாவட்டம் | புதிய வருவாய்க் கோட்டங்களின் பெயர்கள் |
|---|---|
| 1. இராஜாஜி | 1. திருச்செங்கோடு |
| 2. அண்ணா | 2. மதுராந்தகம் |
| 3. எம்.ஜி.ஆர். | 3. திருத்தணி |
| 4. வைகை-வீரன் அழகுமுத்து | 4. உத்தமபாளையம் |
| 5. திருவாரூர்-ஏ.டி.பன்னீர்செல்வம் | 5. திருவாரூர் |
| 6. கரூர்-தீரன் சின்னமலை | 6. குளித்தலை |





## புதிய வட்டங்கள்

| மாவட்டம் | புதிய வட்டங்களின் பெயர்கள் |
|---|---|
| சேலம் | 1. கெங்கவல்லி<br>2. எடப்பாடி |
| அண்ணா | 3. தாம்பரம்<br>4. திருக்கழுக்குன்றம் |
| எம்.ஜி.ஆர். | 5. பூந்தமல்லி |
| வைகை-வீரன் அழகுமுத்து | 6. போடிநாயக்கனூர்<br>7. தேனி |
| நாகை-காயிதே மில்லத் | 8. கீழ்வேளூர் |
| திருச்சிராப்பள்ளி-பெரும்பிடுகு முத்தரையர் | 9. மணச்சநல்லூர் |
| கரூர்-தீரன் சின்னமலை | 10. கிருஷ்ணராயபுரம் |
| பெரம்பலூர்-திருவள்ளுவர் | 11. வேப்பந்தட்டை |

3. கன்னியாகுமரி மாவட்டத்தில் 26 புதிய வருவாய்க் கிராமங்கள் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

4. தற்போதுள்ள மாவட்டங்கள், வருவாய்க் கோட்டங்கள், வட்டங்கள், உள்வட்டங்கள் மற்றும் கிராமங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்டங்கள் | .. | 29 |
| 2. | கோட்டங்கள் | .. | 72 |
| 3. | வட்டங்கள் | .. | 195* |
| 4. | உள்வட்டங்கள் | .. | 1,109 |
| 5. | வருவாய்க் கிராமங்கள் | .. | 17,273 |

* திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள வீரகேரளம்புதூர் கூடுதல் வட்டம் இதில் அடங்கும்.

[1997 ஏப்ரல் 2

## 4. கிராம நிருவாகம்

### கிராம நிருவாக அலுவலர்கள்

கிராம நிருவாகம், மாவட்ட வருவாய் நிருவாகத்தின் அடிப்படை அலகு ஆகும். இம்மாநிலத்தில் தற்போது 12,506 கிராம நிருவாக அலுவலர்கள் உள்ளனர். கிராம கணக்குகளைப் பராமரித்தல், அரசு நிலங்கள் மற்றும் கட்டிடங்களைப் பாதுகாத்தல், நிலவரி வசூலித்தல் ஆகிய பணிகள் கிராம நிருவாக அலுவலர்களின் பணிகளில் அடங்கும்.

2. முன்னாள் பகுதிநேர கிராம அலுவலர்கள், கிராம நிருவாக அலுவலர் பதவிக்குத் தகுதி பெற்றிருப்பின், அவர்கள் தற்போதுள்ள கிராம நிருவாக அலுவலர்கள் பணியிடங்களில் நியமனம் செய்யப்படுகின்றனர். அவ்வாறு நியமனம் செய்யப்படுபவர்களின் பணி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவுடன் வரன்முறை செய்யப்படுகிறது.

3. முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக, தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம் அளித்த தீர்ப்பினை எதிர்த்து சிறப்பு அனுமதி மனு (Special Leave Petition) ஒன்றை உச்சநீதிமன்றத்தில் அரசு தாக்கல் செய்தது. தற்போது அரசு அந்தச் சிறப்பு அனுமதி மனுவைத் திரும்பப் பெற்று, 14-11-1980 அன்று பணியிழந்து உயிருடன் உள்ள முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மாதம் ரூ. 175 ஓய்வூதியம் மற்றும் அதனுடைய இணைந்த பயன்கள் வழங்க ஆணைகள் பிறப்பித்துள்ளது. 14-11-1980 அன்று பணியிழந்து, மரணமடைந்த முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பத்திற்கு, குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.100 வழங்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் 5-12-1986 முதல் வழங்கப்படும்.

### கிராம உதவியாளர்கள்

அரசுக்குச் சேர வேண்டிய பணத்தை வசூலிப்பதற்கு கிராம உதவியாளர்கள், கிராம நிருவாக அலுவலர்களுக்கு உதவி புரிகின்றனர். இம்மாநிலத்தில் தற்போது சுமார் 27,000 கிராம உதவியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.



1997 ஏப்ரல் 2]

## 5. வருவாய்த் துறை கட்டிடங்கள்

அரசு அலுவலகங்களை அவைகளுக்குண்டான கட்டிடங்களில் செயல்பட, கட்டிடங்கள் கட்டுவது ஒரு அடிப்படைத் தேவையாகும். எனவே, மாவட்ட ஆட்சியர் முதல் கிராம நிருவாக அலுவலர்கள் வரையில் உள்ள வருவாய்த் துறை அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது.

### (அ) மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல்

இம்மாநிலத்திலுள்ள 29 மாவட்டங்களில், 19 மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 10 மாவட்டங்களில், நாகப்பட்டினத்திலுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் செயல்படுகிறது. மற்ற மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் அரசு அல்லது அரசு நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களில் செயல்படுகின்றன.

பத்து மாவட்டங்களில் பெருந்திட்ட வளாகங்கள் கட்டுவதைப் பொறுத்தவரை நிலைமை பின்வருமாறு:

| மாவட்டத்தின் பெயர் | நிலைமை |
|---|---|
| 1. சிதம்பரனார் | .. இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ரூ. 400 இலட்சத்திற்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு அளிக்கப் பட்டுள்ளது. |
| 2. விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் | .. இடம் தேர்வு செய்யப் பட்டுள்ளது. ரூ. 300 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. |
| 3. கரூர்-தீரன் சின்னமலை | ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ. 250 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில், கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. |
| 4. நாகை-காயிதே மில்லத் | |
| 5. பெரம்பலூர்-திருவள்ளுவர் | |

6. திருவண்ணாமலை சம்புவராயர்
7. திருவாரூர் -ஏ.டி. பன்னீர்செல்வம்
8. எம்.ஜி.ஆர்.
9. இராஜாஜி
10. வைகை-வீரன் அழகு முத்து

— பரிசீலனையில் உள்ளது.

**(ஆ) வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் கட்டுதல்**

இம்மாநிலத்தில் 72 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் உள்ளன. இவற்றில், 59 அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் செயல்படுகின்றன. எஞ்சியுள்ள 13 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் செயல்படுகின்றன.

2. கீழே குறிப்பிட்டுள்ள வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் கட்டுவதற்கு நிருவாக ஒப்பளிப்பும் மற்றும் நிதி ஒதுக்கீடும் செய்து ஆணையிடப்பட்டுள்ளது :-

1. கள்ளக்குறிச்சி
2. திருச்செந்தூர்
3. லால்குடி
4. உடையார்பாளையம்

3. கீழே குறிப்பிட்டுள்ள வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் கட்டுவதற்கு, கட்டுமானப்பணி இந்த நிதியாண்டில் மேற்கொள்ளப்படும் :—

1. பெரம்பலூர்
2. திருச்செங்கோடு
3. மதுராந்தகம்
4. திருத்தணி
5. உத்தமபாளையம்
6. திருவாரூர்
7. குளித்தலை



**(இ) வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டுதல்**

195 வட்டாட்சியர் அலுவலகங்களில், 169 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் செயல்படுகின்றன. கோயம்புத்தூர் (வடக்கு) மற்றும் பல்லடம் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

கீழே குறிப்பிட்டுள்ள இடங்களில் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டுவதற்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது :—

1. முதுகுளத்தூர்
2. சங்கராபுரம்
3. போச்சம்பள்ளி
4. பாப்பிரெட்டிபட்டி
5. கமுதி
6. பேரையூர்
7. செந்துரை
8. குன்னம்
9. அரவக்குறிச்சி
10. செங்கோட்டை

எஞ்சியுள்ள 14 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய அலுவலகக் கட்டிடங்கள் விரைவில் கட்டித் தரப்படும்.

216650
D
V 2(1)3 N97
N97. 27-2

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.